# பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | சென்னை மாநகராட்சி | 39 |
| 3. | நகராட்சி நிர்வாக இயக்குநரகம் | 85 |
| 4. | பேரூராட்சிகள் இயக்குநரகம் | 193 |
| 5. | சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் | 221 |
| 6. | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் | 265 |
| 7. | தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம் | 313 |
| 8. | தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் | 345 |
| 9. | புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் | 389 |
| 10. | முடிவுரை | 391 |

# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2010 – 2011

## 1. முன்னுரை

நகர்மயமாதல் அசைக்கமுடியாத இடையறாத வளர்ச்சியின் அம்சம் என்பது உலகளாவிய ஓர் கருத்தாகும். தொழில் மற்றும் விவசாயப் புரட்சிகளுக்குப் பின், உறுதியான பெரும் மாற்றத்தின் அலைகளை உலகெங்கும் நகர்மயமாதல் ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவிலேயே அதிக அளவில் நகர் மயமாக்கப்பட்ட மாநிலம் தமிழ்நாடு ஆகும். இம்மாநிலம் நகர்மயமாதலில் முன்னணி மாநிலமாகத் திகழ்வதுடன், நகர்மயமாதலைத் தொடர்ந்து ஏற்படும் பல்வேறு சவால்களை எதிர் நோக்கும் வகையில், விரிவான மற்றும் வரும்முன் தடுக்கும் அணுகுமுறையினை ஆய்ந்து சீர்தூக்கி செயல்படுத்தி வருகிறது.

இந்த அணுகு முறை பன்முகங்களைக் கொண்டது. அதன் முக்கிய அம்சமாக மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் ஆற்றல்மிகு தலைமையிலான அரசின் பங்கு அமைந்துள்ளது.

இந்த அணுகுமுறையின் உந்துகை மற்றும் குறிக்கோள் காரணமாக 1992–ஆம் ஆண்டு இந்திய அரசமைப்புச் (74 ஆம் திருத்தச்) சட்டத்தின் நோக்கம் மற்றும் பிரிவுகளைப் பயன்படுத்தி, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் உறுதியான தன்னிறைவு பெற்ற தன்னாட்சி நிர்வாகத்தின் திறன்மிக்கத் தூண்களாகவும் அதிகாரம் கொண்ட அமைப்புகளாகவும் உருவாகியுள்ளன.

2001–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் நகர்ப்புரங்களின் மக்கள் தொகை 2.748 கோடியாகும். இது மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 44 சதவீதமாகும். தற்போது மாநிலத்தில் 10 மாநகராட்சிகளும், 148 நகராட்சிகளும், 561 பேரூராட்சிகளும் உள்ளன. இவை, நகர்ப்பகுதிகளின் அமைவிடங்களாகும்.

முக்கிய முயற்சிகளான குறிப்பிட்ட கால அளவிற்கொருமுறை நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தலை நடத்துவது, அடுத்தடுத்து மாநில நிதி ஆணையங்களை அமைப்பது, மாநிலங்களுக்குச் சொந்தமான நிதி ஆதாரங்களிலிருந்து இந்த அமைப்புகளுக்கு அதிகரிக்கப்பட்ட அளவில் நிதியினைப் பகிர்ந்தளிக்கும் செயல்பாடு, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு கணிசமான அளவிற்கு அதிகாரமளித்தல், அவற்றின் உள்கட்டமைப்பு வசதிகளுக்குத் தேவையான நிதி குறைபாட்டை நீக்கும்

வகையில் 3 சதவீதத் தொகையினை உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதிக்கு ஒதுக்கியது, இயக்கம் மற்றும் பராமரிப்புச் செலவுகளுக்குத் தேவையான குறைபாட்டை நீக்கும் வகையில், 2 சதவீதத் தொகையை இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நீக்கும் நிதிக்கு ஒதுக்கியது. நிர்வாக மட்டத்தில் போதிய அளவு அதிகாரப் பகிர்வு அளித்திருப்பது, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு, அளவிடற்கரிய பயன்தரும் கடன் நிவாரணத் திட்டத்தை செயல்படுத்தியது, காலி மனையிட வரி விதிப்பை சீராக்குதல் மற்றும் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் மனைகளை முறைப்படுத்துதல் போன்ற இவ்வரசின் உறுதியான நடவடிக்கைகள் வியத்தகு விடாமுயற்சிக்கு சான்றுகளாக விளங்குகின்றன.

இவை தவிர, முக்கிய அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், அரசு குடியுரிமைப் பணிகளை தரமுயர்த்துதல், நகர்ப்புரப் பகுதிகளில் வறுமை ஒழிப்பு, நகர்ப்புரப் பகுதிகளில் தொடர்ந்து சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல், பணிகளை திறம்பட செயலாக்குவதில் தனியார்–பொதுத் துறை கூட்டாண்மையை ஊக்குவித்தல் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவை நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான அரசின் உறுதியான முத்திரைப்பதிக்கும் செயல்பாடுகளாகும்.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தை செயல்படுத்தும் மாநிலங்களில், தமிழ்நாடு

தனது சீரிய செயல்பாட்டினால் தலைசிறந்த மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. முடிவடைந்த சில திட்டப்பணிகள், பிறர் பின்பற்றக்கூடிய வகையில் அடையாளச் சின்னங்களாக இருந்து வருகின்றன. இது தமிழ்நாட்டிற்கு கிடைத்துள்ள நியாயமான பெருமையாகும்.

முன்னோடித் திட்டமான, அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், 2007–08 ஆம் ஆண்டு முதல் படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் பயனாக, தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு பேரூராட்சியும், 2011 ஆம் ஆண்டிற்குள் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள், மழை நீர் வடிகால்கள்,குடிநீர் விநியோகத் திட்டங்களை செயல்படுத்துதல், மேம்படுத்தப்பட்ட அடிப்படை வசதிகளைக் கொண்ட பேருந்து நிலையங்கள் மற்றும் சுடுகாடுகள், சமுதாயக் கட்டடங்கள், தெரு விளக்குகள், பூங்காக்கள் மற்றும் அலுவலகக் கட்டடங்கள் போன்ற தரமான வசதிகளைப் பெற்றிருக்கும். இதே போன்றதொரு அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நிதி நிலையில் நலிவடைந்த 30 நகராட்சிகளிலும் 2008–09 ஆம் ஆண்டிலிருந்து சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நகர்ப்புரப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடன், இன்றியமையாத அடிப்படை கட்டமைப்பு வசதிகள், ஏழ்மை ஒழிப்பு, செயல்பாட்டு திறன் அதிகரிப்பு ஆகியவற்றிற்காக பல்வேறு மத்திய அரசுத் திட்டங்கள் மாநில மற்றும் அயல்நாட்டு நிதியுதவித் திட்டங்களை

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயல்படுத்தி வருகிறது.

நகராட்சி நிர்வாக இயக்குநரகம், பேரூராட்சிகள் இயக்குநரகம் மற்றும் சென்னை மாநகராட்சி ஆகியவை இத்துறையின் உள்ளார்ந்த அங்கங்களாகும்.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு குடிநீர்த் திட்டங்கள் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் போன்றச் சிறந்த திட்டங்களைச் செயல்படுத்தும் பணிகளில் இத்துறையின் அதிகார வரம்பிற்குட்பட்ட சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவை ஈடுபட்டு வருகின்றன.

இவை தவிர, தமிழ்நாடு நகர்ப்புரக் கட்டமைப்பு நிதிச் சேவைகள் நிறுவனம், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் மற்றும் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் ஆகிய நிறுவனங்களும் இத்துறையின் கீழ் இயங்கி வருகின்றன.

மேலும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்திற்கான மாநில அளவில், முகவர் நிறுவனமாக தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் திகழ்ந்து வருவதோடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை நிறைவு செய்வதற்குரிய ஒரு சிறந்த அமைப்பாகவும் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு

நகர்ப்புரக் கட்டமைப்பு நிதிச் சேவைகள் நிறுவனம் , நகர்ப்புரப் பகுதிகளுக்குத் தேவையான முதலீடுகளை ஒதுக்கித் தருகின்ற நிதி நிறுவனம் என்கிற வகையில் முக்கியப் பங்காற்றி வருகின்றது. இது உலக வங்கி, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதியம் (JICA) மற்றும் ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW) ஆகியவற்றிடமிருந்து பெறப்பட்ட கடன் தொகையினை இயக்கி வருகிறது.

## 1.1. அரசியலமைப்பு (74வது திருத்தச் ) சட்டம், 1992

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளை, அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகளின் அடிப்படையில், நிலைப்படுத்துவதில், **1992**–ஆம் ஆண்டு 74 வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் முக்கியமான முதல் முயற்சியாகும்.

**இதன் சிறப்பியல்புகள் பின்வருமாறு:**

(i) நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் கீழ்க்கண்ட நிலையானப் பணிகளை உள்ளடக்கிய **12**–வது அட்டவணை சேர்க்கப்பட்டது

1. நகர அமைப்பு உட்பட நகரத் திட்டமிடல்
2. நிலப்பயன்பாடு ஒழுங்குபடுத்துதல் மற்றும் கட்டடங்கள் கட்டுதல்
3. பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்–திற்காகத் திட்டமிடல்

4. சாலைகள் மற்றும் பாலங்கள் அமைத்தல்

5. வீடு, தொழிற்சாலை மற்றும் வணிகக் காரணங்களுக்காக குடிநீர் விநியோகம்.

6. பொதுச் சுகாதாரம், துப்புரவு மற்றும் பாதுகாப்பு, குப்பைக் கழிவுகள் மேலாண்மை

7. தீயணைப்புப் பணிகள்

8. நகரக்காடு வளர்ப்பு, சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல், சுற்றுச்சூழல் மேம்பாடு

9. மாற்றுத் திறனாளிகள், மனநலம் குன்றியோர் உட்பட நலிந்த பிரிவினர் நலன் பாதுகாப்பு

10. குடிசைப்பகுதி மேம்பாடு மற்றும் வசதிகளை மேம்படுத்துதல்

11. நகர்ப்புர வறுமை ஒழிப்பு

12. பூங்காக்கள், தோட்டங்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் போன்ற நகர்ப்புர வசதிகளை மேம்பாடு செய்தல்

13. கல்வி, கலை, கலாச்சார மேம்பாடு மற்றும் அழகுணர்வு மேம்பாடு

14. இடுகாடு, சுடுகாடு மற்றும் மின்சாரச் சுடுகாடு அமைத்தல் மற்றும் பராமரித்தல்

15. கால்நடைப் பவுண்டுகள் மற்றும் மிருகவதைத் தடுத்தல்

16. பிறப்பு, இறப்புப் பதிவு உட்பட முக்கிய புள்ளி விவரங்கள் பராமரித்தல்

17. தெரு விளக்கு வசதிகள், வாகனம் நிறுத்துமிடங்கள், பேருந்து நிறுத்தங்கள், பொதுக் கழிப்பறைகள் உட்பட பொது மக்களுக்கான வசதிகள் செய்தல்

18. ஆடு மாடுகள் அறுக்கும் இடங்கள் மற்றும் தோல் பதனிடும் இடங்களை ஒழுங்குபடுத்துதல்.

(ii) ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களை கட்டாயமாக நடத்துவது, மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர், அல்லது கலைக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாத காலம் முடிவதற்கு முன்னர் தேர்தல்களை நடத்துவது

(iii) நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிதியாதாரங்களை வரையறை செய்தல், அவற்றை காலமுறை அடிப்படையில், சட்டப்பூர்வமாக அமைக்கப்பட்ட மாநில நிதி ஆணையங்களால் சீராய்வு செய்தல் ஆகியவற்றை சட்டத்தின் மூலம்

அறுதியிடுவது, மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதியுதவி செய்வதற்கென மாநில அரசின் நிதியாதாரங்களை பெருக்குவதற்கான வழிமுறைகளை பரிந்துரைப்பதை, மத்திய நிதி ஆணையங்களுக்குக் கட்டாயமாக்குதல்

(iv) நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கென, அம்மக்கள் தொகைக்கு ஏற்ற விதிதாச்சாரத்தில், வார்டு உறுப்பினர்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களில் (தலைவர்கள்/ மேயர்கள்) இடஒதுக்கீட்டை அறிமுகம் செய்தல் மற்றும் இடஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டு உறுப்பினர்கள் மற்றும் தலைமைப் பதவிகளில் சுழற்சி முறைக்கான வகைமுறைகளை ஏற்படுத்துதல்

(v) சுழற்சி முறைக்கான வகைமுறைகளுடன் கூடிய, வார்டு உறுப்பினர்கள் மற்றும் தலைமைப் பதவிகளில், பெண்களுக்கென, மொத்த எண்ணிக்கையில், மூன்றில் ஒரு பங்கிற்குக் குறையாத இடஒதுக்கீட்டை அறிமுகம் செய்தல்

(vi) நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை சட்டத்தின் வாயிலாக வரையறை செய்தல்.

இதனைத் தொடர்ந்து, இணைக்கச் சட்டங்கள் – 1994–ஆம் ஆண்டு தமிழ் நாடு சட்டங்கள் 24 மற்றும் 25 இயற்றப்பட்டன. அரசியலமைப்புச் சட்டத்தின் 74–வது திருத்தச் சட்டத்தின் வகைமுறைகள் ஒருங்கிணைக்கப்பட்டு, இம்மாநிலத்தின் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான சட்டங்களில் சேர்க்கப்பட்டன.

## 1.2 2006–ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தல்கள்

74–வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர், இம்மாநிலத்தில், உள்ளாட்சி அமைப்புகளுக்கு 3 சாதாரணத் தேர்தல்கள் நடத்தப்–பட்டுள்ளன. நகர்ப்புர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு முதல் சாதாரணத் தேர்தல்கள், 1996–ஆம் ஆண்டு நடத்தப்பட்டன. உள்ளாட்சி அமைப்புகளுக்கு இரண்டாவது சாதாரணத் தேர்தல்கள், அக்டோபர் மாதம் 2001–ல் நடத்தப்பட்டன. மூன்றாவது சாதாரணத் தேர்தல்கள், அக்டோபர் மாதம் 2006–ல் நடைபெற்று, அவற்றின் முடிவுகளின் அடிப்படையில், உள்ளாட்சி அமைப்புகளின் தற்போதைய மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

2006–ஆம் ஆண்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களைப் பொறுத்தவரையில், அரசு, 2001–ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் வார்டு வாரியான கணக்கெடுப்பு விவரங்கள் அப்போதுதான்

பெறப்பட்டிருந்த நிலையில், புதிதாக வார்டுகளைப் பிரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டால் குறித்த காலத்தில் தேர்தல்கள் நடத்தப்பட இயலாதெனக் கருதியது. எனவே, அரசு, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரணத் தேர்தல்களை ஏற்கனவே இருந்த கோட்டங்களின் அல்லது வார்டுகளின் அளவுப்படியும் வார்டுகளின் மொத்த எண்ணிக்கை மற்றும் கோட்டங்கள் அல்லது வார்டுகளிலிருந்து தேர்ந்தெடுத்து அனுப்பப்பட வேண்டிய மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையிலும் நடத்துவதென முடிவு செய்தது. இதனடிப்படையில், இம்மாநிலத்தின் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான சட்டங்களில் சிறப்புப் பகுதிகள் சேர்க்கப்பட்டன.

**நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் வார்டுகள் மற்றும் பதவியிடங்களின் விவரங்கள் பின்வருமாறு:**

**வார்டுகள்**

| | | |
|---|---|---|
| 1. | மாநகராட்சி வார்டுகள் | 474 |
| 2. | சென்னை மாநகராட்சி வார்டுகள் | 155 |
| 3. | நகராட்சி வார்டுகள் | 3392 |
| 4. | மூன்றாம் நிலை நகராட்சி வார்டுகள் | 987 |
| 5. | பேரூராட்சி வார்டுகள் | 8807 |
| | **மொத்தம்** | **14534** |

**பதவியிடங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | மாநகராட்சியின் மேயர்கள் | 06 |
| 2. | நகராட்சித் தலைவர்கள் | 102 |
| 3. | மூன்றாம் நிலை நகராட்சித் தலைவர்கள் | 50 |
| 4. | பேரூராட்சித் தலைவர்கள் | 561 |
| | **மொத்தம்** | **719** |

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், 2006–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம், அனைத்து வார்டுகளுக்கும், அதாவது 155 வார்டுகளுக்கும் சாதாரணத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. பின்னர், 99 மன்ற உறுப்பினர்கள் பதவி விலகியதையடுத்து, காலியிடங்களுக்கு, 2007–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தேர்தல்கள் நடத்தப்பட்டன.

### 1.2.1 வார்டுகள் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கான இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 243T கூறின்படி, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் உறுப்பினர் மற்றும் தலைமைப் பதவியிடங்களில் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்படுவது கட்டாயமாகும். இது குறித்து, நகராட்சிகளைப் பொறுத்தவரையில், 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் பிரிவு 7 தக்கப் பகுதிகளைக் கொண்டிருக்கிறது. இதே போன்றப் பகுதிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள் மற்றும்

பேரூராட்சிகளைப் பொறுத்தவரையிலும் கூட மேற்சொன்னச் சட்டத்தில் உள்ளன. மாநகராட்சிகளைப் பொறுத்தவரையில், தொடர்புடைய மாநகராட்சிச் சட்டங்களில் பிரிவுகள் உள்ளன. வார்டுகள் மற்றும் தலைமைப் பதவியிடங்களில் இடஒதுக்கீடு முறையைப் பின்பற்றுவது குறித்து 1996–ஆம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் (வார்டுகள் அல்லது மண்டலங்கள் பிரித்தல் மற்றும் இட ஒதுக்கீடு) விதிகளில் விளக்கப்பட்டுள்ளன.

2006–ஆம் ஆண்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கானத் தேர்தல்களைப் பொறுத்தவரையில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவியிடங்களைப் பொறுத்தவரையில் மட்டும் சுழற்சி முறையை பின்பற்றுவதென அரசு முடிவு செய்தது. வார்டுகளைப் பொறுத்தவரையில், அரசு, பெண்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களுக்கு மட்டும் சுழற்சி முறையைப் பின்பற்றுவதென முடிவு செய்தது. மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களைப் பொறுத்தவரையில், 2001–ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு விவரங்களைக் கடைப்பிடிப்பதால் ஏற்படக்கூடிய ஏதேனும் சிறிய அளவிலான மாற்றங்களுக்குட்பட்டு, ஏற்கனவே இருந்த நிலையையே தொடர்ந்து கடைப்பிடிப்பதெனவும் அரசால் முடிவு செய்யப்பட்டது.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டுகள் மற்றும் பதவியிடங்கள் குறித்த விவரங்கள் கீழ்க்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| வ. எண் | இடஒதுக்கீடு வகை | வார்டுகள்/ பதவி–யிடங்–களின் மொத்த எண்–ணிக்கை | பெண் களுக்கு ஒதுக்கீடு செய்யப் பட்டவை (ஆதி திராவிடர்/ பழங்–குடியினர் தவிர) | ரூ | ஆதிதிராவிடர் களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டவை | | | | பழங்குடி யினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டவை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பொது | ரூ | பெ | ரூ | பொ | ரூ | பெ | ரூ |
| 1 | மாநகராட்சி மேயர்கள் | 6 | 1 | 17 | 0 | 0 | 1 | 17 | – | – | – | – |
| 2 | நகராட்சித் தலைவர்கள் | 102 | 30 | 29 | 7 | 7 | 4 | 4 | – | – | – | – |
| 3 | மூன்றாம் நிலை நகராட்சித் தலைவர்கள் | 50 | 14 | 28 | 4 | 8 | 3 | 6 | – | – | – | – |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | பேரூராட்சித் தலைவர்கள் | 561 | 156 | 28 | 59 | 11 | 30 | 5 | 2 | 0.36 | 1 | – |
| 5 | மாநகராட்சி வார்டுகள் | 474 | 140 | 30 | 32 | 7 | 19 | 4 | – | – | – | – |
| 6 | சென்னை மாநகராட்சி வார்டுகள் | 155 | 45 | 29 | 14 | 9 | 7 | 5 | – | – | – | – |
| 7 | நகராட்சி வார்டுகள் | 3392 | 967 | 29 | 222 | 7 | 164 | 5 | – | – | – | – |
| 8 | மூன்றாம் நிலை நகராட்சி வார்டுகள் | 987 | 262 | 27 | 73 | 7 | 64 | 6 | – | – | – | – |
| 9 | பேரூராட்சி வார்டுகள் | 8807 | 2207 | 25 | 787 | 9 | 707 | 8 | 3 | – | 21 | – |
| | மொத்தம் | 14534 | 3822 | 26 | 1198 | 8 | 999 | 7 | 5 | – | – | – |

## 1.3 நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள்

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்களுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் அதிக அளவில் பெறப்பட்டு வந்ததால்,

நம்பிக்கையில்லாத் தீர்மானங்களைக் கொண்டு வருவதும் நிறைவேற்றுவதும் மக்களாட்சி உரிமையென ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தாலும் கூட அவ்வுரிமையை அடிக்கடி செயல்படுத்துவதும், தவறாகப் பயன்படுத்துகிற போக்கும், மக்களாட்சித் தத்துவத்திற்கே மிகுந்த சீர்க்கேட்டை விளைவிக்கும் என அரசு கருதியது.

இம்மாதிரியான விரும்பத்தகாத வகையிலான போக்கினை கட்டுப்படுத்துவதற்கு, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பான சட்டப்பிரிவுகளில், தக்க திருத்தங்கள் மேற்கொள்வதன் மூலம், வகைமுறைகளை கடுமையாக்க அரசு முடிவு செய்தது.

இதற்கிணங்க, ஒரு அவசரச் சட்டம், அதாவது, 2007–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 5/ 2007), 4.10.2007 அன்று கொண்டுவரப்பட்டு, பின்னர் 2007–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி (திருத்தச்) சட்டமாக (தமிழ்நாடு சட்டம் 37/2007) நிறைவேற்றப்பட்டது.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கான அறிவிப்பை அளிக்கத்தேவையான, 'ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையில் ஒரு பாதிக்கும் குறையாமல்', என்ற அளவிலிருந்து 'ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையில் ஐந்தில் மூன்று பங்கிற்குக் குறையாமல்', என்ற அளவிற்கு அதிகரிக்கப்பட்டது. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்ற, 'ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையில்

ஐந்தில் மூன்று பங்கிற்குக் குறையாமல்', என்ற அளவிலிருந்து 'ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையில் ஐந்தில் நான்கு பங்கிற்கு குறையாமல்', என்ற அளவிற்கு அதிகரிக்கப்பட்டது. மேலும் நிறைவேற்றப்படாத நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கும், அதே தலைவர் / துணைத் தலைவர் / மேயர் / துணை மேயர் மீது, மீண்டும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கான கால இடைவெளியானது, 'ஆறு மாதம்' என்ற அளவிலிருந்து 'ஒரு வருடம்', என்று அதிகரிக்கப்பட்டது. நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கான அறிவிப்பு, ஒரு தலைவர்/துணைத் தலைவர்/ மேயர்/துணை மேயர், பதவியேற்றத்திலிருந்து, ஓர் ஆண்டு காலத்திற்குள் அல்லது அவர்களின் பதவிக்கால அளவின் கடைசி ஆண்டின்போது பெற்றுக்கொள்ளப்படுதல் கூடாது என்றும் வரையறுக்கப்பட்டது. இச்சட்டத் திருத்தம், தேர்ந்தெடுக்கப்பட்ட பல பிரதிநிதிகளின் பதவிக்காலத்தை, தொடர்ந்து, நிலைத்து, நீடிக்க வகை செய்ததில் பெரும்பங்கு வகிக்கிறது.

## 1.4 அதிகாரப் பகிர்வு

உள்ளூர் தன்னாட்சி என்பது, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 7–வது அட்டவணையின், இரண்டாவது பட்டியலில், ஐந்தாவதாக இடம் பெற்றுள்ள, மாநில அரசுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பொருளாகும். இந்திய அரசமைப்பின் 243W கூறு, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரப் பகிர்வு செய்வது குறித்த அடிப்படை கொள்கைகளைக்

குறித்துரைக்கிறது. இக்கூறின்படி, அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுகளுக்குட்பட்டு, மாநில சட்டப்பேரவை, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள், தன்னாட்சி நிறுவனங்களாகச் செயல்படுவதற்கு ஏதுவான அதிகாரங்களையும், பொறுப்புகளையும் சட்டத்தின் வாயிலாக அளிக்கலாம். அத்தகையச் சட்டம், அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, பொருளாதார, சமூக நீதிக்கானத் திட்டங்களை வகுத்தல், பன்னிரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்கள் தொடர்பானவை உள்ளிட்ட, அவற்றிற்கு அளிக்கப்படக்கூடிய பணிகளைச் செய்வதற்கு மற்றும் திட்டங்களை செயல்படுத்துவதற்கு, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேவையான அதிகாரங்களையும், பொறுப்புகளையும் பகிர்வு செய்வதற்கான வகைமுறைகளைக் கொண்டிருக்கலாம்.

இவ்வரசு, ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு மேலும் அதிகாரங்களையும், பொறுப்புகளையும், பகிர்வு செய்வதற்கான அதன் உறுதியின் தொடர்ச்சியாக, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசாணை (நிலை) எண் 6, நாள் 22.1.2007–ல், மூன்றாவது உயர்நிலைக் குழுவை அமைத்து ஆணைகளை வெளியிட்டது. இக்குழு, ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ள கடமைகள், பணிகள் மற்றும் அதிகாரங்களை ஆராய்ந்து, உள்ளாட்சி அமைப்புகள், மேலும் திறம்பட செயல்படுவதற்குத் தேவையான கூடுதல் கடமைகள்,

பணிகள் மற்றும் அதிகாரங்களைப் பகிர்வு செய்வதற்கான பரிந்துரைகளை அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

இக்குழு, சீரிய மற்றும் உள்ளார்ந்த விவாதங்களின் அடிப்படையில் பரிந்துரைகளை இறுதி, செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் 10.12.2007 அன்று அளித்தது.

நிர்வாகம் மற்றும் தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கான, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பல்வேறு அதிகாரமைப்புகளின் அதிகாரங்களை கணிசமாக உயர்த்துதல், நகராட்சிகள் மற்றும் சில மாநகராட்சிகளின் கடனைத் தள்ளுபடி செய்தல், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட வேண்டிய மாநில நிதிப் பகிர்வு நிலுவைத் தொகையை விடுவித்தல், நகர்ப்புர உள்ளாட்சிப் பணியாளர்கள் தொடர்பான வரம்புகளை நிர்ணயம் செய்ய குழுவொன்றை அமைத்தல், காலிமனையிட வரி விதிப்பை சீரமைத்தல் உள்ளிட்டவை, குழுவின் மிக முக்கியமான பரிந்துரைகளில் அடங்கும்.

குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையிலான மிக முக்கியமான விளைவு, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான கடன் நிவாரணமாகும். நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை (நிலை) எண் 149, நாள் 9.11.2007–ல், 102 நகராட்சிகள் மற்றும் 5 மாநகராட்சிகள், அரசுக்குச் செலுத்த வேண்டிய, 31.3.2007 அன்றைய நிலவரப்படி ஒருங்கிணைக்கப்பட்ட கடன் நிலுவைத் தொகை,

ரூ. 787.41 கோடியை தள்ளுபடி செய்து ஆணையிடப்பட்டது. இம்முடிவு, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளை முடக்கி வந்த கடன் சுமையிலிருந்து அவற்றை விடுவிப்பதற்கான மிகுத்த தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாகும். இது, வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்துவதற்கென பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் நிதி உதவி பெறுவதற்கும் வழிவகை செய்துள்ளது.

## 1.5 மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகள்

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 243Y கூறின்படி நகராட்சிகளின் நிதி நிலையை மறு ஆய்வு செய்வதற்கு நிதி ஆணையம் கூறு 243–I ன்படி அமைக்கப்பட்டது. அது கீழ்க்காணும் இனங்கள் மீது பரிந்துரைகளை வழங்கும்

(i) மாநில அரசிற்கும், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்குமிடையே பிரித்தளிக்கப்படக் கூடிய, மாநில அரசால் விதிக்கப்படும் வரிகள், தீர்வைகள், சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றின் மூலம் பெறப்படும் நிகர வருவாயை, மாநில அரசிற்கும், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்குமிடையே பகிர்ந்தளித்தல் மற்றும் அத்தகைய வருவாயை நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் எல்லா நிலைகளுக்கும் அவற்றின் பங்குகளின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்தல்

(ii) நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளால் வசூலிக்கப்படக்கூடிய வரிகள், தீர்வைகள், சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை நிர்ணயித்தல்

(iii) மாநிலத்தின் தொகுப்பு நிதியிலிருந்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படக்கூடிய மானிய நிதியுதவிகளை நிர்ணயித்தல்

(iv) நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிதிநிலையை உயர்த்துவதற்கு தேவையான வழிமுறைகளைக் கண்டறிதல், மற்றும்

(v) நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிதி மேம்பாடு தொடர்பாக நிதி ஆணையத்திடம் அளிக்கப்படும் வேறு எந்தவொரு பொருள்

மாநில மூன்றாவது நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் மாநிலத்தின் சொந்த வருவாயிலிருந்து ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதலான பங்கு அளிக்கப்படுகிறது. இது, **2007–2008** மற்றும் **2008–2009–ஆம்** ஆண்டுகளுக்கு **9** விழுக்காடாகும். **(2006–2007–ஆம்** ஆண்டு வரை **8** விழுக்காடாக இருந்தது). நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு, **2009–2010–ஆம்** ஆண்டிற்கு, அரசு, இவ்வொதுக்கீட்டை மாநிலத்தின் சொந்த வருவாயில் **9.5** விழுக்காடாக உயர்த்தி வழங்கியுள்ளது. மூன்றாவது மாநில நிதி

ஆணையத்தின் பரிந்துரைக் காலத்திற்கு பகிர்வு விழுக்காடு, படிப்படியாக 10 விழுக்காடு அளவிற்கு கீழ்க்கண்டவாறு உயர்த்தப்படும்.

| | |
|---|---|
| 2007–08 | 9% |
| 2008–09 | 9% |
| 2009–10 | 9.5% |
| 2010–11 | 10% |
| 2011–12 | 10% |

நகர்ப்புர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையேயான பங்கீடு முன்பிருந்தவாறே 42:58 ஆகும். நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தவரையில் கிடைநிலையில் (horizontal) அவற்றிற்கிடையேயான பங்கீடு பின்வருமாறு:

| | |
|---|---|
| மாநகராட்சிகள் | 30% |
| நகராட்சிகள் | 41% |
| பேரூராட்சிகள் | 29% |

## 2006–2007 முதல் 2009–2010 வரை பகிர்வு செய்யப்பட்டத் தொகை

| | நகராட்சிகள் | மா நகராட்சிகள் | பேரூராட்சிகள் | பகிர்வு விழுக்காடு |
|---|---|---|---|---|
| (ரூபாய் கோடியில்) | | | | |
| 2006–2007 (மாநில நிதி ஆணையம் -II) | 363.08 | 274.94 | 248.88 | 8.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2007–2008 (மாநில நிதி ஆணையம் -III) | 471.64 | 345.11 | 316.92 | 9.00 |
| 2008–2009 (மாநில நிதி ஆணையம் -III) | 509.60 | 372.89 | 342.43 | 9.00 |
| 2009–2010 (மாநில நிதி ஆணையம் -III) | 569.82 | 416.95 | 382.89 | 9.50 |

## உள்கட்டமைப்பு பற்றாக்குறை ஈடுசெய்யும் நிதி

<table>
<tr><th></th><th>நகராட்சிகள்</th><th>மாநகராட்சி–கள்</th><th>பேரூராட்சிகள்</th><th>பகிர்வு சதவீதம்</th></tr>
<tr><td colspan="5">(ரூபாய் கோடியில்)</td></tr>
<tr><td>2007–2008 (மாநில நிதி ஆணையம் -III)</td><td>14.15</td><td>10.35</td><td>10.01</td><td rowspan="3">பகிர்வுத் தொகையில் 3 விழுக்காடு</td></tr>
<tr><td>2008–2009 (மாநில நிதி ஆணையம் -III)</td><td>15.29</td><td>11.19</td><td>10.81</td></tr>
<tr><td>2009–2010 (மாநில நிதி ஆணையம் -III)</td><td>17.09</td><td>12.51</td><td>12.09</td></tr>
</table>

**இயக்கம் மற்றும் பராமரிப்புப் பற்றாக்குறை ஈடுசெய்யும் நிதி**

| | நகராட்சிகள் | மாநகராட்சி–கள் | பேரூராட்சிகள் | பகிர்வு சதவீதம் |
|---|---|---|---|---|
| (ரூபாய் கோடியில்) | | | | |
| 2007–2008 (மாநில நிதி ஆணையம் -III) | 9.43 | 6.90 | 6.67 | பகிர்வுத் தொகையில் 2 சதவீதம் |
| 2008–2009 (மாநில நிதி ஆணையம் -III) | 10.19 | 7.46 | 7.21 | |
| 2009–2010 (மாநில நிதி ஆணையம் -III) | 11.40 | 8.34 | 8.06 | |

அரசு, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் நிதி நிலையை ஆராயவும் மற்றும் தக்க பரிந்துரைகளை அளிக்கவும், அரசாணை எண் 549, நிதித்துறை (எப்சி–IV) நாள் 1.12.2009–ல் நான்காவது மாநில நிதி ஆணையத்தை அமைத்துள்ளது.

## 1.6 மத்திய நிதி ஆணையத்தின் பரிந்துரைகள்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முக்கிய அம்சமான மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு நிதி ஆதாரங்களை மாற்றுவதற்கான அமைப்பை ஏற்படுத்துவதற்கான வழிமுறைகளைக் கொண்டுள்ளதாகும்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 280–ஆம் கூறின்படி, இப்பணியினை மேற்கொள்வதற்கான அமைப்பு ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளும் முடிவுற்றவுடன் அல்லது அதற்கு முன்னதாகவே அமைக்கப்படும் நிதி ஆணையமாகும்.

அரசியலமைப்புச் சட்டத்தின்படி நிதி ஆணையத்தின் முக்கியக் கடமைகள் பின்வருமாறு:

1. மத்திய மாநில அரசுகளுக்கிடையே பிரித்தளிக்கப்படக்கூடிய, மொத்த வரி வருவாய், மற்றும் அத்தகைய வருவாயை மாநிலங்களுக்கிடையே அவற்றின் பங்குகளின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்தல்

2. அத்தகைய உதவி தேவைப்படும் மாநிலங்களுக்கு மானியம் வழங்குவது குறித்த கொள்கைகள் மற்றும் தொகைகளை நிர்ணயம் செய்தல்

3. மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில், மாநிலங்களில் உள்ள ஊராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் வருவாயை அதிகரிக்க மாநில அரசின் தொகுப்பு நிதியை அதிகரித்தல்

ஊராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு சட்டப்பூர்வ நிலையினை வழங்கும் பொருட்டு 1992ம் ஆண்டு

நிறைவேற்றப்பட்ட 73 மற்றும் 74–வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டங்களின்படி மேற்குறிப்பிடப்பட்டுள்ள கடைசி இனம் சேர்க்கப்பட்டது.

12–வது மத்திய நிதிக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 2005–2006 முதல் 2009–2010 –ஆம் ஆண்டு வரை மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு ரூ.411.50 கோடியும், பேரூராட்சிகளுக்கு ரூ. 160.50 கோடியும் விடுவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு விடுவிக்கப்பட்டத் தொகை, திடக்கழிவு மேலாண்மை, சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல், மின்சாரக் கட்டண நிலுவையைச் செலுத்துதல் மற்றும் இதர இனங்களுக்கு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளால் பயன்படுத்தப்பட்டது.

**நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஆண்டு வாரியான நிதி ஒதுக்கீடு பற்றிய விவரம் கீழே தரப்பட்டுள்ளது:**

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | சென்னை மாநகராட்சி | இதர மாநக–ராட்சிகள் | நகராட்சிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2005–06 | 19.10 | 16.36 | 46.84 | 82.30 |
| 2006–07 | 19.10 | 16.36 | 46.84 | 82.30 |
| 2007–08 | 19.10 | 16.36 | 46.84 | 82.30 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2008–09 | 19.10 | 16.36 | 46.84 | 82.30 |
| 2009–10 | 19.10 | 16.36 | 46.84 | 82.30 |
| **மொத்தம்** | **95.50** | **81.80** | **234.20** | **411.50** |

**பேரூராட்சிகள்**

| ஆண்டு | ரூபாய் கோடியில் |
|---|---|
| 2005–06 | 32.10 |
| 2006–07 | 32.10 |
| 2007–08 | 32.10 |
| 2008–09 | 32.10 |
| 2009–10 | 32.10 |
| மொத்தம் | 160.50 |

## 1.7 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான கேளிக்கை வரி வருவாய் இழப்பீடு ஈடுசெய்யும் நிதி உருவாக்கம்

திரைப்படத் தொழிலினை ஊக்குவிக்கும் வகையிலும், தமிழ்மொழியினை வளர்க்கும் வகையிலும், தமிழில் பெயர் சூட்டப்படும் அனைத்துத் திரைப்படங்களுக்கும் கேளிக்கை வரியிலிருந்து முழுவதுமாக விலக்களிக்கப்படும் என அரசால் அறிவிப்பு ஒன்று வெளியிடப்பட்டது. இவ்வறிவிப்பு **2006–2007–**ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்டது.

2 இவ்வறிவிப்பினைச் செயல்படுத்தும் விதமாக அரசாணை நிலை எண் 72, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள், 22.7.2006–ல் ஆணைகள் வெளியிடப்பட்டன. இதன் விளைவாக நகர்ப்புர உள்ளாட்சியமைப்புகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடு செய்ய அரசால் முடிவெடுக்கப்பட்டது. அதன்படி, 2007–2008 ஆம் ஆண்டு முதல், நகர்ப்புர உள்ளாட்சியமைப்புகளுக்குக் கேளிக்கை வரி வருவாய் இழப்பீடு ஈடு செய்யும் நிதியாக, ரூ.27.00 கோடி வணிக வரி மற்றும் பதிவுத் துறை வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

3. இந்நிதி, தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் கட்டமைப்பு நிறுவனத்தால் நிர்வகிக்கப்பட வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது. இந்நிதியின் மதிப்பீடு, மற்றும் கட்டுப்பாட்டு அலுவலராக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச்செயலர் செயல்படுகிறார். இந்நிதி, அரசின் விருப்பத்திற்கேற்ப நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் மிக முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பான மற்றும் புதுமையானப் பணிகளை மேற்கொள்ள வழங்கப்படுகிறது.

இது பல சிறப்பு வாய்ந்த திட்டங்களுக்கு நிதியுதவி வழங்க ஏதுவான ஒரு பாராட்டுதற்குரிய முயற்சியாக அமைகிறது. அவ்வாறு இந்நிதியின் கீழ் நிதியுதவியளிக்கப்பட்டுள்ள முக்கிய திட்டங்களில் சில பின்வருமாறு:

(i) சென்னை மாநகராட்சியின் மகுடத்திற்கு மேலும் அணி சேர்க்கும் வகையில் தண்டையார்பேட்டையிலுள்ள தொற்றுநோய் மருத்துவமனையை புதுப்பொலிவுடன் சீரமைத்தல்

(ii) தூத்துக்குடி மாநகராட்சியில் உள்ள பக்கிள் ஓடையை சீரமைத்தல்

(iii) பொருளாதார நிலையில் நலிவடைந்துள்ள 30 நகராட்சிகளுக்கு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினைச் செயல்படுத்த நிதி ஒதுக்கீடு

(iv) நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள மண் சாலைகளை தார்ச்சாலைகள் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாக மாற்றும் திட்டத்தை மிகப் பெரிய அளவில் செயல்படுத்துதல்.

## 1.8 சில மாநகராட்சிகளை உருவாக்குதல் மற்றும் விரிவாக்குதல்

தரமான கட்டமைப்பு மற்றும் உள்ளாட்சிகளால் வழங்கப்படும் சேவைகள் குறித்த அதிகரித்து வரும் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்பட வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, அரசு கடந்த நான்காண்டுகளில், திருப்பூர், ஈரோடு, வேலூர் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சிகளை அமைத்துள்ளது. மேலும், சென்னை மாநகராட்சியின் எல்லைகளை விரிவாக்கியுள்ளது.

அரசின் நன்கு சிந்தித்து எடுக்கப்பட்ட இம்முடிவுகள், இந்நகர்ப்புர கூட்டமைவுகளைப் பொறுத்த வரையில், உள்ளாட்சிகளால் வழங்கப்படும் சேவைகள், மற்றும் ஒட்டுமொத்த தொழில், வணிகத் துறைகள் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை (நிலை) எண்.256, நாள் 26.12.2009–ல், எட்டு சட்டமன்றத் தொகுதிகளில் அமைந்துள்ள, ஒன்பது நகராட்சிகள், எட்டு பேரூராட்சிகள், இருபத்தைந்து ஊராட்சிகள் ஆகியவற்றை சென்னை மாநகராட்சியின் எல்லைகளுக்குள் கொண்டு வருவதென்ற அரசின் முடிவு அறிவிக்கப்பட்டது. இந்த விரிவாக்கம், தற்போதைய உள்ளாட்சி அமைப்புகளின் பதவிக்காலம் முடிவடைந்தவுடன், 2011–ஆம் ஆண்டு செயலுக்கு வரும்.

அரசு, இதே போன்று, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணைகள், (நிலை) எண்.50,51,52 மற்றும் 53, நாள், 17.3.2010–ல், சமீபத்தில் அமைக்கப்பட்ட திருப்பூர், ஈரோடு, வேலூர் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சிகளுடன் இணைக்கப்படும் உள்ளாட்சிகள் குறித்து, ஆணைகளை வெளியிட்டுள்ளது.

திருப்பூர் மாநகராட்சியுடன், மூன்று மூன்றாம் நிலை நகராட்சிகள் மற்றும் எட்டு ஊராட்சிகள் ஆகியவற்றை இணைத்து விரிவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஈரோடு மாநகராட்சியைப் பொறுத்தவரையில், நான்கு மூன்றாம் நிலை நகராட்சிகள், இரண்டு பேரூராட்சிகள், ஐந்து ஊராட்சிகள் ஆகியன இணைக்கப்படவுள்ளன. வேலூர் மாநகராட்சியுடன், மூன்று மூன்றாம் நிலை நகராட்சிகள், எட்டு பேரூராட்சிகள், அறுபத்தியொரு ஊராட்சிகள் ஆகியன இணைக்கப்படவுள்ளன. தூத்துக்குடி மாநகராட்சியுடன் அருகாமையிலுள்ள பத்து ஊராட்சிகளை இணைத்து அம்மாநகராட்சி விரிவாக்கப்படவுள்ளது.

உத்தேசிக்கப்பட்டுள்ள விரிவாக்கம் அனைத்தும், தற்போதைய உள்ளாட்சி அமைப்புகளின் பதவிக்காலம் முடிவடைந்தவுடன், 2011–ஆம் ஆண்டு நடைமுறைக்கு வரும்.

இந்நிலையில், இம்முடிவுகள், நீண்ட கால தாக்கத்தை ஏற்படுத்துமெனவும், மிக முக்கியத்துவம் வாய்ந்தவையெனவும்,

இப்பகுதிகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக அமையும் எனவும் குறிப்பிடுவது பொருத்தமாகும்.

உத்தேசிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு மாநகராட்சிக்கும் சிறப்பு அதிகாரிநியமிக்கப்பட்டு,வார்டுபிரித்தல்மற்றும்தொடர்புடையப் பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## 1.9 அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை முறைப்படுத்துதல்

அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் வாழும் மக்களின் தேவையான அடிப்படை வசதிகளை நிறைவேற்ற முடியாமல் தொடர்ந்து பல ஆண்டுகளாக நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் பிரச்சனைகளை எதிர்கொண்டு வந்தன. அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள், அடிப்படை வசதிகளை செய்து தர 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் சட்டங்களில் வழி வகை செய்யப்படவில்லை.

மனைப்பிரிவுகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட திறந்த வெளிக்கட்டணம், மேம்பாட்டுக் கட்டணம் மற்றும் முறைப்படுத்துதல் கட்டணம் ஆகியவற்றின் தொகைகளில் வித்தியாசம் இருந்ததால் இப்பிரச்சனையை முடிவுக்குக் கொண்டு வர எடுக்கப்பட்ட ஒவ்வொரு நடவடிக்கையும் தோல்வியில் முடிவுற்றது.

விரிவான விவாதத்திற்குப் பின்னர், இப்பிரச்சனையைக் கருத்தில் கொண்டு இது சம்பந்தமாக தீர்வு காண அவசியம் ஏற்பட்டதால் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை முறைப்படுவதற்கு ஒரு எளிதானக் கட்டணம் ஒரே தவணையில் செலுத்தப்படலாம் என அரசு முடிவு செய்தது.

அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை முறைப்படுத்தலாம் என அரசாணை (நிலை) எண்.59 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 25.07.2006ல் ஆணைகள் வெளியிடப்பட்டன. அதற்குரிய வழிகாட்டி நெறிமுறைகளும் வெளியிடப்பட்டன. மேலும் ஒரே தவணையில் முறைப்படுத்துதல் கட்டணத்தை கீழ்க்கண்டவாறு வசூலிக்கலாம் எனவும் ஆணையிடப்பட்டது.

| வ.எண் | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் | ஒரு சதுர அடிக்கு |
|---|---|---|
| 1. | மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) | ரூ 5 |
| 2. | நகராட்சிகள் | ரூ 2 |
| 3. | பேரூராட்சிகள் | ரூ 1 |

இந்தத்திட்டம் 31.12.2006 வரை நடைமுறையில் இருப்பதற்கு ஆணை வெளியிடப்பட்டது. மேலும் ஓராண்டிற்கு 31.12.2007 வரை அரசாணை (நிலை) எண்.56, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள், 30.04.2007 – ல் நீட்டிக்கப்பட்டது. பின்னர் அரசாணை (நிலை) எண்.244, நகராட்சி நிர்வாகம்

மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள், 05.12.2008 –ல் மேலும் ஆறு மாதங்களுக்கு இத்திட்டம் நீட்டிப்பு செய்யப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் இதுவரை வசூலிக்கப்பட்ட கட்டணங்களின் விவரங்கள் பின்வருமாறு:–

| வ. எண் | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் | முறைப்– படுத்தப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | முறைப்படுத்துவதற்காக வசூலிக்கப்பட்ட கட்டணம் (ரூபாய் கோடியில் |
|---|---|---|---|
| 1. | மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) | 69846 | 74.85 |
| 2. | நகராட்சிகள் | 53047 | 23.29 |
| 3. | பேரூராட்சிகள் | 30900 | 7.65 |

01.01.1980–க்குப்பிறகு, ஆனால் ஆணை வெளியிடுவதற்கு முன்பாக தனிப்பட்ட நபர்களின் அங்கீகரிக்கப்படாத மனைகள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மனை உரிமையாளர்களிடமிருந்து அடிப்படை வசதி செய்வதற்கு கட்டணம் வசூலிக்க அறிவுறுத்தப்பட்டனர். மேலும் இந்த மனைப்பிரிவுகளுக்கு குடிநீர் வசதி, சாக்கடை வசதி, மின் இணைப்பு வசதி ஆகியவற்றை வைப்புத்தொகை பெற்றுக்கொண்டுச் செய்து தர அறிவுறுத்தப்பட்டது.

அரசின் இந்த முடிவுக்குப் பின் மக்களின் உண்மையான பிரச்சனைகள் களையப்பட்டதால் அனைவரதுவரவேற்பினையும் பெற்றது. இத்திட்டத்தின் கூடுதல் நன்மை என்னவெனில் தேவையான உள்கட்டமைப்புவசதிகளை இம்மனைப்பிரிவுகளில் செய்து தருவதற்கு இத்திட்டம் உறுதுணையாக உள்ளது.

## 1.10. காலிமனையிட வரி சீரமைப்பு

காலிமனையிட வரி, **1.9.2009–க்கு** முன்னர் வரை காலி மனையிடங்களின் அசல் மதிப்பீட்டின் அடிப்படையில் விதிக்கப்பட்டு வந்தது. எனினும் கட்டடங்களுக்கான சொத்துவரி, அப்பகுதியில் நிலவி வரும் வாடகை மதிப்பின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகிறது. இது, கட்டடங்களுக்கான சொத்துவரியை விட, காலி மனையிடங்களுக்கான வரி மிக அதிகமாக இருக்கக்கூடிய ஒரு சமச்சீரற்ற சூழலை உருவாக்கி இருந்தது. மேலும், இது, பொதுமக்களுக்கு அதிக அளவில் இடர்ப்பாட்டை ஏற்படுத்தக் கூடியதாகவும், காலிமனையிடங்களுக்கான வரியின் குறைந்த வசூலுக்குக் காரணமாகவும் அமைந்திருந்தது.

அரசு, மேற்சொன்ன நிலையைக் கருத்தில்கொண்டும், மாநில மூன்றாவது நிதி ஆணையம் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு மேலும் அதிகாரங்களை அளிப்பது குறித்து ஆராய்ந்து பரிந்துரைகளை அளிப்பதற்கென அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டும்,

காலிமனையிட வரிவிதிப்பு முறையை சீரமைப்தென முடிவு செய்தது.

1.9.2009 முதல் காலிமனையிட வரிவிதிப்பதற்கான நடைமுறைகள் மாற்றப்பட்டன. முன்னர், பின்பற்றப்பட்டு வந்த காலிமனையிடங்களின் அசல் மதிப்பீட்டின் அடிப்படையிலான முறைக்குப் பதிலாக, தற்போது, காலிமனையிடங்களின் சதுர அடி கணக்கிடப்பட்டு அதனடிப்படையில் வரி விதிக்கப்பட்டு வருகிறது.

மேற்சொன்ன நோக்கங்களைச் செயல்படுத்துவதற்கென, 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி (திருத்தச்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/ 2009) மூலம், இம்மாநிலத்தின் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான சட்டங்களில் தக்க திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை (நிலை) எண் 151, நாள் 20.8.2009–ல், 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) (காலிமனையிடங்களின் மீதான சொத்துவரி விதிப்பு) விதிகள், வெளியிடப்பட்டன. மேற்சொன்ன திருத்தச் சட்டம் மற்றும் விதிகள், 1.9.2009 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்த மிக முக்கிய முடிவு, சீரமைக்கப்பட்ட வரிவிதிப்பு முறையின் மூலமாக பொதுமக்களுக்கு பெருமளவு

நிவாரணத்தை அளித்துள்ளது. மேலும், தாமாக, குறித்த காலத்திற்குள் வரி செலுத்தப்படுவதால் காலிமனையிடங்களுக்கான வரியின் அதிகப்படியான வருவாய் மூலம் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளும் பயனடையும்.

## 2. சென்னை மாநகராட்சி

கிழக்குக் கடற்கரையில் அமையப் பெற்ற சென்னைப் பட்டணம் என்ற ஒரு சிறிய கிராமம் மிகப் பெரிய மாநகரமாக உருவாகியுள்ளது. இது தற்போது நாட்டின் நான்காவது பெருநகரமாகும். சென்னை நகர் அதன் அமைப்பில் தொன்மையும் புதுமையும் ஒருசேர அமையப்பெற்ற ஒரு நகரமாகும்.

17 ஆம் நூற்றாண்டில், ஆங்கிலேயர்களால் சென்னை நகரம், உருவாக்கப்பட்டு பின் நகர்ப்புர கூட்டவமைவுகளைக் கொண்ட ஒரு பெரிய நகரமாக்கப்பட்டது. இருபதாம் நூற்றாண்டில், ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்தின் தலைநகராகவும், ஒரு முக்கிய நிர்வாக மையமாகவும் உருவெடுத்தது. கிழக்கிந்தியக் கம்பெனி, “புனித ஜார்ஜ் கோட்டை நகரம்“ மற்றும் கோட்டையிலிருந்து பத்து மைலுக்கு மிகாத அதன் பகுதிகளை உள்ளடக்கிய பகுதிகளை மாநகராட்சியாக அமைத்து, 1607–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30–ஆம் நாள் “பிரகடனம்” ஒன்றை வெளியிட்டது. சென்னை மாநகராட்சி, 1688–ஆம் ஆண்டு செப்டம்பர் 29–ஆம் நாள் நிறுவப்பட்டது. 1792–ஆம் ஆண்டு பாராளுமன்றச் சட்டம், சென்னை மாநகராட்சிக்கு, வரி வசூலிக்கும் அதிகாரத்தை வழங்கியது. 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம் மாநகராட்சியை நிர்வகிப்பதற்குத் தேவையான அடிப்படை சட்ட உரிமைகளை அளிக்கிறது.

## 2.1 . சென்னை மாநகராட்சியின் விரிவாக்கம்

சென்னை நகரம் பரப்பளவிலும், மக்கள் தொகையிலும், வேகமாக வளர்ந்து வருகிறது. 174 சதுர கிலோ மீட்டரை உள்ளடக்கிய சென்னை மாநகரின் தற்போதைய எல்லைகள் 1978–ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டன. சென்னைப் பெருநகர் பகுதி வேகமான வளர்ச்சியைக் கண்டுள்ளது. சென்னை மாநகராட்சி பல்முனைப் பிரச்சனைகளை சந்தித்து வருகிறது. உள்ளாட்சி அமைப்புகள் வளர்ந்து வரும் தேவைகளைக் கருத்தில் கொண்டு தேவையான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவது அவசியமாகிறது. சென்னைப் பெருநகர் பகுதியில் உள்ள உள்ளாட்சி அமைப்புகள் வழங்கி வரும் சேவைகளின் தரம் பெருமளவில் வேறுபடுகிறது. இச்சேவைகளைச் சிறந்த முறையில் அளிப்பதற்குத் தேவையான திறனை, ஆங்காங்கே அமைந்துள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் ஆகியவற்றை விட மாநகராட்சி போன்றதொரு சீரிய அமைப்பால் மட்டுமே பெற்றிருக்க முடியும். எனவே, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, அரசாணை (நிலை) எண்.30, நாள், 20.02.07–ல் மாநகராட்சியின் விரிவாக்கம் குறித்த பல்வேறு அம்சங்களை ஆய்வு செய்து அரசிற்கு தக்க பரிந்துரைகளை வழங்க கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைத்து ஆணைகள் வெளியிடப்பட்டன.

| | |
|---|---|
| சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் துணைத் தலைவர் | – தலைவர். |
| வருவாய் நிர்வாக ஆணையர் | – உறுப்பினர். |
| செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | – உறுப்பினர். |

அரசு, அரசாணை (நிலை) எண்.182, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.09.08–ல் புதிய மாநகராட்சிகள் அமைப்பது குறித்து சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் பல்வேறு தரப்பிினைரைக் கலந்தாலோசிக்க ஆணையிட்டது. மேலும், பெறப்படும் அவ்வாலோசனைகள் மற்றும் மாற்றுக் கருத்துக்களைத் தொகுத்து அரசிற்கு அளிக்குமாறு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் கேட்டுக் கொள்ளப்பட்டது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், பொதுமக்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தொடர்புடைய பிற தரப்பினரையும் கலந்தாலோசித்து, அதனறிக்கையை, 19.09.09–ல் அரசிடம் அளித்தது.

அரசு, அனைத்து அம்சங்களையும் கருத்தில் கொண்டு, சென்னை மாநகராட்சிக்கு அருகாமையிலுள்ள 42 உள்ளாட்சி அமைப்புகளை, அதாவது, 9 நகராட்சிகள், 8 பேரூராட்சிகள் மற்றும் 25 ஊராட்சிகளை, சென்னை மாநகராட்சியுடன் இணைத்து, அதன் பரப்பை, 425.45 சதுர கிலோ மீட்டர் அளவிற்கு

விரிவாக்குவதென முடிவு செய்தது. இதற்கான ஆணைகள் அரசாணை (நிலை) எண்.256 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 26.12.09–ல் வெளியிடப்பட்டன.

## 2. 2 . சென்னை மாநகராட்சியுடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டிய உள்ளாட்சி அமைப்புகளின் பட்டியல்

| நகராட்சிகள் | | |
|---|---|---|
| வ. எண் | பெயர் | மாவட்டம் |
| 1 | கத்திவாக்கம் | திருவள்ளூர் |
| 2 | திருவொற்றியூர் | திருவள்ளூர் |
| 3 | மணலி | திருவள்ளூர் |
| 4 | மாதவரம் | திருவள்ளூர் |
| 5 | அம்பத்துார் | திருவள்ளூர் |
| 6 | மதுரவாயல் | திருவள்ளூர் |
| 7 | வளசரவாக்கம் | திருவள்ளூர் |
| 8 | ஆலந்துார் | காஞ்சிபுரம் |
| 9 | உள்ளகரம்–புழுதிவாக்கம் | காஞ்சிபுரம் |

| பேரூராட்சிகள் | | |
|---|---|---|
| வ. எண் | பெயர் | மாவட்டம் |
| 1 | சின்னச்சேக்காடு | திருவள்ளூர் |

| | | |
|---|---|---|
| 2 | புழல் | திருவள்ளூர் |
| 3 | போரூர் | திருவள்ளூர் |
| 4 | நந்தம்பாக்கம் | காஞ்சிபுரம் |
| 5 | மீனம்பாக்கம் | காஞ்சிபுரம் |
| 6 | பெருங்குடி | காஞ்சிபுரம் |
| 7 | பள்ளிக்கரணை | காஞ்சிபுரம் |
| 8 | சோழிங்கநல்லூர் | காஞ்சிபுரம் |

**ஊராட்சிகள்**

| வ. எண் | ஊராட்சி | ஊராட்சி ஒன்றியம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1 | இடையாஞ்சாவடி | மீஞ்சூர் | திருவள்ளூர் |
| 2 | சடையாங்குப்பம் | புழல் | திருவள்ளூர் |
| 3 | கடப்பாக்கம் | புழல் | திருவள்ளூர் |
| 4 | தீயம்பாக்கம் | புழல் | திருவள்ளூர் |
| 5 | மாத்தூர் | புழல் | திருவள்ளூர் |
| 6 | வடபெரும்பாக்கம் | புழல் | திருவள்ளூர் |
| 7 | சூரப்பட்டு | புழல் | திருவள்ளூர் |
| 8 | கதிர்வேடு | புழல் | திருவள்ளூர் |
| 9 | புத்தகரம் | புழல் | திருவள்ளூர் |
| 10 | நொளம்பூர் | வில்லிவாக்கம் | திருவள்ளூர் |
| 11 | காரம்பாக்கம் | வில்லிவாக்கம் | திருவள்ளூர் |

| | | | |
|---|---|---|---|
| 12 | நெற்குன்றம் | வில்லிவாக்கம் | திருவள்ளூர் |
| 13 | ராமாபுரம் | வில்லிவாக்கம் | திருவள்ளூர் |
| 14 | முகலிவாக்கம் | குன்றத்துார் | காஞ்சிபுரம் |
| 15 | மணப்பாக்கம் | குன்றத்துார் | காஞ்சிபுரம் |
| 16 | கொட்டிவாக்கம் | புனித தோமையர் மலை | காஞ்சிபுரம் |
| 17 | பாலவாக்கம் | புனித தோமையர் மலை | காஞ்சிபுரம் |
| 18 | நீலாங்கரை | புனித தோமையர் மலை | காஞ்சிபுரம் |
| 19 | ஈஞ்சம்பாக்கம் | புனித தோமையர் மலை | காஞ்சிபுரம் |
| 20 | காரப்பக்கம் | புனித தோமையர் மலை | காஞ்சிபுரம் |
| 21 | ஒக்கியம் துரைப்பாக்கம் | புனித தோமையர் மலை | காஞ்சிபுரம் |
| 22 | மடிப்பாக்கம் | புனித தோமையர் மலை | காஞ்சிபுரம் |
| 23 | ஜல்லடம்பேட்டை | புனித தோமையர் மலை | காஞ்சிபுரம் |
| 24 | செம்மஞ்சேரி | புனித தோமையர் மலை | காஞ்சிபுரம் |
| 25 | உத்தண்டி | புனித தோமையர் மலை | காஞ்சிபுரம் |

சென்னை மாநகராட்சி ஆணையரைத் தலைவராகவும், உள்கட்டமைப்பிற்கான தனி அதிகாரியாக இணை ஆணையர் (பணிகள்), நிர்வாக மறுசீரமைபிற்கான தனி அதிகாரியாக இணை ஆணையர் (சுகாதாரம்) மற்றும் ஒருங்கிணைப்பாளராக தலைமைப் பொறியாளர் (பொது) ஆகியோரைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

## 2.3. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட திட்டங்கள்:

### 2.3.1. சென்னை மாநகரின் சிறிய மற்றும் பெரிய வடிகால் அமைப்பின் மேம்பாட்டுத் திட்டப்பணிகள்

சென்னை நகரம் ஒரு சமதள நிலப்பகுதியாகும். இது கடல் மட்டத்திலிருந்து சராசரியாக 8 அடி உயரத்தில் மட்டுமே உள்ளது. சமதள நிலப்பகுதியாக உள்ளதாலும் போதிய மழைநீர் வடிகால்வாய்கள் இல்லாததாலும், ஒவ்வொரு ஆண்டும் பருவமழைக்காலங்களில் வெள்ளம் மற்றும் மழைநீர்த் தேக்கம் ஏற்படுகிறது.

பருவ மழைக்காலங்களில் சென்னை வாழ் மக்களுக்கேற்படும் இன்னலைக் குறைக்க சென்னை மாநகராட்சியும் பொதுப் பணித்துறையும் ஒருங்கிணைந்து ஒரு விரிவான திட்ட அறிக்கையைத் தயாரித்துள்ளது. இத்திட்டத்தை ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் மூலம் மேற்கொள்ள மாநில அளவிலான ஒப்பளிப்பு குழுவின்

கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டு மத்திய அரசின் நகர்ப்புர மேம்பாட்டு அமைச்சகத்தின் "ஒப்புதல் மற்றும் கண்காணிப்புக் குழு"வின் கூட்டத்தில் சரிபார்க்கப்பட்டு கீழ்க்காணும் நான்கு நீர்த் தேக்கப்பகுதிகளாக பட்டியலிட்டு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**(ரூபாய் கோடியில்)**

| வ. எண். | நீர்த் தேக்கப் பகுதியின் பெயர் | சென்னை மாநகராட்சி பங்கு | பொதுப் பணித்– துறை பங்கு | ஒப்பளிப்புத் தொகை | இந்திய அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | வடக்கு | 277.17 | 82.69 | 359.86 | 19.12.2008 |
| 2 | மத்திய | 261.11 | 83.89 | 345.00 | 29.12.2008 |
| 3 | கிழக்கு | 140.40 | 303.67 | 444.07 | 14.01.2009 |
| 4 | தெற்கு | 136.20 | 162.78 | 298.98 | 22.01.2009 |
| | மொத்தம் | 814.88 | 633.03 | 1447.91 | |

ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் மொத்தத் தொகையில் மத்திய அரசின் மானியம் 35 விழுக்காடு (ரூ. 285.25 கோடி) தமிழ்நாடு அரசின் பங்கு 15 விழுக்காடு (ரூ.122.25 கோடி) ஆகும். மீதமுள்ள 50 விழுக்காடு (ரூ.407.44 கோடி) உள்ளாட்சி அமைப்பான சென்னை மாநகராட்சியின் பங்காகும். இத்திட்டத்திற்கான அரசின் நிர்வாக ஒப்புதல் அரசாணை (நிலை) எண்.116, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.6.7.2009–ல் அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் சென்னை மாநகராட்சியால் மழைநீர் வடிகால் இல்லாத இடங்களில் 290 கி.மீ. நீளத்திற்கு ரூ.343 கோடியில் புதிய மழைநீர் வடிகால்கள் கட்டப்படும். 183 கி.மீ. நீளமுள்ள சிறு மழைநீர் வடிகால்கள் ரூ.276 கோடி மதிப்பீட்டில் மாற்றியமைக்கப்படும். 16 கால்வாய்களில் 29 கி.மீ. நீளத்திற்கு மேம்பாட்டுப் பணிகள் ரூ.160 கோடியில் மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. நான்கு நீர்த்தேக்கப் பகுதிகளிலுள்ள பணிகள் யாவும் 12 நீர்ப்பிடிப்புப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, 12 நீர்ப்பிடிப்புப் பகுதிகளுக்கும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. அதன் விவரங்கள் கீழ்க்கண்டவாறு அளிக்கப்பட்டுள்ளன.

| வ. எண். | நீர்ப்பிடிப்புப் பகுதியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | ஒப்பங்கள் பெறப்பட்ட நாள் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| 1 | கொளத்தூர் நீர்ப்பிடிப்புப் பகுதி (வடக்கு) | 25.53 | 20.11.09 | ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது நாள்: 05.03.10 |
| 2 | வேளச்சேரி நீர்ப்பிடிப்புப் பகுதி (தெற்கு) | 47.52 | 20.11.09 | ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது நாள்: 05.03.10 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | வடக்கு பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்புப் பகுதி (கிழக்கு) | 20.50 | 27.11.09 | ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது நாள்: 05.03.10 |
| 4 | விருகம்பாக்கம் மற்றும் அரும்பாக்கம் நீர்ப்பிடிப்புப் பகுதி (மத்திய) | 60.32 | 20.11.09 | ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு ஏப்ரல் மாத மன்றக் கூட்டத்தில் முடிவிற்காக வைக்கப்பட்டுள்ளது. |
| 5 | ஒட்டேரி நல்லா நீர்ப்பிடிப்புப் பகுதி (வடக்கு) | 106.64 | 27.11.09 | ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு ஏப்ரல் மாத மன்றக் கூட்டத்தில் முடிவிற்காக வைக்கப்பட்டுள்ளது. |
| 6 | அடையாறு நீர்ப்பிடிப்புப் பகுதி (தெற்கு) | 83.37 | 27.11.09 | ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு ஏப்ரல் மாத மன்றக் கூட்டத்தில் முடிவிற்காக வைக்கப்பட்டுள்ளது. |
| 7 | தெற்கு பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்புப் பகுதி (கிழக்கு) | 39.96 | 11.12.09 | ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு ஏப்ரல் மாத மன்றக் கூட்டத்தில் முடிவிற்காக வைக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்புப் பகுதி (வடக்கு) | 108.18 | – | மறு ஒப்பந்தப்புள்ளி 28.05.2010 அன்று கடைசி நாளாக நிர்ணயித்து கோரப்பட்டுள்ளது |
| 9 | கூவம் நீர்ப்பிடிப்புப் பகுதி (மத்திய) | 87.57 | – | மறு ஒப்பந்தப்புள்ளி 28.05.2010 அன்று கடைசி நாளாக நிர்ணயித்து கோரப்பட்டுள்ளது |
| 10 | இராயபுரம் நீர்ப்பிடிப்புப் பகுதி (கிழக்கு) | 30.00 | 19.03.10 | ஒப்பந்தப்புள்ளிகள் 19.03.10 அன்று திறக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது. |
| 11 | மத்திய பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்புப் பகுதி (கிழக்கு) | 47.17 | 19.03.10 | ஒப்பந்தப்புள்ளிகள் 19.03.10 அன்று திறக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது. |
| 12 | மாம்பலம் நந்தனம் நீர்ப்பிடிப்புப் பகுதி (மத்திய) | 121.53 | 19.03.10 | ஒப்பந்தப்புள்ளிகள் 19.03.10 அன்று திறக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது. |

பொதுப்பணித் துறைக்கான பெருவழி வடிகால்வாய் திட்டத்தில் 65.10 கி.மீ. நீளமுள்ள 3 நீர்வழித் தடங்கள்

ரூ.378 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். 9.90 கி.மீ. நீளத்தில் 4 புதிய இணைப்புக் கால்வாய்கள் ரூ.148.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். மேலும் 96.39 கி.மீ. நீளத்திற்கு 5 ஏரி வழிந்தோடும் கால்வாய்கள் ரூ.107.00 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். நான்கு புதிய இணைப்புக் கால்வாய்கள் விவரம்: 1. அண்ணா நகர் மூன்றாவது நிழற்சாலையில் - ஓட்டேரி நல்லா முதல் கூவம் ஆறு வரை. 2. ஜவஹர்லால் நேரு சாலையில் விருகம்பாக்கம் கால்வாய் முதல் கூவம் ஆறு வரை.3. வேளச்சேரி - தரமணி சாலையில் வேளச்சேரி ஏரிக் கால்வாய் முதல் தெற்கு பக்கிங்காம் கால்வாய் வரை. 4. தெற்கு பக்கிங்காம் கால்வாய், (ஒக்கியம் மடுவு) முதல் கடல் வரை.

## 2.4. திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்

சென்னை மாநகராட்சி சென்னை மாநகரில் நடைமுறையில் உள்ள திடக்கழிவு மேலாண்மை செயல்பாட்டுமுறைகளை நவீனமயமாக்க, ஒரு விரிவான திட்ட அறிக்கையினை தயாரித்தது. அந்த திட்ட அறிக்கை மாநில ஒப்பளிப்பு குழுவினால் ஏற்கப்பட்டு பின்னர் மத்திய அரசின் நகர்ப்புர மேம்பாட்டு அமைச்சகத்தினால், மதிப்பீடு சரிப்பார்கப்பட்டு 02.02.2007 அன்று நடைபெற்ற, மத்திய அரசின் 'மத்திய ஒப்பளிப்பு மற்றும் கண்காணிப்பு குழு'வின் கூட்டத்தில் ரூ.255.32 கோடிக்கு ஒப்பளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய கூறுகள் (Components) ரூ.8.00 கோடி செலவில் குப்பை மாற்று நிலையங்களை நவீனப் படுத்துதல், ரூ.50 கோடி

செலவில் தளவாடங்கள் வாங்குதல் மற்றும் ரூ.190 கோடி செலவில் கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகங்களில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டங்களை செயலாக்குதல் மற்றும் சுகாதாரக் குப்பை கொட்டும் தளம் அமைத்தல் ஆகும்.

நவீனக் குப்பை மாற்று நிலையங்களைக் கட்டும் பணியும் மற்றும் அதற்கான தளவாடங்கள் கொள்முதலும் முடிவடைந்து அதற்காக இது வரையில் ரூ.49.64 கோடி செலவிடப்பட்டுள்ளது. 2010ஆம் ஆண்டில் சைதாப்பேட்டையில் நவீன குப்பை மாற்று நிலையம் கட்டும் பணியும் மற்றும் பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை மக்க வைக்கும் வளாகங்களில் மதில்சுவர் கட்டும் பணியும் செய்து முடிக்கப்படும். அரசாணை (நிலை) எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.08.05.2008ல் கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகங்களில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டங்களைச் செயலாக்க, அரசு தனது ஆட்சி முறை ஒப்பளிப்பினை வழங்கியுள்ளது. மத்திய அரசின் பல்வேறு வழிகாட்டுதல்களின்படி இந்த ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டங்களை செயலாக்கவும், சுகாதாரக் குப்பை கொட்டும் தளங்களை வடிவமைத்தல், கட்டுதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் அடிப்படையில் தனியார் துறையின் ஈடுபாட்டினை ஏற்படுத்தவும், தனியார் அரசு ஈடுபாட்டு முறையில் செயலாக்கப் பணியாணைகள் வழங்கப்பட்டன.

பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் ஒருங்கிணைந்த திடக்கழிவுகள் மேலாண்மைத் திட்டத்தை செயலாக்க விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை மற்றும் மாசுக்கட்டுப்பாடு வாரியத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. 21.05.2009 அன்று மாநில திட்ட மதிப்பீட்டு வல்லுநர் குழு (State Expert Appraisal Committee) வின் முன் வழங்குரை அளிக்கப்பட்டது. கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த சுற்றுச்சூழல் துறையின் இசைவுச் சான்றிதழ் கோரி 19.05.2009 அன்று விண்ணப்பிக்கப்பட்டது. சென்னை மாநகராட்சி, இந்தத் திட்டம் குறித்த விவர அறிக்கைகளை மத்திய அரசுக்கு அனுப்பி இந்தத் திட்டம் குறித்து மத்திய வல்லுநர் குழுவின் முன்பு 22.12.2009 அன்று விளக்க உரையை அளித்தது. இதற்கு இக்குழு சென்னை மாநகராட்சியை சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீடு/ சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டத்தை தயாரிக்கும்படியும் பொது மக்களின் கருத்துக் கணிப்புக் கூட்டம் நடத்தும் படியும் அறிவுறுத்தியது. அதன்படி அவ்வாறு கூட்டம் நடத்த மாநில மாசுக்கட்டுப்பாடு வாரியத்திடம் கேட்டுக்கொள்ளப்பட்டு அக்கூட்டம் 23.03.2010 அன்று நடத்தப்பட்டது.

## 2.5 எட்டு இடங்களில் மேம்பாலங்கள் மற்றும் சுரங்கப்பாதைகள் அமைத்தல்

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் 07.04.2007 அன்று மத்திய அரசின் நகர்ப்புர

மேம்பாட்டு அமைச்சகத்தின் "ஒப்புதல் மற்றும் கண்காணிப்புக் குழுவினால் ரூ.82.77 கோடியில் எட்டு மேம்பாலங்கள் மற்றும் சுரங்கப்பாதைகள் கட்டுவதற்காக அனுமதி வழங்கப்பட்டது. நிலத்தடிநீர் குழாய்களை மாற்றியமைத்தல் மற்றும் நிலம் கையகப்படுத்துதல் உட்பட இப்பணிகளின் மதிப்பீட்டுத் தொகை ரூ. 131.71 கோடி ஆகும் அதன் விவரங்கள் பின்வருமாறு.

(1) பெரம்பூர் மேம்பாலம் ரூ.51.00 கோடி மதிப்பீட்டில் கட்டிமுடிக்கப்பட்டு 28.03.10 அன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

(2) ஜோன்ஸ் சாலை சந்திக்கடவில் ரூ.4.33 கோடி திட்ட மதிப்பீட்டில் வாகன சுரங்கப்பாதை பணி முடிவடைந்து 11.12.2009 அன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது.

(3) மணியக்கார சத்திரச் சாலை சந்திக்கடவில் சுரங்கப்பாதை அமைக்கும் பணி ரூ.10.55 கோடி திட்ட மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இப்பணி செப்டம்பர் 2010ல் முடிவடையும்.

(4) ரங்கராஜபுரம் சந்திக்கடவில் ரூ.15.74 கோடி மதிப்பீட்டில் மேம்பாலப் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி அக்டோபர் 2010ல் முடிவடையும்.

(5) ஆலந்தூர் சாலையில் உயர்மட்ட பாலப்பணி ரூ.6.03 கோடி மதிப்பீட்டில் பணி முடிவடைந்து 11.12.2009 அன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது.

(6) கத்திவாக்கம் நெடுஞ்சாலை – காக்ரேன் பேசின் சாலை சந்திக்கடவில் மேம்பாலப் பணி ரூ.12.20 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இப்பணி டிசம்பர் 2010ல் முடிவடையும்.

(7) வில்லிவாக்கம் சந்திக்கடவில் சுரங்கப்பாதை அமைக்கும் பணி ரூ.13.39 கோடி திட்ட மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இரயில்வேப் பகுதியின் பணிகளை இரயில்வேத் துறை முடித்தபிறகு இப்பணி ஆகஸ்டு 2010ல் முடிவடையும்.

(8) கொருக்குப்பேட்டை சந்திக்கடவில் சுரங்கப்பாதை அமைக்கும் பணியில், தென்னக இரயில்வே கூடுதல் இரயில் தடங்கள் அமைப்பதற்காக சுரங்கப்பாதை அமைப்பை திருத்தியமைத்தது. இப்பணி கத்திவாக்கம் நெடுஞ்சாலை – காக்ரேன் பேசின் சாலையில் நடைபெற்றுவரும் மேம்பாலப்பணி முடிவடைந்த பிறகு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

## 2.6 .ஈ.வெ.ரா. பெரியார் சாலையில் அமைந்துள்ள தொன்மை வாய்ந்த கட்டடங்களை புனரமைத்தல்

ஈ.வே.ரா. பெரியார் சாலையில் கவின் கலை கல்லூரி முதல் சென்னை மத்திய ரயில்வே நிலையம் வரையில் 13 வரலாற்று சிறப்புமிக்க தொன்மை வாய்ந்த கட்டடங்கள் அமைந்துள்ளன. இவற்றில் ரிப்பன் மாளிகை மற்றும் விக்டோரியா பொது கலை அரங்கம் ஆகிய இரண்டும் சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இவற்றின் தொன்மையையும் கலையம்சத்தையும் பாதுகாக்கும் வகையில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் நகர்ப்புர மேம்பாட்டு அமைச்சகத்தின் ஒப்புதல் மற்றும் கண்காணிப்புக் குழுவின் முன் சமர்ப்பிக்கப்பட்டது. 20.02.2009 அன்று நடைபெற்ற கூட்டத்தில் ரிப்பன் மாளிகை மற்றும் விக்டோரியா பொது கலை அரங்கம் ஆகியவற்றை ரூ.610.00 இலட்சங்கள் மதிப்பீட்டில் புனரமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

## 2.7. ரிப்பன் மாளிகை புனரமைக்கும் பணி

சென்னை மாநகரின் தொன்மை வாய்ந்த சின்னங்களில் ரிப்பன் மாளிகையும் ஒன்றாகும். பழமையும் புதுமையும் கலந்த கலையம்சங்களைக் கொண்ட இம்மாளிகை 1913ல்

கட்டப்பட்டதாகும். உள்ளாட்சித்துறையில் பல சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்திய ரிப்பன் பிரபுவின் (1880–84) பெயரால் இம்மாளிகை அழைக்கப்படுகின்றது. இம்மாளிகையின் தொன்மையையும் கலையம்சத்தையும் பேணிக்காக்கும் வகையில் இம்மாளிகையை முழுவதுமாக புனரமைக்க சென்னை மாநகராட்சியால் உத்தேசிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மன்றத் தீர்மானம் எண்.338/2009, நாள்.30.09.2009ன்படி ஏற்கப்பட்டு, 05.10.2009 அன்று ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. ரிப்பன் மாளிகை புனரமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. 18 மாத காலத்திற்குள் இப்பணிகள் முடிக்கப்படும்.

### 2.8. விக்டோரியா பொது கலை அரங்கம் புனரமைக்கும் பணி

தொன்மை வாய்ந்தக் கட்டடங்கள் அமைந்த சென்னை ஈ.வே.ரா. சாலையில் ரிப்பன் மாளிகைக்கு அருகில் அமைந்துள்ள விக்டோரியா பொது கலை அரங்கம் 1887ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இக்கட்டடத்தின் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 01.04.2009 அன்று விக்டோரியா பொது கலை அரங்கம் முறைப்படி சென்னை மாநகராட்சியால் கைவசப்படுத்தப்பட்டது. அதன்பின்,அதனைச் சுற்றியுள்ள சுற்றுச்சுவரை ஒட்டிய ஆக்கிரமிப்புகள் முறைப்படி அகற்றப்பட்டன.

புனரமைக்கும் பணிக்குரிய ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கப்பட்டு, மன்றத்தின் தீர்மானம் எண்.93/2010, நாள்.26.02.2010ன் மூலம் வழங்கப்பட்டுள்ளது. இப்பணி 18 மாதங்களில் முடிக்கப்படும்.

## 2.9. மின்னணு ஆளுகை முறையை (e-Governance) சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்துதல்

மின்னணு ஆளுகை முறையை சென்னை மாநகராட்சியில் அமல்படுத்துவதற்காக தகவல் தொழில் நுட்பத் தொடர்பு சேவை சம்பந்தப்பட்ட தொடக்க முயற்சிகள் குறித்து விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மாநில அளவிலான ஒப்புதல் குழுமத்தால் மதிப்பீடு செய்யப்பட்டு பின்னர் குழுமத்தால் 22–01–2010 அன்று நடந்தக் கூட்டத்தில் ரூ. 12.7 கோடி மதிப்பிற்கு மொத்தத் திட்ட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் அனைத்து நிர்வாகப் பணிகளும் தேசிய நகராட்சி கணக்கீடு வழிக்காட்டியை ஆதாரமாக கொண்டு பண பரிமாற்றம், வரவுகள் மற்றும் பல்வகை வரவு இனங்கள் ஆகியவற்றைக் கணினிமயமாக்குவதற்காக 11 வகைப் பிரிவுகள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மின்னணு ஆளுகை முறையினை செயல்படுத்துவதற்குத் தேவையான மென்பொருள், ரூ.1.80 கோடி மதிப்பில் தயாரிக்கும் பொறுப்பு எல்காட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தச் செயல்பாடு தேசிய நகராட்சிக் கணக்கீடு வழிகாட்டுதல் அடிப்படையில் அமையும். தற்போதைய நிலையில் பொதுமக்கள்

குறை தீர்த்தல், சொத்துவரி, பொருட்களுக்கானப் பதிவேடு மற்றும் தொடர்புடைய பல்வேறு வகை மேலாண்மைப் பணிகள், சொத்து மேலாண்மை ஆகியவற்றிற்கான மென்பொருள் தற்போது செயல்பாட்டில் உள்ளது. மாநகராட்சிக் கணக்கீடு, வரவுகள் குறித்த மென்பொருள் தயாரிக்கும் பணிச் செயல்பாடு இறுதி கட்டத்திலும் மற்றும் பணியாளர்கள் தகவல் முறை மற்றும் ஊதியப்பட்டியலுக்கான மென்பொருள் தயாரிப்பு நிலையிலும் உள்ளது.

## 2.10. நகர்ப்புர ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டம் (BSUP பகுதி 1) 2008 – 2009

சென்னை மாநகராட்சிப் பகுதியிலுள்ள **236** குடிசைப் பகுதிகளில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் மூலமாக நகர்ப்புர குடிசைப் பகுதி மக்களுக்கு அடிப்படை வசதிகள் அளிக்கும் திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட **ரூ.127.43** கோடி திட்ட மதிப்பீட்டிற்கு மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வறுமை ஒழிப்பு அமைச்சகம் **27.10.2007** அன்று நடைபெற்ற ஒப்புதல் மற்றும் கண்காணிப்புக் குழுவின் கூட்டத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தின் பிரதான அம்சங்கள்: **1370** கல்வீடு கட்டித் தருதல் மற்றும் **236** குடிசை பகுதிகளில் அடிப்படை வசதிகளான சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல், பக்க கால்வாய், மழைநீர் வடிகால்கள், சமுதாய நலக்கூடங்கள், புதிய

தெரு விளக்குகள் அமைத்தல், பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல் மேம்படுத்துதல் மற்றும் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் ஆகிய பணிகளாகும்.

இத்திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு தனி குடியிருப்பு வீடும் குறைந்தது 30 ச.மீ பரப்பளவில் ரூ.1.30 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் ரூ.65,000/– (50%) மத்திய அரசின் மானியமாகவும் ரூ.52,000/– (40%) மாநில அரசின் மானியமாகவும் வழங்கப்படுகிறது. மீதமுள்ள ரூ.13,000/– (10%) பயனாளிகளின் பங்களிப்பாகும். இத்திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 1370 பயனாளிகளுக்கும் பணி ஆணை வழங்கப்பட்டு, பயனாளிகள் மூலம் வீடு கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்தில் இதுவரை ரூ.80.96 கோடி செலவில் உள் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெறுகின்றன. நான்காவது மற்றும் இறுதி தவணைத் தொகையை அரசாணை எண். 153, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 31.03.2010ல் மாநில அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது.

## 2.11. நகர்ப்புர ஏழைகளுக்கான அடிப்படை வசதி திட்டம் (BSUPபகுதி 2) 2009–10

சென்னை மாநகராட்சிப் பகுதியிலுள்ள மேலும் 186 குடிசைப் பகுதிகளை மேம்படுத்த தயாரிக்கப்பட்ட ரூ.72.63 கோடி திட்ட மதிப்பீட்டிற்கு மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வறுமை ஒழிப்பு அமைச்சகம் 28.01.2009 அன்று நடைபெற்ற ஒப்புதல் மற்றும் கண்காணிப்புக் குழுவின் கூட்டத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள், 186 குடிசைப் பகுதிகளில் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல், மழைநீர் வடிகால் கட்டுதல் , சமையற்கூடங்கள், உடற்பயிற்சிக் கூடங்கள் கட்டுதல், சமுதாய நலக்கூடங்கள், மற்றும் புதிய தெரு விளக்குகள் அமைத்தல் ஆகியப் பணிகளாகும்.

இதுவரை ரூ.39.06 கோடி செலவில் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ளப் பணிகள் நடைபெறுகின்றன. மூன்றாவது தவணைத் தொகையான ரூ.17.29 கோடி 31.03.2010 அன்று மாநில அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது.

## 2.12. கேளிக்கை வரி இழப்பீடு ஈடு செய்தல்

கேளிக்கை வரியினை ரத்து செய்ததால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்படும் இழப்பீட்டை ஈடு செய்யும் பொருட்டு அதன் அபிவிருத்தித் திட்டங்களுக்காக அரசால் நிதி ஒதுக்கீடு

செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட பெரும் பணிகளை மேற்கொள்ள ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

## 2.13 தண்டையார்பேட்டை தொற்றுநோய்மருத்துவமனையை நவீனப்படுத்துதல்

2008–09, 2009–10 ஆம் ஆண்டில் தொற்று நோய் மருத்துவமனையை மேம்படுத்துதல் பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள தொற்று நோய் மருத்துவமனை 1914–ல் கட்டப்பட்டதாகும். கால அளவில் இம்மருத்துவமனை சென்னை மற்றும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளுக்கும் ஒரு மிகப்பெரிய தொற்று நோய் சிகிச்சை மையமாக உருவாகியுள்ளது. இம்மருத்துவமனையில் பெரிய அளவில் பழுதுபார்த்தல் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இம்மருத்துவமனைக்கு புதிய உபகரணங்கள் வாங்கவும் கட்டடங்களை நவீனப்–படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இம்மருத்துவமனையில் இரண்டு தளங்கள் கொண்ட நிர்வாக அலுவலகக் கட்டடம், திரையரங்கம் மற்றும் மூன்று வார்டு கட்டடங்கள் கட்டுமானப்பணிக்காக அரசாணை (நிலை) எண்.262, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.24.12.2008, மூலம் ரூ.8.00 கோடி அரசு அளித்துள்ளது. 27.07.2009 அன்று ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டு பணி நடை பெற்று வருகிறது.

மேலும் இத்தொற்று நோய் மருத்துவமனையில் கூடுதல் வசதிகள் மற்றும் இடவசதிகளை ஏற்படுத்தும் வண்ணம் அரசாணை (நிலை) எண்.251, நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் துறையின்படி ரூ.8.00 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இம் மருத்துவமனை வளாகத்தில் கூடுதல் நிர்வாக அலுவலகக் கட்டடம் மற்றும் மருத்துவ இணை இயல் பிரிவுக் கட்டடத்தில் நவீன ஆய்வகம் அமைக்கும் பணியும் திரையரங்கம் கட்டும் பணியும் ரூ.5.28 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும், வார்டு பிளாக் கட்டடங்கள் கூடுதலாகக் கட்டும் பணியும், மருத்துவமனை வளாகத்தில் புற நோயாளிகளுக்காக தனி கட்டடம் கட்டும் பணியும் ரூ.1.55 கோடி மதிப்பீட்டிலும் மைக்ரோ பயாலஜி மற்றும் வைராலஜி ஆய்வகங்களுக்கு உபகரணங்கள் அமைக்கும் பணி ரூ.2.10 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படவுள்ளது. கட்டுமானப் பணிகள் அனைத்திற்கும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டவுடன், தளவாடங்கள் வாங்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். இதனால் 240 படுக்கை வசதிகள் கொண்ட இம்மருத்துவமனை 360 படுக்கை வசதிகள் கொண்டதாக தரம் உயர்த்தப்படும்.

## 2.14. சென்னை மாநகராட்சியின் மூலதனப் பணிகள்

### 2.14.1. பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள்

2007ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரை பின்வரும் நான்கு மேம்பாலங்கள் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் அவர்களால் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டன.

1) வடக்கு உஸ்மான் சாலை – மகாலிங்கபுரம் சாலை சந்திப்பில் ரூ.9.72 கோடி மதிப்பீட்டில் மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டு 30.03.2008 அன்று திறக்கப்பட்டது.

2) உஸ்மான் சாலை – துரைசாமி சாலை சந்திப்பில் ரூ.19.80 கோடி மதிப்பீட்டில் மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டு 14.08.2008 அன்று பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது

3) ஜி.என். சாலை – திருமலை சாலை சந்திப்பில் ரூ.16.50 கோடி மதிப்பீட்டில் மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டு 29.12.2008 அன்று போக்குவரத்திற்குத் திறந்து வைக்கப்பட்டது.

4) டர்ன்புல்ஸ் சாலை – செனடாப் சாலை சந்திப்பில் ரூ.19.93 கோடி மதிப்பீட்டில் மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டு 11.12.2009 அன்றிலிருந்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.

தங்கசாலை சந்திப்பில் மேம்பாலம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ.23 கோடிக்கு அரசின் நிர்வாக அனுமதி அரசாணை நிலை எண். 117,

நாள்.06.07.2009 அன்று வழங்கப்பட்டது. கட்டமைப்பு கட்டுமானம் மற்றும் கொள்முதல் முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. 26.02.2010 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

கணேசபுரம் இரயில்வே சுரங்கப்பாதையின் மேல், மேம்பாலம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ.61.70 கோடிக்கு அரசின் நிர்வாக அனுமதி அரசாணை நிலை எண். 115, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.06.07.2009 அன்று வழங்கப்பட்டது. தனியார் நிலங்களைக் கையகப்படுத்தத் தேவைப்படும் ரூ.16.00 கோடி இம்மதிப்பீட்டில் அடங்கும். நிலம் கையகப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் குழாய்களை மாற்றி அமைப்பது குறித்து இரயில்வேத் துறையினருடனும் குடிநீர் வாரியத்துடனும் கலந்தாய்வு செய்து கட்டுமானப் பணிகள் துவங்கப்படும்.

### 2.15. பெரம்பூர் இறைச்சிக்கூடத்தை வடிவமைத்தல், கட்டுதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் முறையில் தனியார் மூலம் நவீனப்படுத்துதல்

சென்னை பெரம்பூரில் அமைந்துள்ள இறைச்சிக்கூடம் 1903ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும். இந்த பழமையான இறைச்சிக்கூடம் மாநகர மக்களின் இறைச்சித் தேவையை பூர்த்தி செய்கின்றது. இது 9.30 ஏக்கர் பரப்பளவில்

அமைந்துள்ளது. நவீனத் தொழில்நுட்பத்துடன் பிராணிகளை இறைச்சிக்காக வெட்டுவதற்கும் அதனால் ஏற்படும் கழிவுகளை நவீன முறையில் சுத்திகரிக்கவும் இந்த இறைச்சிக்கூடத்தை நவீனப்படுத்த வேண்டும் என்பது நீண்டகால தேவையாகும். சர்வதேசத் தரத்திற்கேற்ப இந்த இறைச்சிக்கூடத்தை "வடிவமைத்தல், கட்டுதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல்" ஒப்பந்த முறையில் தனியாருக்கு வழங்கப்பட்டு செப்டம்பர் 2009ல் பணி துவங்கப்பட்டுள்ளது. இப்பணி 24 மாதங்களுக்குள் முடிக்கப்படும்.

இந்த புதிய இறைச்சிக்கூடம் நாள் ஒன்றுக்கு 150 மாடுகளும் 1500 ஆடுகளும் இறைச்சிக்காக வெட்டப்படும் திறன் கொண்டதாக இருக்கும். இந்த இறைச்சிக்கூடத்தின் சலுகைக் காலம் 22 ஆண்டுகள். சலுகைக் கட்டணம் முதல் ஆண்டிற்கு ரூ.40 இலட்சம் ஆகும். இந்த நவீன இறைச்சிக்கூடத்தில் முதல் சுழற்சியில் பொதுமக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவும் இரண்டாம் சுழற்சியில் ஒப்பந்ததாரரின் தேவைக்காகவும் இறைச்சிக்காகப் பிராணிகள் வெட்டப்படும் வகையில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

## 2.16. நகரை அழகுபடுத்துதல் மற்றும் பூங்கா அமைத்தல்

சென்னை மாநகரை அழகுபடுத்த பல முயற்சிகளை, சென்னை மாநகராட்சி எடுத்து வருகிறது. ரூ 20.65 கோடி செலவில் சென்னை மெரீனா கடற்கரையை அழகுபடுத்த

அரசாணை (நிலை) எண் 30–ன் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 27.02.2009ன் படி உள்ளாட்சி அமைப்பிற்கு அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அந்த முயற்சிகளில் ஒன்றாக, கடற்கரையை அழகுபடுத்தும் திட்டத்தின் கீழ் இராஜாஜி சாலையில் பாரத ரிசர்வ் வங்கி முதல் போர் நினைவுச் சின்னம் வரையிலும், காமராஜர் சாலையில் நேப்பியர் பாலம் முதல் கலங்கரை விளக்கம் வரையிலும் மெரினாக் கடற்கரை அழகுபடுத்தப்படுத்தப்பட்டுள்ளது.

மெரினாக் கடற்கரை பச்சை பசேலென்ற புல்வெளியாலும், பல வண்ண ஓடுகள் பதிக்கப்பட்ட தரைப் பகுதியாலும் கிரானைட் கற்கள் பதிக்கப்பட்ட சுவராலும் மற்றும் வெவ்வேறு வடிவமைப்புடன் கூடிய 14 அமர்விட பகுதிகளாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது. கடற்கரைக்கு வருவோரின் வசதிக்காக ஒவ்வொரு அமர்விடப் பகுதியிலும் ஒருங்கிணைந்த இருக்கைகளுடன் போதுமான நவீன இருக்கைகள் மற்றும் தேவையான இன்ன பிற வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. நவீன பெர்கோலாக்கள் மற்றும் செயற்கை நீரூற்றுகள் பல இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. கடற்கரையில் அலங்கார விளக்குகள் அமைத்து, விளக்கு வசதிகள் குறிப்பிடத் தக்க அளவிற்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண். 190 சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை நாள் 30.11.07ன் படி மெரினாக் கடற்கரை அழகுப்படுத்தும் திட்டத்திற்காக, இந்திய அரசின் சுற்றுலா அமைச்சகம் தயாரிப்பு பொருள் மற்றும் உள்கட்டமைப்பு

வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.4.92 கோடி அளித்துள்ளது. மேலும் புதிதாகப் புனரமைக்கப்பட்ட மெரினாக் கடற்கரை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 20.12.2009 அன்று பொதுமக்களுக்கு திறந்து விடப்பட்டது.

சென்னை மாநகராட்சி, நகரில் பெருமளவிலான பூங்காக்கள் உருவாக்குவதிலும் மேம்படுத்துவதிலும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. சென்னை பெருநகர பேருந்து நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள ஜெய் நகர் பூங்கா, தியகராய நகர் பனகல் பூங்கா, அண்ணா நகரில் உள்ள முனைவர் விஸ்வேசரையா கோபுரப் பூங்கா ஆகியவை சென்னை மாநகராட்சியால் உருவாக்கப்பட்ட சில முக்கியப் பூங்காக்கள் ஆகும்.



பெரம்பூரில் அமைக்கப்பட்டுள்ள ரயில்வே மேம்பாலம்



பெரம்பூரில் அமைக்கப்பட்டுள்ள ரயில்வே மேம்பாலம்



விக்டோரியா பொது கலையரங்கம், ஈ.வெ.ரா. பெரியார் சாலை



மெரினா கடற்கரையில் மேம்பாட்டுப் பணி



மெரினா கடற்கரையை அழகுபடுத்துதல்



ராஜாஜி சாலையில் அமைக்கப்பட்டுள்ள பூங்கா



மேம்படுத்தப்பட்ட சிவானந்தா சாலை



ஜெய் நகர் பூங்கா, கோயம்பேடு

# 3. நகராட்சி நிர்வாக இயக்குநரகம்

கிராமப்புரப் பொருளாதாரம், நவீன தொழில் மற்றும் சேவையினை அடிப்படையாக கொண்டதாக மாறிவருவது நகர்மயமாதலுக்கான அறிகுறியாகும். நகர்ப்புர மேம்பாடும், நகர்ப்புர புனரமைப்பும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உள்கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் மிகவும் முக்கியமானவையாகும். நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் வளர்ச்சிப் பணிகளின் செயலாக்கம் அதிகரித்துவரும் சூழ்நிலையில், நகர்ப்புர மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதற்கு, பல உள்கட்டமைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் மாநிலத்திலுள்ள மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி, ஈரோடு, திருப்பூர், வேலூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 9 மாநகராட்சிகள் மற்றும் 148 நகராட்சிகள் உள்ளன.

மக்கட் தொகை மற்றும் ஆண்டு வருமான அடிப்படையில் நகராட்சிகள் ஐந்து பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. தற்போது 20 சிறப்பு நிலை நகராட்சிகள், 29 தேர்வு நிலை நகராட்சிகள், 29 முதல் நிலை நகராட்சிகள், 21 இரண்டாம் நிலை நகராட்சிகள் மற்றும் 49 மூன்றாம் நிலை நகராட்சிகள் உள்ளன.

## 3.1 காலிப்பணியிடங்களை நிரப்புதல்

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் மக்கள் நலப்பணிகளை துரிதமாக நிறைவேற்றிடும் பொருட்டு நிர்வாகத் திறனை மேம்படுத்திட ஏற்கனவே உள்ள பல்வேறு பதவிகளிலுள்ள காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கும், தேவையான அளவு கூடுதல் பணியிடங்களைத் தோற்றுவிப்பதற்கும் அரசால் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த நான்கு ஆண்டுகளில் நகராட்சி ஆணையர்கள், மருத்துவ அலுவலர்கள், உதவிப் பொறியாளர்கள், நகரமைப்பு அலுவலர்கள், சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் பிற பணிநிலை பிரிவுகள் உட்பட மொத்தம் **7535** காலிப்பணியிடங்கள், நடைமுறையில் உள்ள அரசாணைகளின்படியும், தினக்கூலிப் பணியாளர்களை காலமுறை ஊதிய ஏற்ற முறையில் வரன்முறைப்படுத்தியும் நிரப்பப்பட்டுள்ளன.

**நிரப்பப்பட்ட பணியிடங்களின் விவரம்:**

| வரிசை எண் | நியமன முறை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | நேரடி நியமனம் | 2799 |
| 2. | கருணை அடிப்படை நியமனங்கள் | 1528 |
| 3. | தினக்கூலிப் பணியாளர்களை கால முறை ஊதிய ஏற்ற முறையில் பணி வரன் முறைப்படுத்துதல் | 3074 |

| | | |
|---|---|---|
| 4. | அரசு பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரிந்து பணியிழந்தவர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு வழங்குதல் | 134 |
| | **மொத்தம்** | **7535** |

## 3.2 உள்கட்டமைப்பு மேம்பாடு

கடந்த நான்கு ஆண்டுகளில், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் இது வரை இல்லாத அளவிற்கு உள்கட்டமைப்பு மேம்பாடுகள், மாநில அரசின் நிதி, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் மூலம் மத்திய அரசு வழங்கும் நிதி, உலக வங்கி, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதியம், ஜெர்மன் மேம்பாட்டு வங்கி போன்ற வெளிநாட்டு நிதி நிறுவனங்களிலிருந்து பெறப்படும் நிதி ஆதாரங்களைக் கொண்டு உள்கட்டமைப்பு வளர்ச்சிக்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 3.2.1 நவீன பேருந்து நிலையங்கள்

தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய பேருந்து நிலையங்கள் கட்டுவதற்கும்,தற்போதுள்ள பேருந்து நிலையங்களை மேம்படுத்துவதற்கும், அரசால் கொள்கை முடிவெடுக்கப்பட்டு, அதன்படி, எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது:-.

## முடிக்கப்பட்ட பணிகள்

| வரிசை எண் | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பு | பணியின் விவரம் | திட்டமதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1 | கிருஷ்ணகிரி | புதிய பேருந்து நிலையம் | 6.78 |
| 2 | இராஜபாளையம் | புதிய பேருந்து நிலையம் | 3.95 |
| 3 | உள்ளகரம்–புழுதிவாக்கம் | புதிய பேருந்து நிலையம் | 0.30 |
| 4 | நெல்லிக்குப்பம் | புதிய பேருந்து நிலையம் | 0.90 |
| 5 | கொடைக்கானல் | புதிய பேருந்து நிலையம் | 4.87 |
| 6 | அனகாபுத்தூர் | புதிய பேருந்து நிலையம் | 0.50 |
| 7 | பூவிருந்தவல்லி (பகுதி–1) | புதிய பேருந்து நிலையம் | 2.05 |
| 8 | கோவில்பட்டி | கூடுதல் பேருந்து நிலையம் | 1.80 |
| 9 | பொள்ளாச்சி | கூடுதல் பேருந்து நிலையம் | 1.75 |
| 10 | பழனி | கூடுதல் பேருந்து நிலையம் | 6.60 |
| 11 | நாகர்கோவில் (வடசேரி) | பேருந்து நிலைய மேம்பாட்டுப் பணி | 1.65 |
| 12 | திருவண்ணாமலை | பேருந்து நிலைய மேம்பாட்டுப் பணி | 0.38 |
| 13 | ஈரோடு | பேருந்து நிலைய மேம்பாட்டுப் பணி | 2.50 |
| | | **மொத்த மதிப்பு** | **34.03** |

## முன்னேற்றத்தில் உள்ள பணிகள்

| வரிசை எண் | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பு | பணியின் விவரம் | திட்டமதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1 | ஒசூர் | புதிய பேருந்து நிலையம் | 6.89 |
| 2 | வந்தவாசி | புதிய பேருந்து நிலையம் | 3.80 |
| 3 | மறைமலைநகர் | புதிய பேருந்து நிலையம் | 2.50 |
| 4 | வெள்ளகோயில் | புதிய பேருந்து நிலையம் | 1.00 |
| 5 | குழித்துறை | புதிய பேருந்து நிலையம் | 3.70 |
| 6 | தேவகோட்டை | புதிய பேருந்து நிலையம் | 0.20 |
| 7 | சத்தியமங்கலம் | புதிய பேருந்து நிலையம் | 0.75 |
| 8 | கோயம்புத்தூர் மாநகராட்சி– மேட்டுப்பாளையம் சாலை | கூடுதல் பேருந்து நிலையம் | 7.00 |
| 9 | பூவிருந்தவல்லி (பகுதி–2) | கூடுதல் பேருந்து நிலையம் | 1.25 |
| | | மொத்த மதிப்பு | 27.09 |

## எடுத்துக்கொள்ளப்படவுள்ள பணிகள்

| வரிசை எண். | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பு | பணியின் விவரம் | திட்டமதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1 | தாம்பரம் | புதிய பேருந்து நிலையம் | 4.95 |

| | | | |
|---|---|---|---|
| 2 | சாத்தூர் | புதிய பேருந்து நிலையம் | 4.50 |
| 3 | மணலி | புதிய பேருந்து நிலையம் | 0.55 |
| 4 | திண்டிவனம் | புதிய பேருந்து நிலையம் | 6.75 |
| 5 | வாணியம்பாடி | புதிய பேருந்து நிலையம் | 3.30 |
| 6 | திண்டுக்கல் | தற்போதுள்ள பேருந்து நிலைய மேம்பாட்டுப் பணி | 0.39 |
| 7 | ஆரணி | பேருந்து நிலைய மேம்பாட்டுப் பணி | 1.00 |
| 8 | நாகர்கோவில் | அண்ணா பேருந்து நிலைய மேம்பாட்டுப் பணி | 3.00 |
| | | **மொத்த மதிப்பு** | **24.44** |

கட்டி முடிக்கப்பட்ட பேருந்து நிலையங்கள், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் வருவாயை ஈட்டித் தருகின்றன. புதிதாக அமைக்கப்படும் பேருந்து நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டவுடன், இந்நகரங்களில் பொது மக்களுக்கு பலன்தரும் வகையில், மாற்றுத்திறன் படைத்தோருக்கான சாய்தள மேடை, ஓய்வு அறை, பொருட்கள் பாதுகாப்பு அறை, நவீன கழிப்பிடங்கள் முதலியனவற்றுடன் கூடிய நவீன பேருந்து நிலையங்களாக அமையும்.

பேருந்து நிலையங்களை நன்முறையில் பராமரிக்கும் பொருட்டு, பராமரிப்பு மற்றும் மேலாண்மைப் பணிகளை, பராமரிப்புப் பணிகளில் சிறந்த தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. புதிதாகக் கட்டப்பட்டுள்ள கொடைக்கானல் மற்றும் பழனி பேருந்து நிலையங்களுக்கு பன்னாட்டுத் தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

### 3.2.2 நவீன எரிவாயு தகன மேடைகள்

நகராட்சிகளிலுள்ள தகனமேடைகள் மற்றும் சுடுகாடுகளில் இயற்கை எய்தியவர்களை மரபுவழி முறைகளில் எரியூட்டுவதால் சுற்றுச் சூழல் பாதிக்கப்படுகிறது. ஆகையால், இதனை ஒரு சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் நடவடிக்கையாக உருவாக்க, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளால், பகுதி–2 திட்டம் மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதி பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான பங்களிப்புத் தொகை ஆகியவற்றின் நிதி ஆதாரத்துடன் நவீன எரிவாயுத் தகனமேடைகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

2006–07 முதல் 2008–09 வரையிலான ஆண்டுகளில் பகுதி–2 திட்டம் மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதி பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான பங்களிப்புத் தொகை ஆகியவற்றின் கீழ் ரூ.29.17 கோடி மதிப்பீட்டில் 59 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றில் பத்தொன்பது இடங்களில், அதாவது, ஈரோடு, மதுரை, திருச்சிராப்பள்ளி,

திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் சேலம் மாநகராட்சிகளிலும், மாதவரம், கரூர், தர்மபுரி, விழுப்புரம், திருவண்ணாமலை, ஆலந்தூர், அம்பத்தூர், ஆவடி, காஞ்சிபுரம், நாமக்கல், மேட்டூர், செங்கற்பட்டு மற்றும் போடிநாயக்கனூர் நகராட்சிகளிலும், பணிகள் முடிவடைந்துள்ளன. மற்ற இடங்களில் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்திலுள்ளன. அவை விரைவில் முடிக்கப்படவுள்ளன. இந்த எரிவாயுத் தகனமேடைகளை பராமரிக்க அங்கீகரிக்கப்பட்ட சேவை நிறுவனங்கள் மூலம் அறக்கட்டளைகள் அமைக்க வேண்டுமென அரசால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த அறக்கட்டளைகளை ஏற்படுத்தும் சேவை நிறுவனங்கள் அவற்றின் சேவைகளுக்காக சேவை நிதி ஒன்றினை பராமரிப்பதும், பொது மக்களிடமிருந்து நியாயமான சேவைக் கட்டணம் வசூலிப்பதும் தேவைப்படுகிறது. இந்த நிதியானது, எரிவாயுத் தகனமேடைகளை பராமரிக்க பயன்படுத்தப்படும். இயற்கை எய்தியவர்களின் உடலை எடுத்து வர இந்த அறக்கட்டளைகளே ஊர்திகளை இயக்கும்.

ஈரோடு, மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் தூத்துக்குடி மாநகராட்சிகளில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள எரிவாயுத் தகன மேடைகளுக்கு பன்னாட்டுத் தரச்சான்று நிறுவனத்தால் தரச்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. 2009–10–ம் ஆண்டுக்கான, எரிவாயுத் தகனமேடைகளின் செயல்பாட்டினை ஊக்குவிக்கும் வகையில் அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதி பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான பங்களிப்புத் தொகை,

ஈரோடு மற்றும் மதுரை மாநகராட்சிகளில் கூடுதலாக எரிவாயுத் தகன மேடை அமைத்திட முறையே ரூ.0.20 கோடியும் ரூ.0.60 கோடியும் நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது.

### 3.2.3 நவீன இறைச்சிக்கூடங்கள்

சுகாதார முறையில் இறைச்சிக் கூடங்களை நடத்த உள்ளாட்சி அமைப்புகளில் நவீன இறைச்சிக் கூடங்கள் அமைக்கும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இது வரை பகுதி–2 திட்டம் மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதி பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான பங்களிப்புத் தொகை ஆகியவற்றின் நிதி ஆதாரங்களிலிருந்து 121 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில்நவீனஇறைச்சிக்கூடங்கள் அமைக்க ரூ.23.53 கோடி நிதி உதவி அரசால் வழங்கப்பட்டுள்ளது. இதில் 95 பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும். இந்த நவீன இறைச்சிக் கூடங்களின் சுகாதாரமான செயல்பாட்டிற்காக கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையங்கள் உட்பட அனைத்து சுகாதார வசதிகளுடன் கூடியனவாக வடிவமைக்கப்படுகின்றன.

### 3.2.4 பாதாளச் சாக்கடைத் திட்டங்கள்

அனைத்து நகரங்களிலும் பாதாளச் சாக்கடைத் திட்டப்பணிகள் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்ற அரசின் கொள்கை முடிவின்படி, தேசிய நதி நீர்ப் பாதுகாப்புத் திட்டம், தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்–III, ஜவஹர்லால் நேரு

தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதியம் மற்றும் ஜெர்மன் மேம்பாட்டு வங்கி ஆகியவற்றின் நிதி ஆதாரங்களைக் கொண்டு 58 இடங்களில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிகளின் செயலாக்க நிலையின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | இடங்கள் | உள்ளாட்சி அமைப்புகளின் எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1 | தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டம் (மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கும்பகோணம், மயிலாடுதுறை, கரூர் மற்றும் இனாம்கரூர்) | 8 | 575.30 |
| 2 | தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் – III (கடலூர், திண்டுக்கல், நாமக்கல், இராமநாதபுரம், தூத்துக்குடி, உதகமண்டலம், விருதுநகர், வேலூர், புதுக்கோட்டை, சேலம், சிவகங்கை, கிருஷ்ணகிரி, திருவாரூர், தர்மபுரி, திருவண்ணாமலை, மாதவரம், சின்னமனூர், திருவள்ளூர், பெரம்பலூர், அம்பத்தூர், பல்லவபுரம், திருவொற்றியூர், தேனி அல்லிநகரம், நாகப்பட்டினம், மற்றும் காஞ்சிபுரம்) | 25 | 1044.46 |

| | | | |
|---|---|---|---|
| 3 | ஜெர்மன் மேம்பாட்டு வங்கி நிதியுதவி (விழுப்புரம் மற்றும் ஈரோடு) | 2 | 244.89 |
| 4 | ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதியம் (சிதம்பரம், இராமேஸ்வரம் மற்றும் பட்டுக்கோட்டை) | 3 | 92.62 |
| 5 | நகர்ப்புரக் கட்டமைப்பு மற்றும் ஆளுகைக்கான துணை திட்டம் (ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம்) (மதுரை, கோயம்புத்தூர், தாம்பரம், உள்ளகரம் புழுதிவாக்கம், ஆவடி, அம்பத்தூர் மற்றும் மதுரவாயல்) | 7 | 1141.94 |
| 6 | சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உள்கட்டமைப்பு மேம்படுத்தும் திட்டம் (மறைமலைநகர், ஒசூர், அருப்புக்கோட்டை, உடுமலைப்பேட்டை, அறந்தாங்கி, அரியலூர், போடிநாயக்கனூர், திருத்துறைப்பூண்டி, குடியாத்தம் மற்றும் திருவத்திபுரம்) | 10 | 266.14 |
| 7 | பிற நிதியினங்கள் (வளசரவாக்கம் ரூ.20.00 கோடி, ஆலந்தூர் ரூ.34.00 மற்றும் திருப்பூர் ரூ.95.00 கோடி) | 3 | 149.00 |
| | **மொத்தம்** | **58** | **3514.35** |

மேற்கண்டவைத் தவிர, அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் இத்திட்டங்களை பல்வேறு கட்டங்களாக செயல்படுத்தத் தேவையான விரிவான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

பாதாளச் சாக்கடை அமைப்புகள் பராமரிப்பில் பணியாளர்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கும் பொருட்டு ஜெட் ராடிங் இயந்திரம் மற்றும் தூர்வாரும் இயந்திரங்கள் வாங்கப்பட்டு கோயம்புத்தூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் திருப்பூர் மாநகராட்சிகளிலும் மற்றும் அம்பத்தூர், சிதம்பரம், வளசரவாக்கம், கரூர், இனாம் கரூர், கும்பகோணம் மற்றும் மயிலாடுதுறை முதலான நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் தற்போது பயன்பாட்டில் உள்ளன. மேலும், தூத்துக்குடி மாநகராட்சி மற்றும் விருதுநகர், இராமநாதபுரம், திண்டுக்கல், காஞ்சிபுரம் ஆகிய நகராட்சிகளில் ஜெட்ராடிங் இயந்திரங்களும், திருநெல்வேலி மற்றும் திருப்பூர் மாநகராட்சிகள், தஞ்சாவூர், ஆலந்தூர், கரூர், இனாம் கரூர் மற்றும் சாத்தூர் முதலிய நகராட்சிகளில் தூர்வாரும் இயந்திரங்களும் அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதி பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான பங்களிப்புத் தொகை மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி ஆகியவற்றின் நிதி உதவியுடன் வாங்க நடவடிக்கையில் உள்ளது.

**பாதாளச் சாக்கடை வீட்டிணைப்புகள் வழங்குதல்**

பாதாளச்சாக்கடைத்திட்டங்கள் முடிவுற்றுள்ள திருச்சிராப்–பள்ளிராப்பள்ளி, திருநெல்வேலி, மதுரை மற்றும் திருப்பூர் ஆகிய மாநகராட்சிகளிலும், தஞ்சாவூர், மயிலாடுதுறை, கும்பகோணம், கரூர் மற்றும் இனாம் கரூர் ஆகிய நகராட்சிகளிலும் 31.03.2010 வரை 1,14,474 வீட்டிணைப்புகள் வழங்கப்பட்டு திட்டங்கள் பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளன.

**3.2.5 சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்கள்**

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள அனைத்து மண் மற்றும் கற்சாலைகளை சிமெண்ட் மற்றும் தார்ச்சாலைகளாக மாற்ற அரசு பெரும் முயற்சி மேற்கொண்டு வருகிறது. பல்வேறு திட்டங்களின் கீழ் பெறப்படும் நிதி ஆதாரங்களின் உதவியோடு ஒவ்வொரு ஆண்டும் மண் மற்றும் கற்சாலைகளை மேம்படுத்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

**மண் மற்றும் கற்சாலைகளை சிமெண்ட் மற்றும் தார்ச் சாலைகளாக மாற்றுதல்**

2007 ம் ஆண்டு, உள்ளாட்சி அமைப்புகளில், 3356.14 கி.மீ நீளத்திற்கு மண் மற்றும் கற்சாலைகள் இருப்பது ஓர் ஆய்வு மூலம் கண்டறியப்பட்டு அச்சாலைகளை சிமெண்ட் மற்றும் தார்ச் சாலைகளாக படிப்படியாக மாற்றுவதற்காக

பல்வேறு திட்டங்களின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இது வரை 1722.92 கி.மீ மண் மற்றும் கற்சாலைகள், ரூ. 251.03 கோடி செலவில், சிமெண்ட் மற்றும் தார்ச்சாலைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

**இத்திட்டத்தின் கீழ் கடந்த நான்காண்டுகளில் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் பின்வருமாறு.**

| வருடம் | திட்டம் | தரம் உயர்த்தப் பட்டுள்ள சாலைகளின் நீளம் கி.மீ | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| **2006–07** | **பல்வேறு நிதிகளின் கீழ்** | **284.33** | **42.53** |
| 2007–08 | 1. இரண்டாவது மாநில நிதிக்குழு ஒதுக்கீடு, சமச்சீர் மற்றும் ஊக்கத் தொகை. | 138.20 | 21.17 |
| | 2. செலவிடப்படாத தேர்தல் நிதி | 47.87 | 6.91 |
| | 3.பகுதி –2 திட்டம் | 75.06 | 12.06 |
| | 4. பொதுநிதி | 153.30 | 20.83 |
| | 5.அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்தியதற்கான கட்டணத் தொகை | 53.66 | 6.96 |
| | 6.இதரத் திட்டங்கள் | 121.73 | 21.37 |
| | **மொத்தம்** | **589.82** | **89.30** |

| | | | |
|---|---|---|---|
| 2008-09 | 1.பகுதி–2 திட்டம் | 61.72 | 11.18 |
| | 2.கேளிக்கை வரி (2007–08 ஒதுக்கீடு) | 62.59 | 10.58 |
| | 3 அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்தியதற்கான கட்டணத் தொகை | 48.46 | 7.97 |
| | 4.பொதுநிதி | 120.00 | 20.00 |
| | 5.இதரத் திட்டங்கள் | 60.00 | 10.00 |
| | **மொத்தம்** | **352.77** | **59.73** |
| 2009–10 | 1. இயக்க மற்றும் பராமரிப்பு நிதிப்பற்றாக் குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை (2007–08) | 31.28 | 4.93 |
| | 2. இயக்க மற்றும் பராமரிப்பு நிதிப்பற்றாக் குறையை ஈடுசெய்வதற்கான பங்களிப்புத் தொகை (2008–09) | 7.54 | 1.10 |
| | 3.கேளிக்கை வரி ஈடு செய்யும் நிதி (2008–09–ல் ஒதுக்கீடு) | 44.75 | 5.30 |
| | 4.பகுதி 2 திட்டம் | 67.70 | 10.00 |
| | 5.கேளிக்கை வரி ஈடு செய்யும் நிதி (2009–10) | 24.60 | 3.62 |
| | 6.பொதுநிதி மற்றும் இதர நிதிகள் | 320.13 | 34.52 |
| | **மொத்தம்** | **496.00** | **59.47** |

2007–08 ஆம் ஆண்டில், 36 நகராட்சிகளும், ஈரோடு மாநகராட்சியும் மண் மற்றும் கற்சாலைகள் இல்லாதவையாக அறிவிக்கப்படும் என அரசால் அறிவிக்கப்பட்டது. அதன்படி மேற்குறிப்பிட்ட 37 நகரங்களில் ரூ.10.58 கோடி மதிப்பீட்டில் 300 சாலைப்பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

2010–11ஆம் ஆண்டிற்கான, 500 கி.மீ நீள மண் மற்றும் கற்சாலைகள் ரூ.60.00 கோடி மதிப்பீட்டில், 2010–11க்கான பகுதி–II திட்டம், கேளிக்கை வரி இழப்பீட்டு நிதி, அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதி பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான பங்களிப்புத் தொகை மற்றும் பொது நிதிகள் ஆகியவற்றின் கீழ் சிமெண்ட் மற்றும் தார்ச்சாலைகளாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளன.

### 3.2.6 குடிநீர்த் திட்டங்கள்

கீழ்க்காணும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் பொதுமக்களுக்கு தினசரி குடிநீர் வழங்கும் நோக்கத்தில், கீழ்க்கண்ட நிதி ஆதாரங்களைப் பயன்படுத்தி குடிநீர் வழங்கு திட்டங்களை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்டம் | திட்டங்களின் எண்ணிக்கை | திட்டமதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்–III | 8 | 390.57 |

| | | | |
|---|---|---|---|
| 2 | நகர்ப்புர அடிப்படை கட்டமைப்பு மற்றும் ஆளுமைக்கான துணை இயக்கம் (ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம்) | 13 | 910.71 |
| 3 | சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுத் திட்டம் (ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம்) | 25 | 340.12 |
| 4 | ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதியம் (JICA) | 1 | 143.00 |
| 5 | ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW) | 1 | 22.22 |
| | **மொத்தம்** | **48** | **1806.62** |

இது வரை, குடிநீர்த் திட்டங்கள் அரசு பொதுத்துறை நிறுவனங்களான, சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக செயல்படுத்தப்பட்டு வந்தன. உள்ளாட்சி அமைப்புகளின் செயல்திறன் மேம்பாட்டு விழிப்புணர்வு காரணமாக பல்வேறு மாநகராட்சிகள் மற்றும் சிறப்புநிலை தேர்வுநிலை நகராட்சிகள் தாங்களாகவே புதிய குடிநீர்த் திட்டங்களை செயல்படுத்தத் தொடங்கியுள்ளன.

கீழ்க்காணும் உள்ளாட்சி அமைப்புகளால் குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

| வ. எண் | இடம் | திட்டம் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| 1 | மதுரை மாநகராட்சி | நகர்ப்புர அடிப்படை கட்டமைப்பு மற்றும் ஆளுகைக்கான துணை இயக்கம் (ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம் ) | 59.32 | பணி முடிவடைந்–துள்ளது |
| 2 | போடி–நாயக்கனூர் | தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்– III | 2.32 | பணி முடிவடை–ந்துள்ளது |
| 3 | பொள்ளாச்சி | தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்– III | 8.64 | பணி முடிவடைந்–துள்ளது |
| 4 | தேவக்–கோட்டை | சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுத் திட்டம் | 0.30 | பணி முடிவடைந்–துள்ளது |
| 5 | கரூர் | சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுத் திட்டம் | 1.10 | பணி முடிவடைந்–துள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | கோபிச்செட்டி பாளையம் | தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்– III | 4.05 | பணி முடிவடைந்–துள்ளது |
| 7 | கோயம்புத்தூர் மாநகராட்சி | நகர்ப்புர அடிப்படை கட்டமைப்பு மற்றும் ஆளுகைக்கான துணை இயக்கம் (ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம்) | 113.74 | பணி நடைபெற்று வருகிறது |
| 8 | ஈரோடு மாநகராட்சி | சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுத் திட்டம் | 5.88 | பணி நடைபெற்று வருகிறது |
| 9 | தஞ்சாவூர் | சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுத் திட்டம் | 9.04 | பணி நடைபெற்று வருகிறது |
| 10 | சேலம் மாநகராட்சி | தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்– III | 283.09 | ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது |
| | **மொத்தம்** | | **487.48** | |

## நவீன குடிநீர் மேலாண்மை அமைப்புகள்

குடிநீர்த் திட்டத்தில் குடிநீர் பெறும் அளவு, மோட்டார் மற்றும் பம்புகளின் செயல்திறன் மற்றும் குடிநீரின் தரத்திற்கான பௌதீகம் மற்றும் வேதியியல் தன்மைகளை அறியவும் குடிநீர்த் திட்டத்தினை கணினி மூலம் தேவையான பகுதிகளை ஒருங்கிணைத்து விவரங்களைச் சேகரித்துக் கண்காணிக்கும் (SCADA) அமைப்பு திருநெல்வேலி மாநகராட்சியில் ரூ.3.15 கோடி செலவில் நிறுவப்பட உள்ளது. மதுரை மாநகராட்சியில், இரண்டாவது வைகைக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தில், தேவையான பகுதிகளைக் கணினி மூலம் ஒருங்கிணைத்து விவரங்களைச் சேகரித்துக் கண்காணிக்கும் அமைப்பினை (SCADA) ரூ.2.50 கோடி செலவில் நிறுவப்பட உள்ளது. கோயம்புத்தூர் மாநகராட்சியில், இரண்டாவது பில்லூர் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தில், இதே அமைப்பினை ரூ.4.00 கோடி செலவில் 2010–11–ம் ஆண்டுக்கான பகுதி–II திட்ட நிதியிலிருந்து நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## குடிநீர்த் திட்டங்களுக்குத் தொடர் மின் சக்தி வழங்குதல்

பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள 52 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் குடிநீர் அமைப்பில் தொடர்ந்து பம்புகளை இயக்க ஏதுவாக. ரூ.7.59 கோடி மதிப்பீட்டில் மின் ஆக்கிகளை 2006–07 லிருந்து 2009–10–க்குள் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச்செலவினத்தை பகுதி–2 திட்ட நிதியிலிருந்தும், அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான

நிதி பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான பங்களிப்புத் தொகையிலிருந்தும் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் 45 உள்ளாட்சிகளில் இப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**குடிநீர் வீட்டிணைப்புகளுக்கு ஒரே மாதிரியான கட்டணங்களை நிர்ணயித்தல்**

பொது மக்களுக்குத் தடையின்றி குடிநீர் வீட்டிணைப்புகள் கிடைத்திட ஏதுவாக குடிநீர் வீட்டிணைப்புகளுக்கு உள்ளாட்சி அமைப்புகள் அனுமதி வழங்குவது அரசால் பரவலாக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டபின் **31.03.2010** தேதிய நிலவரப்படி மொத்தம் **1,67,061** புதிய குடிநீர் வீட்டிணைப்புகள் உள்ளாட்சி அமைப்புகளால் வழங்கப்பட்டுள்ளன. மாநகராட்சிகளில் **47,675** இணைப்புகளும், நகராட்சிகளில் **1,19,386** இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.

### 3.2.7 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு அலுவலகக் கட்டடங்கள்

நகர்ப்புர பொதுமக்கள், நகராட்சி அலுவலகங்களை எளிதாக அணுகி சேவைகளைப் பெறுவதற்கும், அவ்வலுவலகங்களில் பணிபுரியும் அலுவலர்களின் பணித்திறனை அதிகரித்து நல்ல பணிச்சூழலை ஏற்படுத்தவும், நவீன அலுவலகக் கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கென அரசால் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | ஆண்டு | திட்டம் | உள்ளாட்சி அமைப்புகளின் எண்ணிக்கை | அனுமதிக் கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | 2007–08 | பகுதி –2 திட்டம் | 9 | 3.08 |
| 2 | 2008–09 | பகுதி –2 திட்டம் | 10 | 3.10 |
| 3 | 2007–08 | அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதி பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான பங்களிப்புத் தொகை | 37 | 25.69 |
| 4 | 2008–09 | அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதி பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான பங்களிப்புத் தொகை | 1 | 0.50 |
| 5 | 2008–09 | இயக்க மற்றும் பராமரிப்பு நிதிப்பற்றாக் குறையை ஈடுசெய்வதற்கான பங்களிப்புத் தொகை | 2 | 0.85 |
| 6 | 2009–10 | அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதி பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான பங்களிப்புத் தொகை | 5 | 6.25 |
| | | மொத்தம் | 64 | 39.47 |

மேற்சொன்ன 64 பணிகளில், 31.03.2010 அன்றைய நிலவரப்படி, 14 பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

### 3.2.8 பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பள்ளிகளில் ரூ.100.00 கோடி மதிப்பீட்டில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும் என அரசு 2008–09ம் ஆண்டில் அறிவித்துள்ளது. அதன் அடிப்படையில், நகராட்சி மற்றும் மாநகராட்சிக் கல்வி நிதியினைப் பயன்படுத்தி நகராட்சி மற்றும் மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு அடிப்படை வசதிகள் மற்றும் ஆய்வுக்கூடங்கள் அமைக்க நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. இதுகாறும், 100 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், 1133 பள்ளிகளில், 1684 பணிகள், ரூ.124.63 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. 31.03.2010 நிலவரப்படி, இதுவரை ரூ.65.95 கோடி செலவில், 1156 பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும். இப்பணிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல், கூடுதல் கணினிகள் வாங்குதல், ஆய்வகங்களை மேம்படுத்துதல், சுற்றுசுவர் அமைத்தல், சைக்கிள் நிறுத்துமிடம், மின் வசதி, குடிநீர் வசதி, தளவாடப் பொருட்கள் வாங்குதல் மற்றும் கழிவறைகள் கட்டுதல் போன்றப் பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளன.

### 3.2.9 தமிழ்நாடு நகர்ப்புர சாலைக் கட்டமைப்புத் திட்டம்

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், பாதாளச் சாக்கடைத் திட்டங்களை பல்வேறு கட்டங்களாக செயல்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. முதற்கட்டமாக பதினோறு உள்ளாட்சி அமைப்புகளில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் முடிவுற்றவுடன், இந்த உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள சாலைகளை மேம்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதற்கென "தமிழ்நாடு நகர்ப்புர சாலை கட்டமைப்புத் திட்டம்" என்ற புதிய திட்டத்தினை அரசு அறிவித்து பாதாளச் சாக்கடைத் திட்டம் முடிவுற்ற 11 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள சாலைகளை மேம்படுத்த அரசாணை (நிலை) எண் 235 ந.நி. (ம)குவ துறை நாள்.27.11.2008–ல் ஆணைகள் பிறப்பித்துள்ளது.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் சாலை அமைக்கும் பணியினை மேற்கொள்ளும் பொருட்டு, திட்ட வடிவமைப்பு, மேற்பார்வை மற்றும் மேலாண்மை போன்றப் பணிகளுக்கு 6 கலந்தாய்வர் நிறுவனங்கள் தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு மற்றும் நிதிச் சேவைகள் நிறுவனத்தால் (TNUIFSL) நியமிக்கப்பட்டு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

## 3.2.10 உள்கட்டமைப்பு மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதிகள்

நிதித் தேவை மற்றும் நிதி இருப்பு ஆகியவற்றிற்கு இடையிலான இடைவெளியினை ஈடு செய்யும் பொருட்டு, மாநில அளவில் உள்கட்டமைப்பு நிரப்பும் நிதி மற்றும் இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்பும் நிதி ஆகிய தனித்தனியான நிதிகளை அரசு ஏற்படுத்தி உள்ளது. இவற்றின் கீழ் அனுமதிக்கப்பட்ட நிதியினைப் பயன்படுத்தும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் விவரம் பின்வருமாறு:

### உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி

| வருடம் | பயனடையும் உள்ளாட்சி அமைப்புகள் | அனுமதிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 2007–08 | 60 | 24.50 |
| 2008–09 | 46 | 24.91 |
| 2009–10 | 45 | 31.86 |
| மொத்தம் | 151 | 81.27 |

### இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்பும் நிதி

| வருடம் | பயனடையும் உள்ளாட்சி அமைப்புகள் | அனுமதிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 2007–08 | 33 | 16.34 |
| 2008–09 | 26 | 16.61 |
| 2009–10 | 46 | 21.23 |
| மொத்தம் | 105 | 54.18 |

### 3.2.11 அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

2008–09 மற்றும் 2009–10 ஆம் ஆண்டுகளில் நிதி நிலையில் நலிவுற்ற முப்பது நகராட்சிகளில் தலா ரூ.0.75 கோடி மதிப்பீட்டில் "அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" செயல்படுத்தப்படும் என ஏப்ரல், 2008ல் சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டது. அதற்கிணங்க, இந்நகராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு, அரசாணை (நிலை) எண். 232. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.08–ல் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள ரூ.22.50 கோடி மானியம் அரசால் வழங்கப்பட்டது.

i) குடிநீர் வழங்கல் மேம்படுத்துதல்

ii) அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல்

iii) பேருந்து நிலையங்களை மேம்படுத்துதல்

iv) சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்கள் அமைத்தல்

v) பூங்காக்கள் அமைத்தல், பொதுக்கழிப்பிடங்கள் கட்டுதல், தெருவிளக்குகள் மற்றும் பேருந்து நிறுத்தங்களில் நிழற்குடைகள் அமைத்தல் மற்றும் மயானங்களுக்கு அணுகுச்சாலைகள் அமைத்தல்

இந்நகராட்சிகளில், ரூ.24.02 கோடி மதிப்பீட்டில் (அரசு மானியம் ரூ.22.50 கோடி மற்றும் நகராட்சி நிதி ரூ.1.52 கோடி) மொத்தம் 208 பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்

கொள்ளப்பட்டன. இவற்றில், **31.03.2010** அன்றைய நிலவரப்படி, **198** பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள **10** பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

## 3.3 அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் உள்ள மனைகளை வரன் முறைப்படுத்துதல்

**31.12.2006** வரை அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை வரன்முறைப்படுத்துவதற்கு **25.7.2006** அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் வரன்முறைக் கட்டணம், **05.06.2009** வரை வசூல் செய்யவும் கால நீட்டிப்பு வழங்கி ஆணையிடப்பட்டது. இக்காலக்கட்டத்தில், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளால் ரூ.**98.94** கோடி வரன்முறை கட்டணத் தொகையாக வசூல் செய்யப்பட்டுள்ளது. இத்தொகை புதியதாக வரன்முறைப்படுத்தப்பட்ட மனைப் பிரிவுகளில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

## 3.4 ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம்

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம், ஒருங்கிணைந்த அணுகுமுறை மூலம் திட்டச்செயலாக்க நகரங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டில், சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மூன்று நகரங்கள் திட்டச் செயலாக்க நகரங்களாகும்.

இத்திட்டத்தின் கீழ் உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் கீழ்க்காணும் மூன்று துணைத் திட்டங்கள் மூலம் நிறைவேற்றப்படுகின்றன.

(i) அ) நகர்ப்புரஉள்கட்டமைப்புமற்றும்ஆளுமைக்கான துணை இயக்கம்.

ஆ) நகர்ப்புர வறியோர்க்கான அடிப்படை வசதி சேவைகளுக்கான துணை இயக்கம்

(ii) சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுத் திட்டம்

(iii) ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

### 3.4.1 நகர்ப்புர உள்கட்டமைப்பு மற்றும் ஆளுகைக்கான துணை இயக்கம்

**மதுரை மாநகராட்சி**

மதுரை மாநகராட்சியில், இரண்டாம் வைகைக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், திடக்கழிவு மேலாண்மை, மழை நீர் வடிகால் அமைத்தல், பாதாளச் சாக்கடைத் திட்டம், வைகை ஆற்றின் குறுக்கே மூன்று இடங்களில் தடுப்பணைகள் கட்டுதல் போன்றப் பணிகளுக்கு ரூ.623.91 கோடி மதிப்பீட்டில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டங்களில் இரண்டாம் வைகை குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் வைகை ஆற்றின் குறுக்கே மூன்று இடங்களில் தடுப்பணைகள் கட்டுதல் ஆகியன முடிக்கப்பட்டு, 24.10.2009 அன்று முதல் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளன. இதரப் பணிகள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

மேலும், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மதுரை மாநகருக்கு அருகிலுள்ள நகராட்சிகளில் ரூ.137.06 கோடி மதிப்பீட்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | திட்டங்கள் | திட்ட மதிப்பீட்டுத் தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | திருப்பரங்குன்றம் குடிநீர்த் திட்டம் | 9.70 |
| 2 | ஆனையூர் குடிநீர்த் திட்டம் | 7.88 |
| 3 | திருமங்கலம் குடிநீர்த் திட்டம் | 58.74 |
| 4 | அவனியாபுரம் குடிநீர்த் திட்டம் | 60.74 |
| | **மொத்தம்** | **137.06** |

### கோயம்புத்தூர் மாநகராட்சி

கோயம்புத்தூர் மாநகராட்சியில் கீழ்க்காணும் 4 திட்டங்களுக்கு ரூ767.38 கோடி மதிப்பீட்டில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்டங்கள் | திட்ட மதிப்பீட்டுத் தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் | 96.51 |
| 2 | இரண்டாவது பில்லூர் குடிநீர்த் திட்டம் | 113.74 |
| 3 | பாதாளச் சாக்கடைத் திட்டம் | 377.13 |
| 4 | மழை நீர் வடிகால்கள் | 180.00 |
| | **மொத்தம்** | **767.38** |

இத்திட்டங்களில், திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. இதர திட்டப் பணிகள் செயலாக்கத்தில் உள்ளன.

## சென்னைப் பெருநகருக்கு அருகிலுள்ள நகர்ப்புரப் பகுதிகள்

சென்னைப் பெருநகருக்கு அருகிலுள்ள நகராட்சிகளுக்கு குடிநீர்த் திட்டம், பாதாளச் சாக்கடைத் திட்டம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை ஆகிய 13 திட்டங்களுக்கு ரூ.1180.26 கோடி மதிப்பீட்டில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

தாம்பரம் நகராட்சியில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் முடிவடைந்துள்ளது. எஞ்சியுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

### 3.4.2 சீர்திருத்தங்கள்

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மத்திய அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி, மாநில அரசுகள் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் கட்டாயச் சீர்திருத்தங்கள் மற்றும் விருப்பச் சீர்திருத்தங்களை செயல்படுத்த வேண்டும். மாநில அளவில் கீழ்க்காணும் கட்டாயச் சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

| வ. எண் | சீர்திருத்தங்கள் | குறிப்பு |
|---|---|---|
| 1 | 74வது அரசமைப்பு திருத்தச் சட்டத்தில் கண்டுள்ள அதிகாரப் பரவலாக்கலைச் செயல்படுத்துவது | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி தவிர இதர செயல்பாடுகள் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றப்பட்டுள்ளன. மாவட்டத் திட்டக் குழுக்கள் உருவாக்கப்பட்டு செயல்படுகின்றன. |
| 2 | நகரத் திட்டமிடல் பணிகளை நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றுதல் | நடைமுறையில் உள்ளது. |
| 3 | நகர்ப்புர நில உச்ச வரம்புச் சட்டம் | நகர்ப்புர நில உச்ச வரம்புச் சட்டம் ஏற்கனவே விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 4 | பொது மக்களுக்குத் தகவல் தருவதற்கான சட்டத்தைத் செயல்படுத்துதல் | நகராட்சி மற்றும் மாநகராட்சிச் சட்டங்களில் சட்டத்திருத்தம் மூலம் வகைமுறைகள் சேர்க்கப்பட்டுள்ளன. திருத்தச் சட்டம் மற்றும் விதிகள் 1.9.2009 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. |
| 5 | வாடகை கட்டுப்பாட்டுச் சட்டம் | தற்போதுள்ள 1921–ஆம் ஆண்டு சென்னை மாநகர வாடகைக்கு குடியிருப்போர் பாதுகாப்புச் சட்டம் மற்றும் விதிகள் 1970–ன்படி வாடகைக்கு குடியிருப்போர் மற்றும் நிலச் சொந்தக்காரர் ஆகிய இருசாராருக்கும் பயனுள்ளதாக உள்ளன. |
| 6 | முத்திரை வரியைக் குறைத்தல் | முத்திரை வரி 13 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இந்த 8 சதவீத்தில் தற்போது 2 சதவீதம் மிகுமுத்திரை வரியாக வசூலித்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படுகிறது. |

## உள்ளாட்சி அமைப்பு அளவிலான சீர்திருத்தங்கள்

| | | |
|---|---|---|
| 1 | சொத்து வரி | நிறைவேற்றப்பட்டுள்ளது. |
| 2 | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் இரட்டைக் கணக்கீட்டு முறையினை செயல்படுத்துதல் | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் இயல்பு நிலைக் கணக்கீட்டு முறை (Accrual Based Accounting System) செயல்பட்டுவருகிறது. |

| | | |
|---|---|---|
| 3 | நிலம் (ம) சொத்துக்களைப் பதிவு செய்யும் முறையில் கணினி முறையைப் புகுத்துதல் | 568 சார்பதிவாளர் அலுவலகங்களுள் 450 அலுவலகங்களில் கணினி முறையில் பதிவு செய்வது நடைமுறைப்படுத்தப்பட்டுவிட்டது. |
| 4 | மின்னணு ஆளுகையை (e-governance) நடைமுறைப்படுத்துதல் | 16 தொகுப்புச் சேவைகள் (modules) கணினி மயமாக்கப்பட்டு விட்டன. |
| 5 | நகர்ப்புர ஏழைமக்களுக்கு அடிப்படை வசதிகளுக்கான நிதி ஒதுக்கீடு (Internal earmarking) | அரசாணை எண்(ப) 167, நநி(ம)குவ துறை, நாள் 15.4.2008–ல் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்களிலிருந்து குறைந்தபட்சம் 25 சதவீதம் நகர்ப்புர வறியோர்க்கான அடிப்படை வசதிகளுக்கு ஒதுக்க உத்தரவிடப்பட்டுள்ளது. |

## விருப்பச் சீர்திருத்தங்கள்

| | | |
|---|---|---|
| 1 | அனைத்துக் கட்டடங்களிலும் மழைநீர் சேகரிக்கும் வசதி ஏற்படுத்துதல் | 1972–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டட விதிகளின், விதி 3ஏன்படி அனைத்துக் கட்டடங்களிலும் மழை நீர் சேமிப்பு வசதி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 2 | கழிவுநீரைச் சுத்திகரித்து மீண்டும் பயன்படுத்துதல் | 1972–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டட விதிகளின், விதி 17ஏன்படி கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு மறுபயன்பாட்டிற்கு வழிவகைச் செய்யப்பட்டுள்ளது. |
| 3 | நிர்வாக அமைப்பில் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துதல் | சுயவிருப்ப ஒய்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல், திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தை தனியார்மயமாக்கல் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளில் பொது வெளிக்கொணர்தல் வகைமுறைகள், விதிகளை அறிமுகப்படுத்துதல் (Public Disclosure Provisions) போன்ற நிர்வாகச் சீர்திருத்தங்களை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. |
| 4 | நலிவடைந்த மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு மானிய உதவி முறையில் 20–25 சதவீத அளவிற்கு மனைகள் ஒதுக்கீடு செய்தல் | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் நலிவடைந்த மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு ஏற்கனவே 40 சதவீதம் அளவிற்கு மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுவருகிறது. சென்னைப் பெருநகர மேம்பாடு விதிகளின்படி குறைந்தது 10 சதவீதம் மனைகள் நலிவடைந்த பிரிவினருக்கு கட்டாயமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுவருகிறது. |

| | | |
|---|---|---|
| 5 | பொதுமக்கள் தனியார் பங்களிப்பு | திடக்கழிவு மேலாண்மைப் பணிகள், தெருவிளக்குகளைப் பராமரித்தல், நீரேற்றும் நிலையம், எரிவுாயுத்தகனமேடைகளைப் பராமரித்தல், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய பராமரிப்புப் பணிகள், வாகனங்களை வாடகைக்கு எடுத்தல் போன்றவற்றில் தனியார் பங்களிப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுவருகிறது. மாநில அரசு நிதித் துறையில் பொது மக்கள் தனியார் பங்களிப்பு குறித்த பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. |

### 3.4.3 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உள்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ், குடிநீர் விநியோகம், சாலைகள் மற்றும் வடிகால்கள், திடக்கழிவு மேலாண்மை மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டம் போன்ற நகர்ப்புர உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டம், நகர்ப்புர உள்கட்டமைப்பு மற்றும் ஆளுகைக்கான துணை திட்டத்தின் கீழ் வராத நகரங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகள்:

| வ. எண் | திட்டத்தின் பெயர் | உள்ளாட்சி அமைப்புகள் | ஒதுக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) | பணிகளின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|
| | | | | எடுத்துக் கொள்ளப் பட்டவை | முடிவுற்றவை (31.03.2010 வரை) |
| 1 | பகுதிI | | | | |
| | சாலை மற்றும் வடிகால் அமைத்தல் | 13 | 59.83 | 272 | 241 |
| | குடிநீர் விநியோகம் | 10 | 81.68 | 10 | 4 |
| 2 | பகுதி II | | | | |
| | சாலை மற்றும் வடிகால் அமைத்தல் | 3 | 9.58 | 197 | 194 |
| | குடிநீர் விநியோகம் | 6 | 28.42 | 6 | 2 |
| | திடக்கழிவு மேலாண்மை | 1 | 3.58 | 1 | 0 |
| | பாதாளச் சாக்கடைத் திட்டம் | 1 | 3.75 | 1 | 0 |
| 3 | பகுதி III | | | | |
| | குடிநீர் விநியோகம் | 5 | 192.66 | 5 | 5 |
| 4 | பகுதி IV | | | | |
| | குடிநீர் விநியோகம் | 3 | 28.63 | 3 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பாதாளச் சாக்கடைத் திட்டம் | **8** | **236.84** | **8** | **0** |
| **5** | **பகுதி V** | | | | |
| | குடிநீர் விநியோகம் | **1** | **6.16** | **1** | **0** |
| | பாதாளச் சாக்கடைத் திட்டம் | **1** | **25.55** | **1** | **0** |
| | **மொத்தம்** | **52** | **676.68** | **505** | **446** |

நிலுவையிலுள்ள பணிகள் அனைத்தும் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்திலுள்ளன.

## 3.5 நகர்ப்புர வறுமை ஒழிப்புத் திட்டங்கள்

### 3.5.1 பொன்விழா ஆண்டு நகர்ப்புர வேலை வாய்ப்புத் திட்டம்

மத்திய அரசின் நிதியுதவியுடனான பொன் விழா ஆண்டு நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டம் (சுவர்ண ஜெயந்தி சகரி ரோஸ்கார் யோஜனா) 1.12.1997 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் புதிய வழிகாட்டி நெறிமுறைகள் மத்திய அரசால் 1.4.2009 அன்று வெளியிடப்பட்டு அன்று முதல் நடைமுறையிலுள்ளது. இத்திட்டம் 75 : 25 என்ற விகிதாச்சாரத்தின் அடிப்படையில் மத்திய மாநில அரசுகளின் நிதிப் பங்களிப்பில் கூடிய திட்டமாகும்.

புதிய வழிகாட்டி நெறிமுறைகளின்படி பொன்விழா ஆண்டு நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டத்தின் 5 முக்கியக் கூறுகள் பின்வருமாறு:–

i) நகர்ப்புர சுயவேலைவாய்ப்புத் திட்டம் (USEP)

ii) நகர்ப்புர மகளிர் சுய உதவித்திட்டம் (UWSP)

iii) நகர்ப்புர ஏழை மக்களுக்கான வேலைவாய்ப்பு முன்னேற்றத்திற்கான சுய தொழில் திறன் பயிற்சி (STEP – UP)

iv) நகர்ப்புர கூலி வேலைவாய்ப்புத்திட்டம் (UWEP)

v) நகர்ப்புர சமுதாய முன்னேற்றக் கூட்டமைப்பு (UCDN)

**நகர்ப்புர சுய வேலைவாய்ப்புத் திட்டம்**

இத்திட்டம் இரு உட்பிரிவுகளைக் கொண்டது. அவை,

(i) நகர்ப்புரப் பகுதிகளில், ஏழ்மை நிலையில் வாழ்கின்ற மக்களுக்கு சுய தொழில் தொடங்கவும், சிறு வணிகம் ஏற்படுத்திக் கொள்ளவும் (கடன் மற்றும் மானியம்) உதவுதல்

(ii) நகர்ப்புர ஏழை மக்களுக்கு பொருட்களை உற்பத்தி செய்யவும், விற்பனைச் செய்யவும் தொழில்நுட்பம்/

விற்பனை/உள்கட்டமைப்பு மற்றும் பிற உதவிகளை வழங்குதல்.

## நகர்ப்புர பெண்கள் சுய உதவித்திட்டம்

இத்திட்டம் இரு உட்பிரிவுகளைக் கொண்டது, அவை;

(i) நகர்ப்புர ஏழை மகளிர் குழுக்களுக்கு இலாபகரமான வேலைவாய்ப்பு அமைக்க உதவி செய்தல் (UWSP) (கடன் மற்றும் மானியம்)

(ii) நகர்ப்புரத்தில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும், சிக்கனம் மற்றும் கடன் சங்கங்களுக்கும் சுழல் நிதி (Revolving Fund) வழங்குதல்.

## நகர்ப்புர ஏழை மக்களிடையே வேலைவாய்ப்பு வசதிகளை மேம்படுத்த திறன் பயிற்சி

பொன்விழா ஆண்டு நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டத்தின் **(SJSRY)** மூலம் நகர்ப்புரங்களில் ஏழ்மை நிலையில் வாழ்கின்ற மக்களுக்குத் திறன் பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்கள் சுய தொழில் தொடங்குவதற்கு அல்லது நல்ல ஊதியம் உள்ள பணியில் அமர்வதற்கு வழிவகை செய்யப்படுகிறது. திறன் வளர்ப்புப் பயிற்சிக்கு ஒவ்வொரு பயனாளிக்கும் செலவிடப்படும் தொகை நடப்பாண்டில் ரூ.2000/–லிருந்து ரூ.10000மாக

உயர்த்தப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சி நிறுவனத்தின் மூலம் பயனாளிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டு, பயிற்சி பெற்றதற்கான சான்றிதழும் வழங்கப்படுவதோடு, அந்நிறுவனமே அவர்களைப் பணியிலும் அமர்த்த வழிவகை செய்யப்பட்டு வருகின்றது. இதன் மூலம் பயிற்சி பெற்றவர்களுக்கு இலாபகரமான பணி வழங்கவும் அல்லது சுய வேலைவாய்ப்பை பெறுவதற்கான முழு திறனைப் பெறவும் இத்திட்டம் உதவுகிறது.

## நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டம்

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் பயனாளிகளின் உழைப்பைப் பயன்படுத்தி சமூகம் மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் பொதுச் சொத்துக்களை உருவாக்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். **1991** ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, **5** இலட்சம் மக்கள் தொகைக்கு குறைவாக மக்கள் தொகை கொண்ட நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் **60 : 40** என்ற விகிதாசாரத்தின் அடிப்படையில் பொருட்கள் மற்றும் பயனாளிகளின் உழைப்பையும் கொண்டதாகும். சமுதாய மேம்பாட்டுச் சங்கங்களால் பணிகள் அடையாளம் காணப்படுகின்றன.

## நகர்ப்புர சமுதாய முன்னேற்றக் கூட்டமைப்பு

சமுதாய முன்னேற்றம் மற்றும் அதிகாரப் பகிர்வு ஆகியவையே பொன் விழா ஆண்டு வேலைவாய்ப்புத் திட்டத்தின் அடித்தளமாக அமைகின்றன. பாரம்பரிய முறையான மேல் இருந்து இயக்குதல் என்ற கொள்கையின் மூலம் இத்திட்டத்தினை செயல்படுத்துவதை விட நகர்ப்புர வறுமையை நிரந்தரமாக ஒழிப்பதற்கு சமுதாய அமைப்புகளை உருவாக்குவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் பொருட்டு அண்டைப் பகுதி குழுக்கள் (NHGs), அண்டை பகுதி கமிட்டிகள்(NHCs) மற்றும் சமுதாய மேம்பாட்டுச் சங்கங்கள்(CDSs) போன்ற சமுதாய அமைப்புகளை உருவாக்குவதை இத்திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது.

இத்திட்டத்தில், சமுதாய மேம்பாட்டுச் சங்கங்கள் தங்கள் பகுதிக்கு ஏதுவானத் திட்டங்களைத் தேர்ந்தெடுக்கின்றன. சுய உதவிக் குழுக்களை ஏற்படுத்துவது, சமுதாய மேம்பாட்டுச் சங்கங்களின் முக்கிய நடவடிக்கையாகும். அண்டைப் பகுதி குழுக்கள், அண்டைப் பகுதி கமிட்டிகள், மற்றும் சமுதாய மேம்பாட்டுச் சங்கங்கள் குறித்த விவரங்கள் பின் வருமாறு:-

1. அண்டைப் பகுதி குழுக்கள் – 80956
2. அண்டைப் பகுதி கமிட்டிகள் – 9364
3. சமுதாய மேம்பாட்டுச் சங்கங்கள் – 780

**2009–10 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதி**

**(ரூ. கோடியில்)**

| ஆண்டு | மத்திய அரசின் பங்கு | தமிழ்நாடு அரசின் பங்கு | மொத்தம் |
|---|---|---|---|
| **2009–10** | **38.17** | **12.72** | **50.89** |

பொன்விழா ஆண்டு நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 2010–11 ஆம் ஆண்டிற்கான உத்தேச நிதியாக ரூ.68.17 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், இந்திய அரசின் பங்கு ரூ. 41.99 கோடியாகும், மாநில அரசின் பங்கு ரூ. 16.18 கோடியாகும்.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், சமுதாய அமைப்பாளர்களாக, பணிபுரிபவர்களுக்கு காலமுறை ஊதியம், அரசாணை (நிலை) எண்.128 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்.30.10.2006 ல் வழங்கப்பட்டுள்ளது. இதைத் தவிர, அரசாணை (நிலை) எண்.264, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.12.2008–ன்படி 133 சமுதாய அமைப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ரூ. 5200–20200 (2000 GP) என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

### 3.5.2 ஒருங்கிணைந்த குறைந்த செலவிலான சுகாதாரத் திட்டம்

நகரங்களின், சுகாதாரத்தை மேம்படுத்த பொருளாதாரத்தில் பின்தங்கியோருக்கும் கழிப்பறை இல்லாத

வீடுகளுக்கும் கழிப்பறை கட்டும் திட்டம், மத்திய அரசால், 2008–ம் ஆண்டு அறிவிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் ஒரு அலகின் மொத்த மதிப்பீடு ரூ.10000 ஆகும். இதில் 10 சதவீதம், பயனாளிகளின் பங்குத் தொகையாகும். இத்திட்டம் முதற்கட்டமாக, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்ட செயலாக்க நகரங்கள் மற்றும் செயலாக்க நகரங்களைச் சுற்றியுள்ள நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள், கோவில் நகரங்கள் மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த நகரங்கள் ஆகியவற்றில் மேற்கொள்ளப்படும்.

### 3.5.3 நகர்ப்புர ஏழைகளுக்கான வீட்டுவசதி

#### நகர்ப்புர ஏழைகளுக்கான அடிப்படை வசதித்திட்டம்(BSUP)

ஜவஹர்லால்நேருதேசியநகர்ப்புரபுனரமைப்புத்திட்டத்தின் முக்கிய துணை இயக்கங்களான நகர்ப்புர ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டம் (BSUP), ஒருங்கிணைந்த குடிசைப் பகுதி மேம்பாட்டுத்திட்டம் (IHSDP) ஆகியவற்றின் முக்கிய நோக்கம் ஏழைகளுக்கான அடிப்படை வசதிகளை அளிப்பதும் மற்றும் அரசின் தற்போதைய சேவைகளான சுகாதாரம், கல்வி, சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்வதும் ஆகும்.

நகர்ப்புர ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டம், மூன்று திட்ட செயலாக்க நகரங்களான சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களிலும், மற்றும் அந்நகரங்களைச்

சுற்றியுள்ள நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் செயல்படுத்தப்படுகின்றது.

நகர்ப்புர ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டத்தின் கீழ் இத்திட்ட காலத்திற்கு (2005–2012) ரூ.1032.80 கோடியினை கூடுதல் உதவித் தொகையாக மத்திய அரசு, தமிழ் நாட்டிற்கு ஒதுக்கீடு செய்துள்ளது. இதுவரை 51 திட்டங்களுக்கு, திட்ட நிதியாக, ரூ.2327.30 கோடி அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இதில், மத்திய அரசின் உதவித் தொகை ரூ.1041.79 கோடி ஆகும்.

| செயலாக்க முகமை | திட்டங்களின் எண்ணிக்கை | குடியிருப்பு அலகுகள் | உள்கட்டமைப்புப் பணிகள் | திட்ட மதிப்பீடு (ரூ கோடியில்) |
|---|---|---|---|---|
| தமிழ் நாடு குடிசை மாற்று வாரியம் | 6 | 35270 | 13 | 1208.54 |
| நகராட்சி நிர்வாக இயக்குநரகம் | 27 | 52765 | 2952 | 1072.34 |
| பேரூராட்சிகள் இயக்குநரகம் | 18 | 3283 | 249 | 46.42 |
| **மொத்தம்** | **51** | **91318** | **3214** | **2327.30** |

தமிழ் நாடு குடிசை மாற்று வாரியம், 6 திட்டங்களை, ரூ.1208.54 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தி வருகிறது. அனுமதிக்கப்பட்டுள்ள 35270 அலகுகளில், 31.03.2010

அன்றைய நிலவரப்படி, 16818 அலகுகளுக்கு, பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

நகராட்சி நிர்வாக இயக்குநரகம் மூலமாக, 27 திட்டங்கள், ரூ.1072.34 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுகின்றன. அனுமதிக்கப்பட்டுள்ள 52,765 அலகுகளில், 31.03.2010 அன்று வரையில், 7260 அலகுகள் முடிக்கப்பட்டுள்ளன, 31974 அலகுகளில், பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

பேரூராட்சிகள் இயக்குநரகத்திற்கு 18 திட்டங்கள் ரூ 46.42 கோடி மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டு செயலாக்கத்திலுள்ளன. அனுமதிக்கப்பட்ட 3283 அலகுகளில், 895 அலகுகள் 31.03.2010 அன்று நிலவரப்படி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள அலகுகள், பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

## ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

குடிசை வாழ் மக்களுக்கு குடியிருக்க வீடு, அடிப்படை வசதிகள் போன்றவற்றை அமைத்துக் கொடுத்து குடிசைப் பகுதிகளை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். நகர்ப்புர ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டம் செயல்படுத்தப்படுகின்ற நகரங்கள் நீங்கலாக, 82 ஏனைய நகரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

இத்திட்டத்தின் கால அளவான 2005–2012 முடிய இதுவரை மத்திய அரசால் ரூ 515.88 கோடி திட்ட மதிப்பீட்டில் 84 திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு மத்திய அரசின் உதவித் தொகையாக ரூ 350.69 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| செயலாக்க முகமை | திட்டங்களின் எண்ணிக்கை | குடியிருப்பு அலகுகள் | உள் கட்டமைப்புப் பணிகள் | திட்ட மதிப்பீடு (ரூ கோடியில்) |
|---|---|---|---|---|
| நகராட்சி நிர்வாக இயக்குநரகம் | 58 | 31603 | 1692 | 436.34 |
| பேரூராட்சிகள் இயக்குநரகம் | 25 | 4542 | 263 | 59.45 |
| தமிழ் நாடு குடிசை மாற்று வாரியம் | 1* | 1443 | – | 20.09 |
| **மொத்தம்** | **84** | **37588** | **1955** | **515.88** |

✶வால்மீகி அம்பேத்கர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு கீழ் உள்ள 50 நகராட்சிகளிலும், 6 மாநகராட்சிகளிலும், ரூ.436.34 கோடி மதிப்பீட்டில், 58 திட்டங்கள் அனுமதிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஒப்புதலளிக்கப்பட்ட 31603 குடியிருப்பு அலகுகளில், 31.03.2010 அன்றைய நிலவரப்படி,

**3680** அலகுகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள அலகுகள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

பேரூராட்சிகள் இயக்குநரகத்திற்கு **25** திட்டங்களைச் செயல்படுத்த ரூ. **59.45** கோடிக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. **31.03.2010** அன்றைய நிலவரப்படி **4542** அலகுகளில், **1,687** அலகுகள் முடிக்கப்பட்டுள்ளன.

**2009–10** ஆம் ஆண்டில் வால்மீகி அம்பேத்கர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் ரூ.**20.09** கோடி மதிப்பீட்டில் **1443** அலகுகள் கட்ட, தமிழ் நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

**நகர்ப்புர மனிதவள புள்ளியியல் மற்றும் மதிப்பீடு**

மத்திய அரசு, நகர்ப்புர மனிதவள புள்ளியியல் மற்றும் மதிப்பீடுகள் (USHA) என்ற புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் முக்கிய நோக்கம், நகர்ப்புர ஏழை மற்றும் குடிசை மேம்பாடு குறித்து கணக்கெடுத்து சம்பந்தப்பட்ட நகர்ப்புர வறுமை ஒழிப்புத் தொடர்பான திட்டங்களை வடிவமைத்தல், கொள்கை அளவிலான முடிவுகள் எடுத்தல், திட்ட மதிப்பீடு செய்தல், செயல்படுத்துதல், மேற்பார்வையிடுதல் மற்றும் ஆய்வு செய்தல் ஆகும். மத்திய அரசு, சராசரியாக 1 லட்சம் மக்கட்தொகை கொண்ட நகரங்களில் செயல்படுத்த முக்கியத்துவம் அளிக்கிறது. இதன்படி 34

நகரங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. குடிசைப் பகுதிகளைக் கணக்கெடுக்க ரூ 1.06 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம், பொன்விழா ஆண்டு நகர்ப்புர வேலை வாய்ப்புத் திட்டம் ஆகியவற்றை பயனுள்ள முறையில் செயல்படுத்த நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள நகர்ப்புர ஏழை மற்றும் குடிசை வாழ் மக்களின் நிலை தொடர்பான புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படவேண்டும். இவ்விவரங்கள், நகர்ப்புர ஏழ்மை, குடிசைகள், வீட்டு வசதி ஆகியவைகளை நன்கு புரிந்து கொள்ளவும், மத்திய புள்ளிவிவர தொகுப்புகளை வலுப்படுத்தவும், உள்ளூர், மாநிலம், தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் இப்பிரச்சனைகளைப் பற்றி ஆராயவும் பயன்படும்.

இத்திட்டங்களை செவ்வனே செயல்படுத்த நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில், ஒரு திட்ட மேலாண்மை குழுமமும், ஏனைய செயலாக்க அலுவலகங்களுக்கு 10 திட்ட செயலாக்க முகமைகளும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

## 3.6 பொது சுகாதாரம்

### 3.6.1 திடக்கழிவு மேலாண்மை

உரக்கிடங்கிற்கு இடம் வாங்குவது உட்பட திடக்கழிவு மேலாண்மைக்கென மொத்தம் ரூ.35.48

கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. 12–வது மத்திய நிதிக்குழு மானியத்தின் கீழ் சென்னை உட்பட அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் ஒவ்வொரு ஆண்டும் ரூ.41.15 கோடி வீதம் விடுவிக்கப்படுகிறது. இத்தொகை, உள்கட்டமைப்பு மேம்பாடு, வாகனங்கள் மற்றும் குப்பை தொட்டிகள் வாங்குதல் போன்றவற்றிற்கு பயன்படுத்தப்படுகிறது.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ், மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள் மற்றும் நாமக்கல் நகராட்சி ஆகியவற்றுக்கு, ரூ.174.38 கோடி, திட்ட செயலாக்கத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஆலந்தூர், பல்லவபுரம் மற்றும் தாம்பரம் நகராட்சிகளுக்கு ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை வசதியொன்றை ஏற்படுத்த ரூ.44.21 கோடி அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

### 3.7 தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் – III

அரசால், அரசாணை (நிலை) எண்.55, நநி(ம)குவ துறை நாள் 29.04.2005–ல் வழங்கப்பட்ட, நிர்வாக அனுமதியின் அடிப்படையில் மாநிலத்தின் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்காக, தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்-III, உலக வங்கியின் உதவியுடன் ரூ.1996.40 கோடி மதிப்பீட்டில் 5 ஆண்டு காலத்திற்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், நிலையான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்குத் தேவையான நிதியினை

வழங்குவதற்காக தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியத்தினை நிதி இடையீட்டாளராக மேம்படுத்துதல், நகர்ப்புர சீர்திருத்தங்களைப் பலப்படுத்துதல், தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்-IIன் கீழ் அடைந்த சாதனைகளை ஒருங்கிணைத்தல் ஆகியன இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

இத்திட்டம், நிறுவன மேம்பாட்டுக்கூறு மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியத்தின் மூலம் நகர்ப்புர முதலீட்டுக்கூறு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்-IIIன் உட்கூறுகளுக்கான நிதி ஒதுக்கீடு பின்வருமாறு:

| **உட்கூறு** | | **தொகை** | | **வங்கி நிதி** | |
|---|---|---|---|---|---|
| | | அமெரிக்க மில்லியன் டாலர் | மொத்த–த்தின் சதவீதம் | அமெரிக்க மில்லியன் டாலர் | மொத்த–த்தின் சதவீதம் |
| (i) | நிறுவன வளர்ச்சிக் கூறு | 25.00 | 5.76% | 15.00 | 5% |
| (ii) | தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம் மூலமாக நகர்ப்புர முதலீடுகள் | 407.50 | 93.89% | 283.50 | 94.50% |
| (iii) | நுழைவுக் கட்டணம் | 1.50 | 0.35% | 1.50 | 0.50% |
| | **மொத்தத் திட்ட மதிப்பு** | **434.00** | **100%** | **300.00** | **100%** |

### 3.7.1 தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் III-ஐ சீரமைத்தல் மற்றும் இத்திட்டத்தின் கீழ் பல்வேறு துணைத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியினை மறு ஒதுக்கீடு செய்தல்

இதற்கென மத்திய அரசும், உலக வங்கியும், தமிழ்நாடு அரசின் மறுசீரமைப்புக் கருத்துருவினை ஏற்றுக்கொண்டுள்ளன. திட்ட ஒப்பந்தம் மற்றும் கடன் ஒப்பந்தத்தில் ஒரு உடன்பாடு ஏற்பட்டுள்ளது. அதன்படி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை (நிலை) எண். 247, நாள் 16.12.2009–ல் இத்திட்டத்தினை சீரமைப்பு செய்து, அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படியான பல்வேறு உட்கூறுகளும், அவற்றுக்கென ஒதுக்கப்பட்ட நிதி விவரமும் கீழே தரப்பட்டுள்ளன.

| | **திட்ட உட்கூறுகள்** | **மறு கட்டமைப்புக்குப் பின் நிதி ஒதுக்கீடு** | | | |
|---|---|---|---|---|---|
| | | **மொத்தத் தொகை** | **வங்கி நிதி** | **மொத்தத் தொகை** | **வங்கி நிதி** |
| | | (அமெரிக்க மில்லியன் டாலர்) | | (ரூ. கோடியில்) | |
| அ | நிறுவன வளர்ச்சிக் கூறு | | | | |
| அ1 | நகராட்சிப் பணியாளர்களின் செயல்திறனை மேம்படுத்துதல் | 8.85 | 6.90 | 40.70 | 31.70 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ2 | தகவல் மற்றும் பரிமாற்றத் தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல் | 4.30 | 4.20 | 19.80 | 19.30 |
| அ3 | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் கடன் கண்காணிப்புப் பிரிவு அமைத்தல் | 0.30 | 0.25 | 1.40 | 1.20 |
| அ4 | திட்டத் தயாரிப்பு வசதி | 8.00 | 1.10 | 36.80 | 5.10 |
| அ5 | திட்ட மேலாண்மை மற்றும் கூடுதல் இயக்கத் தொகை | 3.55 | 2.55 | 16.30 | 11.70 |
| | **உள் கூட்டுத் தொகை (அ)** | **25.00** | **15.00** | **115.00** | **69.00** |
| ஆ | தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியின் மூலம் நகர்ப்புர முதலீடு | | | | |
| ஆ1 | (க) நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு கடன் | 181.00 | 125.00 | 832.60 | 575.00 |
| | (ங) நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு மூலதன மானியம் | 176.50 | 112.50 | 811.90 | 517.50 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | (ச) திட்ட மேம்பாட்டிற்கான ஆலோசனை வசதி | 9.00 | 9.00 | 41.40 | 41.40 |
| ஆ2 | (க) போக்குவரத்துத் திட்டங்க ளுக்காக சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு மானியம் | 38.00 | 34.00 | 174.80 | 156.40 |
| | (ங) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் / நெடுஞ்சாலைத் திட்ட மேலாண்மை , கூடுதல் இயக்கத் தொகை | 3.00 | 3.00 | 13.80 | 13.80 |
| | **உள் கூட்டுத் தொகை (ஆ)** | **407.50** | **283.50** | **1874.50** | **1304.10** |
| | **மொத்தம் ( அ + ஆ)** | **432.50** | **298.50** | **1989.50** | **1373.10** |
| | **நுழைவுக் கட்டணம்** | **1.50** | **1.50** | **6.90** | **6.90** |
| | **மொத்தத் திட்ட மதிப்பு** | **434.00** | **300.00** | **1996.40** | **1380.00** |

இத்திட்டத்தின் செயலாக்கக் காலம் 31.03.2012 வரை அரசால் நீட்டிக்கப்பட்டுள்ளது.

### 3.7.2 மானிய நிதி I மற்றும் மானிய நிதி II

**மானிய நிதி I:** நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு முக்கிய உள்கட்டமைப்பு வசதிக்கான திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும், நகர்ப்புர ஏழை மக்களின் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்த்துதல் போன்றவற்றைச் செயல்படுத்துவதற்கும் நிதியளிக்க மானிய நிதி–I பயன்படுத்தப்படுகிறது.

**மானிய நிதி II:** நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொது–தனியார் பங்கேற்பு (PPP), மற்றும் கட்டி, செயலாக்கி, மாற்றம் செய்தல் (BOT) கோட்பாடுகள் அடிப்படையில் புதுமையான திட்டங்களைச் செயல்படுத்திட நிதி உதவி ழுங்க மானிய நிதி – II பயன்படுத்தப்படுகிறது.

### 3.7.3 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்களின் செயல்திறனை மேம்படுத்துதல்

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கட் பிரதிநிதிகள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பணித்திறன், மேலாண்மை மற்றும் தொழில்நுட்பத் திறன் ஆகியவற்றை மேம்படுத்த தேவையான பயிற்சி திட்டங்களை செயல்படுத்துவதே இந்த உட்கூறின் நோக்கம் ஆகும். இந்த உட்கூறின் கீழ் ரூ.9.49 கோடி செலவில் பல்வேறு பயிற்சிகளை மேற்கொள்ள அரசால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து பணித்திறன் மேம்பாட்டுக்கென பல்வேறு

பயிற்சிகள், ஆய்வரங்கங்கள் (Seminars), பயிலரங்குகள் (Workshops), கல்வி சுற்றுலாக்கள் (Exposure Visits), மற்றும் சான்றிதழ் பயிற்சிகள் (Certificate Programmes) முதுநிலை பட்டயப் பயிற்சி (Post Graduate Diploma Course) போன்றவை இந்த இயக்குநரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. **31.03.2010** அன்றுள்ள நிலவரப்படி நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் **5,882** தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கட்பிரதிநிதிகளும், **8,773** அலுவலர்களும் பயிற்சிகளில் பங்கேற்றுள்ளனர்.

மாநில திட்ட அனுமதி வழங்கும் குழுவின் (State Level Project Sanctioning Committee) **17.11.2009** அன்று நடைபெற்ற கூட்டத்தில் அளித்த ஒப்புதலின் அடிப்படையில் அரசாணை (பத்தாண்டு) எண்.**547**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி–II) நாள் **24.12.2009**–ல், ரூ.**16.39** கோடி மதிப்பீட்டில் பல பயிற்சித் திட்டங்களுக்கு நிர்வாக அனுமதியினை அரசு வழங்கியுள்ளது. இந்த பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 3.7.4 மூன்றாம் நிலை நகராட்சிகளுக்கான நகர மேம்பாட்டுத் திட்டம் தயாரித்தல்

மூன்றாம் நிலை நகராட்சிகளின் உள்கட்டமைப்பு வசதியின் தற்போதைய நிலையை ஆய்வு செய்து எதிர்காலத் தேவைகளுக்குத் திட்டமிட ஏதுவாக நகர மேம்பாட்டுத்திட்டம்

தயாரிக்க இந்த இயக்குநரகத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நகராட்சிகளில், இது போன்ற ஒரு திட்டமிட்ட முயற்சியை மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும். இப்பணிக்காக, ரூ.1.46 கோடி செலவில், 5 கலந்தாய்வர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

31.03.2010 அன்றைய நிலவரப்படி அனைத்து 49 மூன்றாம் நிலை நகராட்சிகளுக்கும் இறுதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுவிட்டன. இந்த இறுதி அறிக்கைகளை ஆய்வு செய்து அதனடிப்படையில் முன்னுரிமைப்படுத்தப்பட்ட திட்டங்களை செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்படும்.

### 3.7.5 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் மின்னணு ஆளுகைச் செயலாக்கம்

அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் மின்னணு ஆளுகையினை முழுமையாகச் செயல்படுத்திட ஏதுவாக பணியாளர்கள், தேவையான கணினிச் சாதனங்கள் மற்றும் மென்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. நகராட்சிகளில் உதவித் திட்ட அமைப்பாளர்கள் மற்றும் புள்ளி விவரக் குறிப்பாளர்கள் மின் ஆளுகையைச் செயல்படுத்துவதற்கான பணிகளை மேற்கொள்ள உதவி வருகின்றனர். அக்டோபர் 2009–ல் 67 புள்ளி விவரக் குறிப்பாளர்கள் புதிதாகத் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர். இதன் மூலம் அனைத்து 49 மூன்றாம்

நிலை நகராட்சிகளிலும் தலா ஒரு புள்ளி விவரக் குறிப்பாளர் பணியிலுள்ளனர். அதன் பயனாக, தற்பொழுது நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், 16 மென்பொருள் தொகுப்புகள் (modules) கணினிமயமாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தனித்தனி வலைதளங்கள் (Website) இயங்கி வருகின்றன. அரசால் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகளின்படி அனைத்து ஒப்பந்தப் புள்ளிகளும் வலைதளங்களில் வெளியிடப்பட்டு ரூ.0.10 கோடி மதிப்பீட்டிற்கு மேற்பட்ட பணிகள் அனைத்தும் மின்னணு ஒப்பந்த முறை (e-tendering)யை பின்பற்றித் தான் முடிவு செய்யப்படவேண்டும் என்று அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் அறிவுறுத்தப்பட்டுள்ளன. முதல் கட்டமாக, அனைத்து மாநகராட்சிகளிலும், மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மின்னணு ஆளுகை, மென்பொருள் தணிக்கை மற்றும் தகவல் பாதுகாப்புத் தணிக்கை ஆகியவையும் உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்படுகின்றன.

அரசு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி–II) துறை, அரசு ஆணை எண்(பத்தாண்டு) எண்.545, நாள் 24.12.2009–ல் இத்திட்டத்தின் எஞ்சியுள்ள காலத்தில் கீழ்க்காணும் மின்னணு ஆளுகைத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

(i) ரூ.3.24 கோடி மதிப்பீட்டில் அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் ஒருங்கிணைந்த மத்திய வலைதள மென்பொருள் தொகுப்புகளை (Centralised Web Based Application Software) உருவாக்குதல்.

(ii) பராமரிக்கும் சேவை வசதிகள் (Facility Management Services) உட்பட கூடுதலாகக் கணினிச் சாதனங்கள் மற்றும் மென்பொருள் சாதனங்கள் ரூ. 7.08 கோடி மதிப்பீட்டில் வாங்குதல்.

(iii) அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பிலிருந்து (Tamil Nadu State Wide Area Network) ரூ. 3.89 கோடி மதிப்பீட்டில் இணைப்பு ஏற்படுத்துதல்.

மேற்கண்ட திட்டங்களைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

### 3.7.6 கடன் கண்காணிப்புப் பிரிவு

நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் கடன் கண்காணிப்புப் பிரிவு தோற்றுவிக்கப்பட்டு அப்பிரிவு 17.12.2007 முதல் செயல்பட்டு வருகிறது. அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிதி குறித்த தகவல்களைச் சேகரித்தல், அவற்றின் உள்ளபடியான நிதி நிலை விவரங்களை அவைகளுக்குத் தெரிவித்து உதவி புரிதல் மற்றும் நிதி குறித்த தகவல்களை அவற்றிற்கு அளித்து நிதி நிறுவனங்களை அணுகிட உதவி புரிதல் ஆகியன இப்பிரிவின் முக்கிய நோக்கங்களாகும். மேலும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின்

கடன் சுமையைக் குறைக்க உதவும் திறமையான ஆலோசகராகவும் இப்பிரிவு செயல்படுகிறது.

### 3.7.7 திட்டத் தயாரிப்பு நிதி

அரசு, நகர்ப்புர உள்கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்ளவும், விரிவானத் திட்ட அறிக்கைகள் (Detailed Project Reports) தயாரித்தல் மற்றும் மேற்பார்வையிடல் போன்றப் பணிகளுக்காக நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் சார்பாக கலந்தாய்வு நிறுவனங்களை நியமிக்க, அரசால் தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்–III–ன்கீழ் ரூ.30.00 கோடி ஒதுக்கீட்டில் திட்ட தயாரிப்பு நிதியை தோற்றுவித்துள்ளது. இந்நிதியினைப் பயன்படுத்தி இதுவரை 140 திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதில், 20 திட்டப் பணிகள், ரூ.1004.54 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நிதி ஆதாரங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 3.7.8 நிலவியல் தகவல் அமைப்பினைச் செயல்படுத்துதல்

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் சொத்துவரி மற்றும் இதர வரி வசூலை மேம்படுத்தவும், நகராட்சித் தகவல் அமைப்புடன் இணைத்து கட்டட அமைவு, உள்கட்டமைப்பு ஆகியனவற்றைக் காட்டும் வரைபடங்களைத் தயாரிக்கவும், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிகளிலும், இராஜபாளையம் மற்றும் கோபிச்செட்டிப்பாளையம்

நகராட்சிகளிலும் நிலவியல் தகவல் முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்குறிப்பிட்ட ஐந்து இடங்களில் நிலவியல் தகவல் முறை மென்பொருள் தயாரிக்க ரூ.3.92 கோடி செலவில் ஒரு கலந்தாய்வு நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது. இந்த ஐந்து உள்ளாட்சி அமைப்புகளில், துணைக்கோள் வரைபடங்கள் (Satellite imagery) பெறப்பட்டு, 4 நகரங்களில் அடிப்படை வரைபடங்கள் (Base Maps) தயாரிக்கப்பட்டுள்ளன. தற்போது மேற்குறிப்பிட்ட நகரங்களில் கட்டடங்களையும், உள்கட்டமைப்பு வசதிகளையும் கணக்கிடும் பணி (Survey work) இக்கலந்தாய்வு நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு பணி முன்னேற்றத்திலுள்ளது. இந்நிலையில் தகவல் அமைப்புச் செயல்பாட்டினை, அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் படிப்படியாக விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 3.7.9 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் இயல்பு நிலை கணக்கீட்டு முறை (ABAS) செயலாக்கத்தின் ஆய்வு

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், இயல்பு நிலைக் கணக்கீட்டு முறையினை (ABAS) செயல்படுத்தி வரும் முன்னோடி மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இயல்பு நிலைக் கணக்கீட்டு முறையினைச் செயல்படுத்துவதில் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் அடைந்துள்ள சாதனைகள் மற்றும் இடர்ப்பாடுகளை மதிப்பிடவும், இந்த முறையினை மேம்படுத்திட எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பரிந்துரைக்கவும், ரூ.0.24 கோடி செலவில் ஒரு கலந்தாய்வு

நிறுவனம் நியமனம் செய்யப்பட்டது. அக்கலந்தாய்வு நிறுவனம், தனது இறுதி அறிக்கையினைச் சமர்ப்பித்துள்ளது. அவ்வறிக்கையிலுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவும், அதன்படி இயல்பு நிலைக் கணக்கீட்டு முறை செயலாக்கத்தை மேம்படுத்தவும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

அரசாணை (ப) எண் **546**, ந.நி.குவதுறை நாள்.**24.12.09**ல் ரூ.**1.08** கோடி செலவில் கீழ்க்காணும் திட்டங்களைச் செயல்படுத்த அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

1. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான நகராட்சிக் கணக்கு கையேட்டினை (Municipal Accounting Manual) இன்றைய தேதிக்கேற்ப மாற்றியமைத்தல் (updation) மற்றும் அது குறித்து அலுவலர்களுக்குப் பயிற்சியளித்தல்

2. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நகராட்சி வரவு செலவுத் திட்ட நடைமுறைக் கையேட்டினை (Budget Manual for ULBs) தயாரித்தல் மற்றும் அது சம்பந்தமாக அலுவலர்களுக்குப் பயிற்சியளித்தல்

3. திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி, ஈரோடு, திருப்பூர், வேலூர், தூத்துக்குடி ஆகிய மாநகராட்சிகள், அம்பத்தூர் மற்றும் பொள்ளாச்சி

சிறப்புநிலை நகராட்சிகளுக்கு விளைபயன் வரவு செலவுத் திட்டங்களை (Outcome Budgets) தயாரித்தல் மற்றும் அது தொடர்பாக அலுவலர்களுக்குப் பயிற்சியளித்தல்

மேற்கண்ட திட்டங்களைச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 3.7.10 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் செயல் குறியீடுகள் குறித்த செய்தி அறிவிப்பு வெளியீடு (Bulletin on Urban Performance Indicators) தயாரித்தல்

அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள் குறித்த குறியீடுகளின் அடிப்படையில், ஒரு செய்தி அறிவிப்பு வெளியீடு (Bulletin on Urban Performance Indicators) ரூ.0.11 கோடி மதிப்பீட்டில் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வெளியீடு, துறையின் வலைதளத்தில் வெளியிடப்படவுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளின் தொடர்புடைய செயல்பாடுகளை ஒப்பாய்வு செய்ய இந்தச் செயல் குறியீடுகள் உதவியாக இருக்கும்.

### 3.7.11 தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் – III–இன் கீழ் எடுத்துக்கொள்ளப்படவுள்ள இதரத் திட்டங்கள்

அரசாணை (ப) எண். 548, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 24.12.2009–ல் தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்–III–ன் எஞ்சியுள்ள காலத்தில் கீழ்க்காணும்

திட்டங்களைச் செயல்படுத்த அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

| வரிசை எண் | திட்டத்தின் வகைபாடு | மதிப்பு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | 9 மாநகராட்சிகளின் பகுதிகளைப் பசுமைப்படுத்துதல், நீர்நிலைகளை மறுசீரமைப்பு செய்தல் குறித்த கலந்தாய்வர் மற்றும் அது குறித்து மாநகராட்சி அலுவலர்களுக்கு விளக்கப் பயிலரங்கம் நடத்துதல் | 1.80 |
| 2. | குறிப்பிட்ட நகரங்களில் (கோயம்புத்தூர், மதுரை, வேலூர் மாநகராட்சிகள் மற்றும் நாகர்கோவில் , திண்டுக்கல், உதகமண்டலம், நாமக்கல், மேட்டூர், புதுக்கோட்டை, கடலூர், அருப்புக்கோட்டை மற்றும் கிருஷ்ணகிரி நகராட்சிகள்) குடிநீர் மற்றும் மின்சக்தி பற்றிய தணிக்கைகளை மேற்கொள்ளுதல், மற்றும் உள்ளாட்சி அலுவலர்களுக்கு விளக்கப் பயிற்சி அளித்தல். | 1.68 |
| 3. | குறிப்பிட்ட நகரங்களில் (சேலம், வேலூர், ஈரோடு, & தூத்துக்குடி, மாநகராட்சிகள் மற்றும் அம்பத்தூர், திண்டுக்கல், உதகமண்டலம், நாமக்கல், புதுக்கோட்டை, விருதுநகர், சிவகங்கை மற்றும் கிருஷ்ணகிரி நகராட்சிகள்), சொத்து வரி குறித்த ஆய்வு, கட்டட அமைவு வரைபடம் மற்றும் உள்கட்டமைப்பு வரைபடம் தயாரிக்கும் பொருட்டு அளவை (survey) மேற்கொள்ளுதல் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்களுக்கு விளக்கப் பயிலரங்கம் நடத்துதல் | 4.60 |

இத்திட்டங்களைச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 3.8 சுனாமி சீரமைப்புப் பணிகள்

**26.12.2004** அன்று ஏற்பட்ட சுனாமியால், மாநிலத்தில் 7 நகராட்சிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. அரசு, ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் உலக வங்கித் திட்ட நிதியுதவியுடன், மறுசீரமைப்பு மற்றும் அடிப்படை வசதிப் பணிகள் மற்றும் வாழ்வாதாரப் பணிகள், ரூ. **79.83** கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டன. அனைத்துப் பணிகளும் ரூ.**73.33** கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

### 3.9 பகுதி–II திட்டங்கள்

பகுதி–II திட்டத்தின் கீழ், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசு நிதியுதவி வழங்கி வருகிறது. **2007–08** ஆம் ஆண்டில் ரூ.**27.72** கோடியும், **2008–09** ஆம் ஆண்டில் ரூ.**20.33** கோடியும், **2009–10** ஆம் ஆண்டில் ரூ.**12.45** கோடியும், சாலைகள் அமைத்தல், வடிகால் கட்டுதல், நவீன இறைச்சிக்கூடங்கள் அமைத்தல், நவீன எரிவாயு தகனமேடைகள் அமைத்தல், குடிநீர்த் திட்டங்கள் மற்றும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் போன்ற அடிப்படைக் கட்டமைப்புப் பணிகளுக்காக நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு மானியமாக வழங்கியுள்ளது.

**2010–11**–ஆம் ஆண்டில் ரூ.**12.75** கோடி மதிப்பீட்டில் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணிகள் | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1 | 44 நகராட்சிகளில் 60 கிலோ மீட்டர் நீளத்திற்கு மண் மற்றும் கற்சாலைகளை தார் / சிமெண்ட் சாலைகளாக மாற்றுதல் | 6.00 |
| 2 | திருப்பூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் கட்டுவதற்கு ரூ.1.50 கோடியும், சேலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் கட்டுவதற்கு ரூ.1.25 கோடியும் வழங்குதல் | 2.75 |
| 3 | கோயமுத்தூர் மாநகராட்சி பில்லூர் குடிநீர்த் திட்டத்தில் (இரண்டாவது கட்டம்) கணினி முறையில் குடிநீர்த் திட்டப் பணிகளைக் கண்காணிக்கும் திட்டம் (SCADA) | 4.00 |
| | மொத்தம் | 12.75 |

## 3.10 வரி விதிப்பு மற்றும் நிதி மேலாண்மை

### 3.10.1 சொத்துவரியினை ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை சீராய்வு செய்தல்

அரசு ஆணை (நிலை) எண். 150, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள். 12.11.2007–ல், ஐந்தாண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் சொத்துவரி சீராய்வினை 01.04.2008 முதல் அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் மேற்கொள்ள ஆணையிடப்பட்டது.

சம்பந்தப்பட்ட நகர்மன்றங்கள் தீர்மானம் நிறைவேற்றி உள்ளாட்சி அமைப்புகளில் சொத்து வரி சீராய்வினை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளன. இதனைத் தொடர்ந்து, நகராட்சிகளில் 30 சதவிகிதமும், மாநகராட்சிகளில் 47 சதவிகிதமும் சொத்துவரிக் கேட்புத் தொகை உயர்ந்துள்ளது.

### 3.10.2 தொழில்வரி விதித்தல்

அரசு ஆணை (நிலை) எண். 11, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 12.01.99—ல் 1998–99–ஆம் இரண்டாம் அரையாண்டு முதல், தொழில்வரி வரிவிதிப்புச் செய்ய ஆணையிடப்பட்டு, கீழ்க்காணுமாறு திருத்திய வரி வீதம் மற்றும் தொகைகள் நிர்ணயிக்கப்பட்டன :-

| வ. எண் | சராசரி அரையாண்டு வருமானம் (ரூபாயில்) | | அரையாண்டு வரி (ரூபாயில்) |
|---|---|---|---|
| | முதல் | வரை | |
| 1 | | 21,000 | ஏதுமில்லை |
| 2 | 21,001 | 30,000 | 60 |
| 3 | 30,001 | 45,000 | 150 |
| 4 | 45,001 | 60,000 | 300 |
| 5 | 60,001 | 75,000 | 450 |
| 6 | 75,001 | அதற்கு மேல் | 600 |

ஐந்தாண்டுகளுக்கொருமுறை வரி வீதத்தினை மாற்றியமைக்க மாநகராட்சி மற்றும் நகராட்சி மன்றங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, 01.10.2003 முதல் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் அனைத்தும் தங்களது வரி வீதத்தை உயர்த்தியுள்ளன. அடுத்த சீராய்வு 01.10.2008 முதல், நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

### 3.10.3 காலிமனைகளுக்கான சொத்துவரி நிர்ணயம் செய்தல்

பத்திரப் பதிவுத் துறையிடமிருந்து பெறப்படும் நில மதிப்பு அடிப்படையில் காலிமனை வரி நிர்ணயம் செய்யப்பட்டு வந்தது. கட்டடங்களுக்கான சொத்து வரியினை விட, காலிமனையிடங்களுக்கான சொத்து வரி, பல மடங்கு அதிகமாக இருப்பதாக பொது மக்களிடமிருந்து ஆட்சேபணைகள் பெறப்பட்டன. அதனடிப்படையில், இதனை ஆய்வு செய்து, அரசு காலிமனை வரி விதிப்பினை, மூலதன மதிப்பிற்குப் பதிலாக சதுரஅடி அடிப்படையில் விதிக்க முடிவு செய்து அரசாணை (நிலை) எண். 151, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள். 20.08.2009–ல் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புக்களின் நிலைக் கேற்ப குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச தொகைகளுக்குட்பட்டு கீழ்க்காணுமாறு காலிமனை வரி நிர்ணயம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது.

நிலை “A” : மாநகராட்சிகள் மற்றும் சிறப்பு நிலை நகராட்சிகள்

நிலை “B” : தேர்வுநிலை மற்றும் முதல்நிலை நகராட்சிகள்

நிலை “C” : இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள்.

**காலிமனைகளுக்கு விதிக்கப்பட வேண்டிய சொத்துவரி குறைந்தபட்ச மற்றும் அதிக பட்ச வீதம்.**

(வரிவீதம்– பைசாவில் ஒரு சதுர அடிக்கு, ஒரு அரையாண்டிற்கு)

| வ. எண். | காலிமனையின் அமைவிடம் | நிலை –A | | நிலை–B | | நிலை– C | |
|---|---|---|---|---|---|---|---|
| | | குறைந்த பட்சம் (சதுர அடிக்கு) | அதிக பட்சம் (சதுர அடிக்கு) | குறைந்த பட்சம் (சதுர அடிக்கு) | அதிக பட்சம் (சதுர அடிக்கு) | குறைந்த பட்சம் (சதுர அடிக்கு) | அதிக பட்சம் (சதுர அடிக்கு) |
| அ | குடியிருப்புப் பகுதியில் உள்ள முக்கியத் தெருக்கள் | 20 | 40 | 15 | 30 | 10 | 20 |
| ஆ | முக்கியச் சாலைகள் மற்றும் பிரதானச் சாலைகளுக்குச் செல்லும் பேருந்து வழித்தடச் சாலைகள் அல்லாதவை. | 30 | 50 | 20 | 40 | 15 | 30 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இ | அணுகுச் சாலைகள் மற்றும் பிரதானச் சாலைகளுக்குச் செல்லும் பேருந்து வழித் தடச் சாலைகள். | 40 | 60 | 30 | 50 | 20 | 40 |

குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச வீதங்களுக்குட்பட்டு, காலிமனைகளுக்கானச் சொத்துவரியினை நிர்ணயம் செய்ய நகர்ப்புர உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், அதனை நடைமுறைப்படுத்த தகுந்த அறிவுரைகளும் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி, 01.09.2009 முதல் காலிமனை வரி விதிப்புச் செய்யப்பட்டு வருகிறது. இந்த புதிய வகை வரி விதிப்பு முறையினால் காலிமனை உரிமையாளர்கள் மிகுந்த பயனடைந்துள்ளனர்.

### 3.10.4 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்களுக்கான குத்தகை முறையில் மாற்றங்கள்

அரசாணை (நிலை) எண். 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.07-ல் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்குச் சொந்தமான கடைகள், பேருந்து நிலையங்கள், சந்தைகள், வாகன நிறுத்துமிடங்கள், கட்டணக் கழிப்பிடங்கள், தங்கும் விடுதிகள் போன்றவற்றிற்கானக்

குத்தகைக் காலத்தை ஓராண்டிலிருந்து மூன்றாண்டுகளென மாற்றியமைத்து மாற்றி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

அதே போன்று, மாநகராட்சிகளில் உள்ள கடைகள், பேருந்து நிலையங்கள், சந்தைகள், வாகனம் நிறுத்துமிடங்கள், கட்டணக் கழிப்பிடங்கள், தங்கும் விடுதிகள் போன்றவற்றிற்கு ஆண்டுக் குத்தகை என்றிருந்த முறையினை மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை என மாற்றியமைத்து அரசாணை (வா) எண். 78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். **25.05.09–இல்** ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

### 3.10.5 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பகிர்வு

### மாநில நிதி ஆணையத்தின் மானியம்

மாநிலத்தின் சொந்த வரி வருவாயிலிருந்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பகிர்வினை தீர்மானிக்க, அரசு, ஐந்து ஆண்டுகளுக்கொருமுறை மாநில நிதி ஆணையத்தை அமைத்து வருகிறது. மூன்றாவது மாநில நிதிஆணையத்தின் பரிந்துரைக் காலம் **31.3.2012** உடன் முடிவடைகிறது.

மூன்றாவது மாநில நிதி ஆணையம் அமைக்கப்படுவதற்கு முன்னர் மாநிலத்தின் சொந்த வரி வருவாயிலிருந்து பகிர்ந்தளிக்கப்பட்ட நிதிப் பகிர்வு **8** சதவீதமாகும். **1.12.2004**

அன்று அமைக்கப்பட்ட மூன்றாவது மாநில நிதிஆணையம், நிதிப் பகிர்வு சதவீதத்தினை அதிகரித்திட பரிந்துரை செய்தது.

குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், **2007– 2008** முதல் **2011 – 12** வரையிலான நிதிப் பகிர்வுக் காலத்திற்கு மாநில அரசின் சொந்த வரி வருவாயிலிருந்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு கீழ்க்காணும் நிதிப் பகிர்வு செய்திட அரசு ஆணைகளை வெளியிட்டுள்ளது.

| ஆண்டு | மாநில சொந்த வரி வருவாயிலிருந்து நிதிப் பகிர்வு |
|---|---|
| 2007 – 08 | 9 % |
| 2008 – 09 | 9 % |
| 2009 – 10 | 9.5 % |
| 2010 – 11 | 10 % |
| 2011 – 12 | 10 % |

ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டிருந்த **8** விழுக்காட்டிலிருந்து மேற்குறிப்பிடப்பட்டவாறு அதிகரிக்கப்பட்டுள்ளதால், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் வருவாய் கீழ்க்காணுமாறு பெருமளவில் உயர்ந்துள்ளது.

| ஆண்டு | நிதிப் பகிர்வுத் தொகை | அதிகரித்துள்ள கூடுதல் நிதி |
|---|---|---|
| (ரூ. கோடியில்) | | |
| 2007 – 08 | 816.75 | 178.72 |

| | | |
|---|---|---|
| 2008 – 09 | 882.48 | 65.75 |
| 2009 – 10 | 937.43 | 54.95 |

## 12–வது மத்திய நிதி ஆணையத்தின் மானியம்

மாநிலங்களில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய மானியம் குறித்து பரிந்துரை செய்வதற்கு, மத்திய அரசு, ஐந்து ஆண்டுகளுக்குகொரு முறை மத்திய நிதி ஆணையத்தை அமைத்து வருகிறது. இதுவரை, 13 மத்திய நிதி ஆணையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

12–வது நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் தமிழ்நாட்டிலுள்ள நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2005 – 06 முதல் 2009 – 10 வரையிலான காலத்திற்கு மத்திய அரசு, ரூ.572 கோடியினை ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த மானியத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளின்படி, இத்தொகை கீழ்க்காணுமாறு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

(அ) பொது – தனியார் கூட்டு முயற்சியின் மூலம் திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கு 50 விழுக்காடு

(ஆ) சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்களைப் பராமரிப்பதற்கு 25 விழுக்காடு, மற்றும்

(இ) தகவல் தொகுப்பினை உருவாக்குதல், மின் கட்டணம் செலுத்துதல் போன்றச் செலவினங்களுக்கு 25 விழுக்காடு.

இதன்படி, சென்னை மாநகராட்சி உட்பட, அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு ஆண்டுதோறும் ரூ.82.30 கோடி, மானியமாக விடுவிக்கப்படுகிறது. 12வது மத்திய நிதி ஆணையத்தின் பகிர்வுக் காலம் 31.3.2010 உடன் முடிவடைந்தது.

13வது மத்திய நிதிக் குழு தனது பரிந்துரைகளை மத்திய அரசிடம் அளித்துள்ளது. விரிவான ஆணைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

## நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் கடன்கள் தள்ளுபடி

ஏற்கனவே உள்ள கடன் பொறுப்புகளுடன், ஒருங்கிணைக்கப்பட்ட அரசுக் கடன் தொகைக்கான அசல், மற்றும் நிலுவை வட்டித் தொகையினை அரசுக்குத் திருப்பிச் செலுத்துவது நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு பெரும் சுமையாக இருந்தது. வளர்ச்சிப் பணிகள் மற்றும் புதிய கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்ள, ஒருங்கிணைக்கப்பட்ட அரசுக் கடனின் அசல் நிலுவை மற்றும் மிகுவட்டி, நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் புதிய திட்டங்களுக்கு ஒரு தடைக்கல்லாக உள்ளதாகக் கருதப்பட்டது. எனவே,

**31.03.2007** அன்றுள்ளவாறு, நிலுவையிலிருந்து அரசுக்குச் செலுத்தப்பட வேண்டிய கடனுக்கான அசல் தொகை ரூ.**429.84** கோடியையும், அதற்கான வட்டித் தொகை ரூ.**357.58** கோடியையும் தள்ளுபடி செய்து அரசாணை (நிலை) எண். **149,** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் **09.11.2007**–ல் ஆணைகள் வெளியிட்டுள்ளது. தக்க தருணத்தில் அரசால் மேற்கொள்ளப்பட்ட இம்முடிவால் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் கடன் நிலுவை, பெருமளவில் குறைந்துள்ளது. தற்போது, இவ்வமைப்புகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும், புதிய கடன்களை பெறவும் வசதியாகவுள்ளது.

## உள்ளாட்சி நிதித் தணிக்கைத் தடைகளை நிவர்த்தி செய்ய அமைக்கப்பட்ட மாவட்ட அளவிலான உயர்மட்டக் குழுக்களை மறு சீரமைத்தல்

மண்டல அளவிலான தணிக்கை நிவர்த்திக் குழு மற்றும் மாவட்ட உயர் மட்டக் குழு ஆகியற்றின் செயல்பாட்டினை மறு ஆய்வு செய்து தணிக்கைத் தடைகளை விரைந்து முடித்திட ஏதுவாக, அரசாணை (நிலை) எண்.**54,** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் **30.03.2009**–ல், மாவட்ட அளவிலான உயர்மட்டக் குழுவினை மறு சீரமைத்து ஆணையிடப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலான உயர்மட்டக் குழுவினை மறுசீரமைத்ததன் விளைவாக மண்டலத் தணிக்கை நிவர்த்தி குழு மற்றும் மாவட்ட உயர் மட்டக் குழு ஆகியவற்றின்

செயல்பாடுகள் மேம்பாடு அடைந்து தணிக்கைத் தடைகளை விரைந்து நிவர்த்தி செய்ய இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 3.11 சிறப்பு முயற்சிகள்

### 3.11.1 நகராட்சி / மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கான கல்வி உதவித் தொகைத் திட்டம்

நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவ–மாணவியரை ஊக்குவிக்கும் வகையில், நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பயின்று, 10வது மற்றும் 12வது வகுப்பு இறுதித் தேர்வுகளில் தேர்ச்சி பெறும் மாணவ– மாணவியரில் முதலாவதாக வரும் 25 மாணவ–மாணவியருக்கு தலா ரூ.10,000/– ரொக்கப் பரிசும், தகுதிச் சான்றிதழும் வழங்கப்படும் என 2007–2008–ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது. மேலும், 12வது வகுப்புப் பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்று முதலாவதாக வரும் 25 மாணவ–மாணவியரில், பொருளாதார ரீதியில் பின் தங்கிய மாணவ–மாணவியருக்கு அவர்கள் விரும்பும் மேற்படிப்பினைத் தொடர, கல்வி உதவித் தொகை (Scholarship) வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. இந்தக் கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ், மேற்படிப்பிற்கான அரசால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம், புத்தகச் செலவு, விடுதி மற்றும் உணவுக் கட்டணங்கள் உட்பட மாணவ–மாணவியருக்குத் திரும்ப வழங்கப்படுகிறது.

“நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளி மாணவர் கல்வி உதவித் தொகைத் திட்ட நிதி”என்ற பெயரில் ஒரு தொகுப்பு நிதி உருவாக்கப்பட்டு, இத்திட்டம் தொடர்ந்து செயல்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்தொகுப்பு நிதியிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை, இத்திட்டத்திற்கு ஆகும் ஆண்டுச் செலவினை மேற்கொள்ள பயன்படுத்தப்படுகிறது.

2007–08–ஆம் கல்வியாண்டில் 10வது மற்றும் 12வது வகுப்பு இறுதித் தேர்வுகளில் முதலாவதாகத் தேர்ச்சி பெற்ற 26 மாணவ–மாணவியருக்கும், 2008–09–ஆம் ஆண்டில் 10வது வகுப்பு இறுதித் தேர்வில் முதலாவதாகத் தேர்ச்சி பெற்ற 28 மாணவ–மாணவியருக்கும், 12வது வகுப்பு இறுதித் தேர்வில் முதலாவதாகத் தேர்ச்சி பெற்ற 25 மாணவ–மாணவியருக்கும் தலா ரூ.10,000/– பரிசுத் தொகையும் தகுதிச் சான்றிதழும் வழங்கப்பட்டது. 2007–2008 ஆம் ஆண்டில் 12வது வகுப்புத் தேர்வில்தேர்ச்சியடைந்துபரிசுபெற்ற26மாணவ–மாணவியரில், 22 ஏழை மாணவ–மாணவியரும், மற்றும் 2008–2009ம் ஆண்டில் முதலாவதாகத் தேர்வு பெற்ற 25 மாணவ–மாணவியரில், 23 ஏழை மாணவ–மாணவியரும் இக்கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ், மேற்படிப்பினைத் தொடர்வதற்கான வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டுள்ளனர். இதன் மூலம் நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவ–மாணவியர் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

### 3.11.2 தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர்

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளால் செலுத்தப்பட்டு வரும் வருடாந்திர பங்குத் தொகையினைக் கொண்டு செயல்பட்டு வரும் ஒரு தனித்தன்மை வாய்ந்த நிறுவனமாகும். நகர்ப்புர மேலாண்மை, நகர்ப்புர மேம்பாடு ஆகியவை குறித்த தகவல்களை பயிற்சித் திட்டங்கள், கருத்தரங்குகள் போன்றவற்றின் மூலமும், ஆராய்ச்சி நடத்துவது, நகர்ப்புர மேலாண்மை குறித்த பொருட்கள் சம்பந்தமாக கலந்தாய்வுப் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றின் மூலமும், பரப்புவது (disseminate) இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்ப்புர உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் ஆகியோருக்கு புத்தறிவுப் பயிற்சியளிப்பது, நிலவியல் தகவல் முறை ஆய்வு மற்றும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புரப் புனரமைப்புத் திட்டம் ஆகியவை குறித்து பயிற்சியளிப்பது போன்றப் பணிகளை இந்நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. அடுத்த கட்டமாக, பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைந்து நகர்ப்புர நிதிக் கணக்கு மற்றும் மேலாண்மை (Urban Financial Accounting and Management) என்ற முதுநிலைப் பட்டயப்படிப்பினைத் துவங்குவதற்கான அடிப்படைப் பணிகள் இந்நிறுவனத்தால் முடிக்கப்பட்டுவிட்டன. இப்பட்டயப்படிப்பு வகுப்புகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

இப்பயிற்சி நிறுவனத்திற்குப் புதிய தங்கும் விடுதி அமைக்கும் பணிகள் அரசு அனுமதித்துள்ள ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டுள்ளன.

## 3.12 மதுரை மாநகராட்சி

தமிழ்நாட்டில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தை செயல்படுத்தும் மூன்று திட்டச் செயலாக்க நகரங்களுள் (Mission Cities) மதுரையும் ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ், இரண்டாம் வைகை குடிநீர் மேம்பாட்டுத்திட்டம் ரூ. 71.20 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு 24.10.09 முதல் பொது மக்களின் பயன்பாட்டிலுள்ளது. மேலும், இத்திட்டத்தில் வைகை ஆற்றின் குறுக்கே மூன்று தடுப்பணைகள் ரூ. 9.15 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன. திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் ரூ. 74.29 கோடி மதிப்பீட்டிலும் விடுபட்ட பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் மற்றும் ஏற்கனவே உள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களைப் புதுப்பித்தல் ஆகியவை ரூ..229.34 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மதுரை மாநகராட்சியில் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு உள்ள இடங்களில் ரூ.2.82 கோடி மதிப்பீட்டில் மண்சாலைகள் மற்றும் கற்சாலைகளை சிமெண்ட் மற்றும் தார்ச் சாலைகளாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முனிச்சாலை, அருள்தாசபுரம், செல்லூர், மேலப்பொன்னகரம் மற்றும் புதூர் ஆகியஇடங்களில்உள்ளமாநகராட்சிமருத்துவமனைகள்ரூ.1.48

கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்பட்டுள்ளன. கூடுதலாக ராயலூர் ஐயர் மகப்பேறு இல்லம், சங்கர் நகர் மகப்பேறு இல்லம் மற்றும் லேடி வெலிங்டன் மகப்பேறு இல்லம் ஆகியன ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படவுள்ளன.

வெள்ளைக்கல்லில் உள்ள பாரம்பரியமிக்க கட்டடத்தினை ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் பயிற்சி மையமாக புனரமைக்கவும், மேலக்கால் நீரேற்று நிலையத்தில் ரூ.0.20 கோடி மதிப்பீட்டில் மின்ஆக்கி வசதி செய்யவும், பாதாளச் சாக்கடைத் திட்ட கழிவுநீர்க் குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை அகற்றுவதற்கு ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் இயந்திரங்கள் வாங்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மேலும், மின் உற்பத்தி இயந்திரம் மற்றும் துப்புரவுப் பணியாளர்களுக்கான குடியிருப்பு போன்ற பல்வேறு உள்கட்டமைப்புப் பணிகள் ரூ.8.35 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுவருகின்றன.

மதுரை மாநகராட்சியில், நகர்ப்புர ஏழைகளுக்கான அடிப்படை வசதிச் சேவைகளுக்கான திட்டத்தின் கீழ், 22766 வீடுகளைக் கொண்ட, 3 திட்டங்களை ரூ.307.19 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அவற்றில் 3654 அலகுகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. 7215 அலகுகள் கட்டும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள அலகுகள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

### 3.13 கோயம்புத்தூர் மாநகராட்சி

கோயம்புத்தூர், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தை செயல்படுத்தும் திட்ட செயலாக்க நகரங்களுள் ஒன்றாகும். இரண்டாவது பில்லூர் குடிநீர்த்திட்டம், பாதாளச் சாக்கடை மற்றும் திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் ஆகியன பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. 2010–11–ஆம் ஆண்டில், பெரிய அளவிலான மழைநீர் வடிகால் அமைக்கும் பணி (முதல் கட்டம்) ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.180.00 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இம்மாநகரில் உலகச் செம்மொழித் தமிழ் மாநாடு இவ்வாண்டு ஜூன் மாதம் 23–ஆம் தேதி முதல் 27–ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. இதன் பொருட்டு, சாலைகளை மேம்படுத்தும் பணி, ரூ.26.31 கோடி மதிப்பீட்டில், மாநில உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு நிதித் திட்டத்தின் கீழ் நடைபெற்று வருகிறது. (அரசாணை (நிலை) எண்.20, வீட்டுவசதி (ம) நகர்ப்புர வளர்ச்சித் துறை நாள்.03.02.2010). மேலும், குடிநீர் அபிவிருத்தி போன்ற இதர வசதிகளும் ரூ. 7.04 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. (அரசாணை (நிலை) எண்.30 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.10.2.10) இம்மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து ரூ.25.24 கோடி மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்கும் விதமாக, மேட்டுப்பாளையம் சாலையில் ரூ.7.00 கோடி மதிப்பீட்டில், ஒரு கூடுதல் பேருந்து நிலையம் கட்டும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டு முடிவுறும் நிலையில் உள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சியின் எல்லைக்குள் அமைந்துள்ள 8 குளங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் மாநகராட்சி வசம் நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் ஒப்படைக்க பொது பணித்துறைக்கு அரசு அனுமதி–யளித்துள்ளது. இதன்படி, மாநகராட்சி, 29.12.2009 அன்று, இந்த 8 குளங்களையும் பொதுப் பணித் துறையிடமிருந்து பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது.

மாநகராட்சியின், தேர்ந்தெடுக்கப்பட்ட 8 பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகள் ரூ. 6.00 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ளன.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் நகர்ப்புர ஏழைகளுக்கான அடிப்படை வசதிச் சேவைகளுக்கான திட்டத்தின் கீழ் 22230 வீடுகள் கொண்ட, 3 திட்டங்கள், ரூ.443.57 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அவற்றில் 1721 அலகுகள் கட்டும் பணி முடிவுற்றுள்ளது. 2135 அலகுகள் கட்டும் பணி செயலாக்கத்தில் உள்ளது. மீதமுள்ள அலகுகள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்திலுள்ளன.

### 3.14 சேலம் மாநகராட்சி

குடிநீர்த் திட்டம் ரூ.283.09 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் – III-ன் கீழ் மேற்கொள்ள நடவடிக்கையிலுள்ளது. இது 5 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

சேலம் மாநகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த ரூ.149.39 கோடி மதிப்பீட்டில் அரசால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இது 7 சிப்பங்களாகச் செயல்படுத்தப் படவுள்ளது. (கழிவுகளை சேகரிக்கும் அமைப்பை உருவாக்க 3 சிப்பங்கள், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைக்க 4 சிப்பங்கள்) 2 சிப்பங்களில் பணிகள் நடைபெறுகின்றன. 4 சிப்பங்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு கூர்ந்தாய்வில் உள்ளன. மீதமுள்ள ஒரு சிப்பத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க நடவடிக்கையிலுள்ளது.

திருமணிமுத்தாறு மேம்பாட்டுத் திட்டம் நிலை–II-ன் கீழ், ரூ.31.05 கோடி மதிப்பீட்டில் திருமணிமுத்தாறின் 5.62 கி.மீ நீளத்திற்கு சிமெண்ட் லைனிங் அமைக்கும் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ( 2.80 கி.மீ நீளத்திற்கு திருமணிமுத்தாறு மற்றும் 2.82 கி.மீ நீளத்திற்கு வெள்ளக் குட்டை ஓடை ஆகியவை) மற்றும் போக்குவரத்தை மேம்படுத்த 3 இடங்களில் பாலங்கள் அமைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.

நவீன எரிவாயு தகன மேடை ரூ. 0.98 கோடி மதிப்பீட்டில் சேலம் சாலையில் உள்ள கக்கையன் இடுகாட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சியின் 22 பள்ளிகளில் வகுப்பு அறை கட்டுதல், கழிவறை அமைத்தல் சுற்றுச்சுவர் மற்றும் இதர அடிப்படை தேவைகள் உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகள் ரூ.2.05 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ளன.

ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1006 குடியிருப்பு அலகுகள், ரூ.15.58 கோடி மதிப்பீட்டில் கட்ட அனுமதிக்கப்பட்டு, 63 அலகுகள் கட்டும் பணி முடிவுற்றும், 537 அலகுகள் கட்டும் பணி முன்னேற்ற நிலையிலும் உள்ளன. மீதமுள்ள 406 அலகுகள் கட்டும் பணி விரைவில் துவங்கப்படும்.

### 3.15 திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

நகரமக்களுக்கு ஒரே சீரானமுறையில் குடிநீர் வழங்கும் பொருட்டு, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதியம் மூலம் நிதியுதவி பெற்று, முழுமையான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ரூ.143.00 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணி 7 சிப்பங்களாக நிறைவேற்றப்படவுள்ளது. இதில், 6 சிப்பங்களுக்கானப் பணிகள் முன்னேற்றத்திலுள்ளன மற்றும் மீதமுள்ள ஒரு சிப்பம் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது.

ஜெர்மன் மேம்பாட்டு வங்கியின் நிதி உதவியுடன் ரூ.24.30 கோடி மதிப்பீட்டில், 89.66 கிலோ மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலைப் பணிகள் 40 சிப்பங்களாக செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன.

அடிப்படை வசதிகளுடன் கூடிய துப்புரவுப் பணியாளர்கள் குடியிருப்புகள் உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியிலிருந்து ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1208 குடியிருப்பு அலகுகள், ரூ.19.96 கோடி மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டு, 23 அலகுகள் கட்டும் பணி முடிவுற்றும், 621 அலகுகள் கட்டும் பணி முன்னேற்ற நிலையிலும் உள்ளன. மீதமுள்ள 564 அலகுகள் கட்டும் பணி விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

### 3.16 திருநெல்வேலி மாநகராட்சி

புதிய ஒருங்கிணைந்த மாநகராட்சியின் மைய அலுவலகக் கட்டடம், உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ், ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஜெர்மன் மேம்பாட்டு வங்கி நிதியுதவிடன் ரூ.22.22 கோடி மதிப்பீட்டில் புதிய குடிநீர் மேம்பாட்டுத்திட்டம்

இரண்டு சிப்பங்களில் செயல்படுத்தப்பட்டுவருகிறது. முதல் சிப்பப் பணிகள் முன்னேற்றத்திலுள்ளன. எஞ்சியுள்ள சிப்பங்களுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பாய்வில் உள்ளன.

மேலப்பாளையம் பகுதியில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியிலிருந்து ரூ.3.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

பகுதி–II திட்டத்தின் கீழ், 8 கிலோ மீட்டர் நீளமுள்ள, 6 மண்சாலைகளை தார்ச்சாலைகளாக மாற்றும் பணிகள் ரூ.0.57 கோடி மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2003 குடியிருப்பு அலகுகள் ரூ.19.99 கோடி மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டு, 38 அலகுகள் கட்டும் பணி முடிவுற்றுள்ளது. 1175 அலகுகள் கட்டும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. எஞ்சியுள்ள 790 அலகுகள் கட்டும் பணி விரைவில் துவங்கப்படும்.

### 3.17 ஈரோடு மாநகராட்சி

ஈரோடு மாநகராட்சி மற்றும் அதைச் சுற்றியுள்ள நான்கு மூன்றாம் நிலை நகராட்சிகளுக்கு ஜெர்மன் நாட்டு வங்கியின் நிதி உதவியுடன் பாதாளச் சாக்கடைத் திட்டம், 5 சிப்பங்களாக, ரூ.209.22 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த

உத்தேசிக்கப்பட்டுள்ளது. பணி ஆணை வழங்கப்பட்ட இரண்டு சிப்பங்களில், நில அளவைப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உள்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ், ரூ.5.88 கோடி மதிப்பீட்டில் ஏற்கனவே உள்ள குடிநீர்த் திட்டத்தை மேம்படுத்த 9 சிப்பங்களில் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இரண்டு சிப்பங்களுக்கான பணிகள் முடிவடைந்து விட்டன மற்றும் இதரப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2009–10–ஆம் ஆண்டுக்கான உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியிலிருந்து ரூ.0.75 கோடி மதிப்பீட்டில் மாநகராட்சிக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், மற்றும் ரூ.0.75 கோடி மதிப்பீட்டில் சுகாதாரப் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டும் பணி ஆகியவை மேற்கொள்ளப்படவுள்ளன.

ஈரோட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள நவீன எரிவாயுத் தகனமேடை நல்லமுறையில் பராமரிக்கப்பட்டுவருகிறது. மேலும், கூடுதலாக ஒரு எரிவாயுத் தகனமேடை 2010–11ம் ஆண்டுக்கான உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியிலிருந்து ரூ.0.40 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ளது.

### 3.18 திருப்பூர் மாநகராட்சி

முறைப்படுத்தப்பட்ட அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் மழை நீர் வடிகால், சாலைகள் மற்றும் இதர

அடிப்படை வசதிப் பணிகளை மேற்கொள்ள ஜெர்மன் மேம்பாட்டு வங்கி நிதியிலிருந்து ரூ.40.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் 10 சிப்பங்களாக செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பணிகள் செயலாக்கத்தில் உள்ளன.

புதிய மற்றும் பழைய பேருந்து நிலையங்களில் நவீனக் கழிப்பறைகள் ரூ.0.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட உள்ளன. 14.40 கி.மீ நீளமுள்ள மண்சாலைகள் தார்ச் சாலைகளாக ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் மாற்றப்படவுள்ளன.

திருப்பூர் மாநகராட்சியில் ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2060 குடியிருப்பு அலகுகள் ரூ.20.68 கோடி மதிப்பீட்டில் கட்ட அனுமதிக்கப்பட்டு, 410 அலகுகள் கட்டும் பணி முடிவுற்றுள்ளன. 687 அலகுகள் கட்டும் பணி முன்னேற்றத்திலுள்ளன. மீதமுள்ள 963 அலகுகள் கட்டும் பணி விரைவில் துவங்கப்படும்.

### 3.19 வேலூர் மாநகராட்சி

வேலூர் மாநகராட்சியில் ரூ.39.28 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டம் தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் IIIன் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணி மூன்று சிப்பங்களில் எடுத்துக்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது.

புதிய அலுவலக வளாகம் ரூ.4.98 கோடி மதிப்பீட்டில் கேளிக்கை வரி இழப்பீட்டு நிதி மற்றும் மாநகராட்சியின் பொது நிதி ஆகியவற்றைக் கொண்டு கட்டப்பட்டு வருகின்றது.

வேலூர் மாநகராட்சியாக நிலை உயர்த்தப்பட்ட போது உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.5 கோடியினை மானியமாக அரசு அனுமதித்துள்ளது. மாநகராட்சியில், ரூ.12.00 கோடி மதிப்பீட்டில் 35 பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இதில் 17 பணிகள் முடிவடைந்துள்ளன.

## 3.20 தூத்துக்குடி மாநகராட்சி

“பக்கிள் ஓடை” கால்வாய் நகரின் வழியாக 6.26 கி.மீ தூரத்திற்கு செல்கிறது. இந்தக் கால்வாயை சீரமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. இதில் முதற்கட்டமாக 1.86 கி.மீ. கால்வாயில் ரூ 6.98 கோடி மதிப்பீட்டில் சிமெண்ட் லைனிங் அமைக்கப்பட்டுவிட்டது. இரண்டாம் கட்ட பணிகள் 2.42 கி.மீ நீளத்திற்கு ரூ 7.50 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இதில் ரூ 6.00 கோடி கேளிக்கை வரி இழப்பீட்டு நிதியிலிருந்து வழங்கப்படும் மானியமாகும்.

ரூ 4.75 கோடி செலவில் தூத்துக்குடி மாநகராட்சிற்கு புதிய அலுவலக கட்டடம் கட்டும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது.



புதிதாகக் கட்டப்பட்டுள்ள நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி, பொள்ளாச்சி



புதிய பேருந்து நிலையம், கொடைக்கானல்



வாணியம்பாடியில் கட்டப்பட்டுள்ள புதிய பாலம்



புதிய அலுவலகக் கட்டடம், வளசரவாக்கம்



தேவக்கோட்டையில் அமைக்கப்பட்டுள்ள புதிய பூங்கா



நவீன எரிவாயுத் தகனமேடை, ஈரோடு



சீரமைக்கப்பட்ட பக்கிள் ஓடை, தூத்துக்குடி



புதிய தார்ச் சாலை, உடுமலைப்பேட்டை



நவீன இறைச்சிக் கூடம், திருப்பூர்



BSUP திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி குடியிருப்புகள் – உக்கடம், கோயம்புத்தூர்

# 4. பேரூராட்சிகள் இயக்குநரகம்

1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் கீழ் பேரூராட்சிகள் நிர்வகிக்கப்படுகின்றன. மாநிலத்தில் 561 பேரூராட்சிகள் உள்ளன. இவை சிறப்பு நிலை, தேர்வுநிலை, முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலை பேரூராட்சிகள் என வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

பல பேரூராட்சிகள், சுற்றுலா, புராதன மற்றும் புனிதயாத்திரை முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகும். 2001–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி பேரூராட்சிகளின் மொத்த மக்கள் தொகை 76,46,386 ஆகும். மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் இது 12 விழுக்காடு ஆகும். நகரப்பகுதி மக்கள் தொகையில் 28 விழுக்காடு மக்கள் பேரூராட்சிகளில் வசிக்கின்றனர்.

## 4.1 நிர்வாகம்

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ், 561 பேரூராட்சிகளின் செயல்பாட்டினை கவனிக்க பேரூராட்சிகளின் இயக்குநர் துறைத் தலைவராகச் செயல்படுகிறார். மாநிலத்தில், 16 மண்டல அலுவலகங்கள் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள் தலைமையில் செயல்படுகின்றன. மாவட்ட அளவில்

மாவட்ட ஆட்சியர்கள், பேரூராட்சிகளின் செயல்பாடுகளை கண்காணித்து வருகின்றனர்.

## 4.2 காலிப்பணியிடங்களை நிரப்புதல்

இத்துறையில் **13.05.2006**–லிருந்து நாளது தேதி வரை செயல் அலுவலர், இளநிலை உதவியாளர், வரித்தண்டலர், துப்புரவு ஆய்வாளர், துப்புரவு மேற்பார்வையாளர், துப்புரவு பணியாளர்கள், குடிநீர் வழங்கல் பராமரிப்பு பணியாளர்கள், தெருமின் விளக்கு பராமரிப்பு பணியாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் உள்ளிட்ட நிர்வாக அமைப்பைச் சார்ந்த பதவிகளுக்கான காலியிடங்களில், ஊதிய ஏற்றமுறையில் **6431** பணி நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன.

**பணி நியமனம் செய்யப்பட்ட விவரங்கள்**

| வ. எண் | நியமன முறை | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நேரடி நியமனம் | 2649 |
| 2 | கருணை அடிப்படையில் பணி நியமனம் | 461 |
| 3 | தொகுப்பூதிய பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்தது | 2924 |

| | | |
|---|---|---|
| 4 | தினக்கூலி பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்தது | 194 |
| 5 | பணித்தொகையில் கூலி பெறும் பணியாளர்களை வரன்முறை செய்தது | 177 |
| 6 | பொது நிறுவனங்களில் பணியிழந்த பணியாளர்களுக்கு மறு பணி நியமனம் வழங்கியது | 26 |
| | **மொத்தம்** | **6431** |

## 4.3 பேரூராட்சிகளின் செயல்பாடுகள்

பேரூராட்சிகள் பொதுமக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல், தெருவிளக்குள் அமைத்தல், பொதுச் சுகாதாரத்தை மேம்படுத்துதல், திடக்கழிவு மேலாண்மை, சாலைகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல், மழைநீர் மற்றும் கழிவுநீர் அகற்றல், நடைபாதைகள் அமைத்தல், இடுகாடுகளை பராமரித்தல், இறைச்சிக் கூடங்கள் அமைத்தல், பொதுமக்கள் சேவைகளான சமுதாயக் கூடங்கள், சந்தைகள் மற்றும் பேருந்து நிலையங்களை அமைத்து பராமரித்தல், பிறப்பு / இறப்பு சான்றிதழ்கள் வழங்குதல், வீட்டு மனை அனுமதி, கட்டட அனுமதி மற்றும் வணிக அனுமதி அளித்தல் போன்ற முக்கியப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

## 4.4 நிதி ஆதாரங்கள்

சொத்துவரி, தொழில் வரி, குத்தகை இனங்கள், குடிநீர் மற்றும் இதர கட்டணங்கள் போன்றவை பேரூராட்சிகளின் நிதி ஆதாரங்களாக அமைந்துள்ளன. முத்திரைத்தாள் மேல்வரி மற்றும் கேளிக்கைவரி பங்கு ஆகியவை பேரூராட்சிகளின் மறைமுக வருவாயாக உள்ளன. மேலும் பேரூராட்சிகள் மாநில நிதிப் பகிர்வு மற்றும் 12–வது நிதிக்குழு மானியம் மூலமாக கணிசமான அளவு நிதியினைப் பெற்று வருகின்றன.

## 4.5 பேரூராட்சிகளின் நிதி வரவு

பேரூராட்சிகளில் 2009–2010–ஆம் ஆண்டின் மொத்த நிதி வரவு சுமார் ரூ.1233.97 கோடி ஆகும். இதில் மாநில நிதிப் பகிர்வு நிதியாக ரூ.403.04 கோடியும், 12–வது நிதிக்குழு மானியமாக ரூ.32.10 கோடியும் பெறப்பட்டுள்ளன. கேளிக்கை வரி மானியம், சுற்றுலா வளர்ச்சித் திட்டம், மலைப் பகுதி வளர்ச்சி திட்டம், மேற்குத் தொடர்ச்சிமலைப் பகுதி வளர்ச்சித் திட்டம், குறைந்தபட்சத் தேவைகள் திட்டம் மற்றும் பெரும் திட்டங்களான ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம் (JnNURM), அதன் உபதிட்டங்களான சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (UIDSSMT), ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (IHSDP), நகர்ப்புர ஏழைகளுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் திட்டம் (BSUP) போன்ற

திட்டங்களின் வாயிலாகப் பெறப்படும் மானியங்கள் பிற நிதி ஆதாரங்களாகும்.

## 4.6. பல்வேறு நிலை அலுவலர்களின் அதிகாரங்கள்

பேரூராட்சிகளின் இயக்குநர், 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் கீழ் பேரூராட்சிகளின் ஆய்வாளராக செயல்படுகிறார். திட்டங்களைச் சிறப்பாகவும், துரிதமாகவும் செயல்படுத்துவதற்கு ஏதுவாக நிர்வாக ஒப்பளிப்பு வழங்கும் அதிகாரிகளுக்கு உள்ள நிதி அதிகார வரம்புகளை அரசு உயர்த்தியுள்ளது. பேரூராட்சிகளின் இயக்குநர், மாவட்ட ஆட்சியர்கள், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள் மற்றும் தொழில்நுட்ப ஒப்பளிப்பு செய்யும் செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர்களின் அதிகார வரம்புகள் உயர்த்தப்பட்டுள்ளன.

## 4.7 குடிநீர் வழங்குதல்

பேரூராட்சிகளில் வசிக்கும் மக்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 70 லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதை அரசு இலக்காகக் கொண்டுள்ளது. குடிநீர் வழங்கும் திட்டங்களை பேரூராட்சிகள் தனித்தும் மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்துடன் இணைந்தும் பராமரித்து வருகின்றன.

பேரூராட்சிப் பகுதிகளில் குடிநீர் வழங்குதலை மேம்படுத்தவும், நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு வழங்கப்படும் குடிநீர் அளவு 70 லிட்டருக்கும் குறைவாக உள்ள பேரூராட்சிப் பகுதிகளில் குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வடிகால் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் ஆகியவற்றுடன் இணைந்து படிப்படியாக நிறைவேற்றப்படவுள்ளன.

## 4.8 உள்கட்டமைப்பு அபிவிருத்தி

### 4.8.1 அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

561 பேரூராட்சிகளிலும், அனைத்து அடிப்படை வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்கள், சமுதாயக்கூடங்கள், அலுவலகக் கட்டடங்கள், குடிநீர் ஆதாரங்களை புதுப்பித்தல் போன்றத் திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டு அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற புதியத் திட்டம் துவக்கப்பட்டது. அனைத்துப் பேரூராட்சிகளிலும் 2007–2008 முதல் நான்கு ஆண்டுகளில் இத்திட்டத்தை நிறைவேற்ற அரசாணை (நிலை) எண்.94 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2) நாள் 06.07.2007ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

### 4.8.2 நிறைவேற்றப்பட வேண்டிய திட்டப்பணிகள்

| | |
|---|---|
| 1. | பேரூராட்சிகளில் பேருந்து செல்லும் பிரதானச் சாலைகளைத் தார்ச் சாலையாக அமைத்தல் மற்றும் மழை நீர் வடிகால், நடைபாதை, அடர்மின் விளக்குகள் அமைத்தல் |
| 2. | சமுதாயக் கூடம் கட்டுதல் |
| 3. | ஊரணி, குளம் , விளையாடும் பூங்கா ஆகியவற்றை மேம்படுத்துதல் |
| 4 | குடிசைப் பகுதிகளில் சிமெண்ட் சாலை அமைத்தல் |
| 5. | பேரூந்து நிலையம் , நாளங்காடி, சந்தை ஆகியவை மேம்பாடு செய்தல் |
| 6. | சுடுகாடு மற்றும் இடுகாடு ஆகியவற்றை மேம்படுத்துதல் |

2007–2008–ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 140 பேரூராட்சிகளில் 1493 பணிகள் ரூ.74.05 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டன. இத்திட்டப் பணிகளுடன் பிற நிதி ஆதாரங்களின் கீழ் மற்றப் பணிகளையும் மற்றும் இதர துறைகளின் திட்டங்களையும் ஒருங்கிணைத்துப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. 2008–2009–ஆம் ஆண்டில் 140 பேரூராட்சிகளில் 1439 பணிகள் ரூ.78.32 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. 2009–2010–ஆம் ஆண்டில் மேலும் 140 பேரூராட்சிகளில்

1331 பணிகளை உள்ளடக்கி 84.09 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2010-2011–ஆம் ஆண்டில் மீதமுள்ள பேரூராட்சிகளில் ரூ.70.00 கோடி நிதி ஒதுக்கீட்டில், நான்காவது மற்றும் கடைசி கட்டமாக இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

## 4.9 ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம் (JnNURM)

இத்திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள 16 பேரூராட்சிகளுக்கு ரூ.81.47 கோடி மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நிறைவேற்றப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், திருவள்ளூர் மாவட்டத்தில் போரூர் மற்றும் திருமழிசை பேரூராட்சிகளிலும், காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள பெருங்குடி, பெருங்களத்தூர், பள்ளிக்கரணை, பீர்க்கன்கரணை, சிட்லப்பாக்கம், செம்பாக்கம் மற்றும் மாடம்பாக்கம் ஆகிய 9 பேரூராட்சிகளிலும் ரூ.350.73 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மூலம் நிறைவேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 4.10 ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (IHSDP) மற்றும் நகர்ப்புர ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டம் ( BSUP)

ஒருங்கிணைந்த வீடுகள் மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 25 பேரூராட்சிகளில், ரூ.59.43 கோடி மதிப்பீட்டில் 4361 வீடுகள் கட்டும் பணிகள் துவக்கப்பட்டு இதுவரை 1687 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள வீடுகளின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நகர்ப்புர ஏழைகளுக்கான அடிப்படை வசதி திட்டத்தின் கீழ் ரூ.46.41 கோடி மதிப்பீட்டில் 17 பேரூராட்சிகளில் 2487 வீடுகள் கட்டும் பணிகளும் நடைபெற்று வருகிறன. இவற்றில் 895 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதரப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

## 4.11 பொன்விழா ஆண்டு நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டம் (SJSRY)

நகர்ப்புரங்களில் வேலையற்ற மற்றும் வேலைவாய்ப்புக் குறைவாக உள்ளவர்களுக்கு இலாபகரமான சுய வேலை வாய்ப்பு மற்றும் கூலி வேலைவாய்ப்புகளை உருவாக்கும் இத்திட்டத்தில் கீழ்க்கண்ட 5 துணைத் திட்டங்கள் அடங்கியுள்ளன.

1) நகர்ப்புர சுய வேலைவாய்ப்புத் திட்டம் ( Urban Self Employment Programme)

2) நகர்ப்புர மகளிர் சுய உதவித் திட்டம் ( Urban Women Self Help Programme)

3) நகர்ப்புர ஏழைகளுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்க திறன் பயிற்சி அளித்தல் (Skill Training for Employment Promotion amongest Urban Poor)

4) நகர்ப்புர கூலி வேலைவாய்ப்புத் திட்டம் (Urban Wage Employment Programme)

5) நகர்ப்புர சமுதாய வளர்ச்சித் தொடரமைப்பு (Urban Community Development Network)

**4.12 பகுதி – 2 திட்டம்**

2010-2011–ஆம் ஆண்டில் 22 பேரூராட்சிகளில் உள்ள பேருந்து நிலையங்கள் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் பகுதி -II திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்படும்.

**4.13 அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதிப் பற்றாக்குறை மற்றும் இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான நிதி**

இத்திட்டத்தின் கீழ், ரூ.25.00 கோடி உத்தேச மதிப்பீட்டில் பல்வேறு பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி நிதியிலிருந்து குடிநீர்க் கட்டணம் மற்றும் மின்கட்டணம் ஆகியவற்றின் ஒரு பகுதி ஏற்கப்படும்.

### 4.14 நபார்டு நிதி உதவி

நபார்டு நிதி உதவித் திட்டத்தின் கீழ், 2009-2010–ஆம் ஆண்டில், 358 பேரூராட்சிகளில் 871 கி.மீ. நீளமுள்ள 684 சாலைகளை ரூ.113.57 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துவதுடன் 52 பேரூராட்சிகளில் 85 சுகாதார வளாகங்கள் ரூ.5.36 கோடி மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 4.15 உலகத் தமிழ் செம்மொழி மாநாடு

கோவையில் உலகத் தமிழ் செம்மொழி மாநாடு நடைபெறவுள்ளதையொட்டி காளப்பட்டி பேரூராட்சியில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளாகிய சாலைகள், மழைநீர்க் கால்வாய்கள், சாலையோரப் பூங்காக்கள், தெருமின் விளக்குகள் அமைக்க ரூ.2.91 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 4.16 காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழா ஒதுக்கீடு

பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, காஞ்சிபுரம் மாவட்டம் செவிலிமேடு பேரூராட்சியில் பூங்கா அபிவிருத்தி, சிமெண்ட் சாலை, உயர் கோபுர மின்விளக்கு அமைத்தல் மற்றும் மழை நீர் வடிகால்

கட்டுதல் ஆகிய வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள அரசு சிறப்பு மானியமாக ரூ.1.02 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இப்பணிகள் ஏப்ரல் 2010க்குள் முடிக்கப்படும்.

## 4.17 சுனாமி மறுவாழ்வுப் பணிகள்

சுனாமி நிவாரணம் மற்றும் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ், பாதிக்கப்பட்ட மக்களுக்கு பயனளிக்கும் வகையில், ஆசிய வங்கி நிதி உதவியுடன் 5 மாவட்டங்களில் உள்ள 19 பேரூராட்சிகளில் சுனாமி அவசரகால உதவித் திட்டம் (TEAP) மற்றும் உலக வங்கி நிதி உதவியுடன் 6 மாவட்டங்களில் உள்ள 18 பேரூராட்சிகளில் அவசரகால சுனாமி புனரமைப்புத் திட்டம் (ETRP) ஆகியவற்றின் மூலம் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

## 4.18 சுனாமி அவசரகால உதவி திட்டம் (TEAP)

சுனாமி அவசர கால உதவித் திட்டப்பணிகள் கடற்கரை மாவட்டங்களான காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி ஆகியவற்றில் மாமல்லபுரம், சோழிங்கநல்லூர், இடைக்கழிநாடு, மரக்காணம், கோட்டக்குப்பம், கிள்ளை, பரங்கிபேட்டை, வேளாங்கன்னி, தரங்கம்பாடி, கன்னியாகுமரி, ரீத்தாபுரம், மணவாளக்குறிச்சி, கல்லுக்கூட்டம், கணபதிபுரம், மண்டைக்காடு, பாலபள்ளம், புத்தளம், அஞ்சுகிராமம் மற்றும் கொல்லங்கோடு ஆகிய 19 பேரூராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவி மூலம் கீழ்கண்ட பணிகளை செயல்படுத்த ரூ.63.67 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் 31.10.2009 வரை ரூ.62.09 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

**(ரூ. கோடியில்)**

| | | |
|---|---|---|
| 1. பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார மறுவாழ்வு அளித்தல் | - | ரூ. 12.78 |
| 2. சாலைகள் மற்றும் கட்டடங்கள் மேம்படுத்துதல் | - | ரூ. 35.02 |
| 3. குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் மேம்படுத்துதல் | - | ரூ. 8.94 |
| 4. நிர்வாகம் மற்றும் இதரச் செலவினங்கள் | - | ரூ. 6.93 |
| **மொத்தம்** | - | **ரூ. 63.67** |

## 4.19 அவசர கால சுனாமி புனரமைப்புத் திட்டம் (ETRP)

அவசரகால சுனாமி புனரமைப்புத் திட்டத்தின் கீழ் பணிகளை நிறைவேற்ற ரூ.19.34 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சுனாமியால் பாதிக்கப்பட்ட காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர்,

நாகப்பட்டினம், கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள 18 பேரூராட்சிகளுக்குட்பட்ட 57 புதிய குடியிருப்புப் பகுதிகளில் கீழ்க்காணும் அடிப்படை வசதிகளை நிறைவேற்றும் பணிகள் துவக்கப்பட்டு 31.01.2010 வரை இப்பணிகளுக்காக ரூ.17.15 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**(ரூ.கோடியில்)**

| வ.எண் | துணைத் திட்டங்கள் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 1 | சாலைகள் மற்றும் கட்டடங்கள் அமைத்தல் | 16.75 |
| 2 | தெருவிளக்குகள் மற்றும் வீடுகளுக்கு மின்இணைப்பு அளித்தல் | 1.05 |
| 3 | இதரச் செலவினங்கள் | 0.92 |
| 4 | திட்ட நிர்வாகம் | 0.62 |
| | **மொத்தம்** | **19.34** |

மாமல்லபுரம், இடைக்கழிநாடு, மரக்காணம், கோட்டக்குப்பம், கிள்ளை, பரங்கிப்பேட்டை, வேளாங்கன்னி, தரங்கம்பாடி, கன்னியாகுமரி, ரீத்தாபுரம், மணவாளக்குறிச்சி, கணபதிபுரம், மண்டைக்காடு, பாலப்பள்ளம், புத்தளம், ஏழுதேசம், கொல்லங்கோடு மற்றும் திருச்செந்தூர் ஆகிய 18 பேரூராட்சிகளில் 41.26 கி.மீ நீளமுள்ள உட்புற மற்றும்

அணுகுசாலைகள் அமைத்தல், 943 தெருவிளக்குகள் அமைத்தல், 6816 வீடுகளுக்கு மின் இணைப்புகள் வழங்குதல், பொது உபயோகக் கட்டடங்களான சமுதாயக் கூடங்கள், நூலகம், சுய உதவிக் குழு கட்டடங்கள், சமையல் அறை கட்டடங்கள், பேருந்து நிறுத்தங்களில் நிழற்கூடங்கள் மற்றும் மயானக் கொட்டகை அமைத்தல் முதலிய பணிகள் முடிவடைந்துள்ளன.

மேற்கண்டத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டு வரும் எஞ்சியுள்ள சாலைப் பணிகளை விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.




புதிய சமுதாய நலக்கூடம், வேடப்பட்டி



பேருந்து நிலையம், சங்ககிரி



புதிய அலுவலகக் கட்டடம், ஆலம்பாளையம்



நவீன எரிவாயுத் தகன மேடை, ஒட்டன்சத்திரம்



சிமெண்ட் சாலை, பி.மேட்டுப்பாளையம்



புதிய சிறுவர் பூங்கா, பாப்பாரப்பட்டி

# 5. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், 1978–ஆம் ஆண்டு சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியச் சட்டத்தின்படி, உருவாக்கப்பட்டு, சென்னைப் பெருநகர் பகுதியில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றும் சேவையை திட்டமிட்டு செயற்படுத்துதல், தேவையான உள்கட்டமைப்புகளை அமைத்தல், குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றும் அமைப்பை திறம்பட இயக்குதல், பராமரித்தல் மற்றும் குடிநீர் வழங்கல்/ கழிவுநீரகற்றல் தேவையை நிறைவு செய்யும் விதத்தில் தொலை நோக்குத் திட்டங்களைத் தயாரித்தல் போன்ற முக்கிய பொறுப்புகளைக் கொண்டு இயங்கி வருகின்றது.

தற்போது, வாரியம் சென்னை மாநகர் மற்றும் அருகாமையிலுள்ள சில நகர்ப்புர பகுதிகளில் வசிக்கும் 55 இலட்சம் மக்களுக்கு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் சேவைகளை நேரிடையாக அளித்துவருகிறது. தவிர, வாரியம், சென்னை மாநகரின் அருகாமையிலுள்ள 12 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 3 ஊராட்சிகளில் வசிக்கும் ஏறத்தாழ 19 இலட்சம் மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்து வருகின்றது.

## 5.1 நிறுவனத்தின் வளர்ச்சியும் அதன் பணிகளும் :

எந்நகரமாயினும், பாதுகாப்பான குடிநீர் வழங்கல் மற்றும் பாதுகாப்பான முறையில் கழிவுகளை தீர்வு செய்தல் ஆகியவை சுற்றுச் சூழல் மேம்பாட்டிற்கும் மற்றும் மாநகர மக்களின் நலனுக்கும் இன்றியமையாததாகும். நியாயமான கட்டணத்தில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் வசதிகளை அளிக்க அரசு உறுதி பூண்டுள்ளது.

சென்னைக் குடிநீர் வாரியம் கடந்த 32 ஆண்டுகளில் சென்னை நகரில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் பணிகளில் குறிப்பிடத்தக்க அளவு தனது திறனையும் உள்கட்டமைப்புகளையும் அதிகரித்துள்ளது. 1978–ஆம் ஆண்டு வாரியம் உருவானது முதல் அதன் வளர்ச்சி விவரம் பின்வருமாறு.

| **விவரங்கள்** | **1978ல் உள்ள நிலை** | **தற்போதைய நிலை (06.04.2010 வரை)** |
|---|---|---|
| இயக்கத்திலுள்ள பகுதி **(ச.கி.மீட்டர்)** | 170 | 184 |
| மக்கள்தொகை **(இலட்சம்)** | 30 | 55 |
| **குடிநீர் வழங்கல்** | | |
| குடிநீர் வழங்கல் **(நாளொன்றுக்கு மில்லியன் லிட்டர்)** | 240 | 580 |

| | | |
|---|---|---|
| குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கும் பகுதி | 80% | 100% |
| குடிநீர்க் குழாய்களின் நீளம் **(கி.மீட்டர்)** | 1250 | 2930 |
| குடிநீர் விநியோக நிலையங்கள் | 3 | 16 |
| குடிநீர் சுத்திகரிப்புத் திறன் (நாளொன்றுக்கு மில்லியன் லிட்டர்) | 182 | 1294 |
| குடிநீர் இணைப்புள்ள நுகர்வோர்களின் எண்ணிக்கை | 116000 | 497811 |
| **கழிவு நீரகற்றல்** | | |
| கழிவுநீகரற்றும் வசதியுடைய பகுதி | 74% | 100% |
| கழிவுநீர்க் குழாய்களின் நீளம்**(கி.மீட்டர்)** | 1223 | 2677 |
| கழிவுநீரகற்று நிலையங்களின் எண்ணிக்கை | 58 | 194 |
| கழிவுநீர் சுத்திகரிப்புத் திறன் **(நாளொன்றுக்கு மில்லியன் லிட்டர்)** | 57 | 486 |
| கழிவுநீர் இணைப்புள்ள நுகர்வோர்களின் எண்ணிக்கை | 114000 | 598249 |

## 5.2 குடிநீர் வழங்கல் மேலாண்மை:

### 5.2.1 குடிநீர் ஆதாரங்கள்:

சென்னை நகர மக்களின் தேவைக்கேற்ப பாதுகாப்பான குடிநீரை வழங்குவது இவ்வாரியத்தின் உறுதியான தொடர் முயற்சியாகும். இதற்குத் தேவையான நீர் சென்னையைச் சுற்றியுள்ள மேற்பரப்பு நீராதாரங்களான பூண்டியிலுள்ள சத்தியமூர்த்தி சாகர், செங்குன்றம், சோழவரம் மற்றும் செம்பரம்பாக்கம், கடலூர் மாவட்டத்திலுள்ள வீராணம் ஏரி மற்றும் கிருஷ்ணா நதிநீர் திட்டத்தின் கீழ், கண்டலேறு அணை ஆகியவற்றிலிருந்து பெறப்படுகிறது. சென்னைக் குடிநீர் வாரியம், கடந்த நான்கு ஆண்டுகளாக, சென்னை நகர மக்களுக்கு தொடர்ந்து நாள்தோறும் குடிநீர் வழங்கி வருகிறது. தற்போது வாரியம் நாளொன்றுக்கு 600 மில்லியன் லிட்டர் அளவு குடிநீரை வழங்கி வருகின்றது. இதில் சுமார் 500 முதல் 525 மில்லியன் லிட்டர் நகரின் வீட்டு உபயோகிப்பாளர்களுக்கும், சுமார் 75 மில்லியன் லிட்டர் சென்னைப் பெருநகர் பகுதியிலுள்ள தொழிற்சாலைகள், பெருமளவு பயன்படுத்துவோர், வணிக வளாகங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கப்படுகிறது.

### 5.2.2 குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்துதல்:

சென்னை நகரின் அனைத்து குடிநீர் ஆதாரங்களும் பருவமழையைச் சார்ந்துள்ளன. பருவமழை குறையும்

போதெல்லாம் நகரில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படுகின்றது. மேலும், சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் பெரும் பொருளாதார வளர்ச்சி, குறிப்பாக உற்பத்தி மற்றும் சேவை துறைகளில், அடைந்துவருகின்றன. இப்பெரும்முன்னேற்றத்தின் விளைவாக குடிநீரின் தேவை கணிசமாக உயர்ந்து அரிதான நீர் ஆதாரங்களின் மீது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. நகரின் நீண்ட காலக் குடிநீர்த் தேவை மற்றும் நகரை வறட்சியிலிருந்து பாதுகாத்தல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, அரசு, கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்களை அமைக்க முன் வந்துள்ளது. அதன்படி, சென்னைக் குடிநீர் வாரியம், ஒவ்வொன்றும், நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட, கடல்நீரைக் குடிநீராக்கும் இரண்டு நிலையங்களை, கிழக்குக் கடற்கரையில், ஒன்று மீஞ்சூரிலும் மற்றொன்று நெம்மேலியிலும் நிறுவும் பணிகளை மேற்கொண்டுள்ளது.

## 5.3. மீஞ்சூர் அருகே காட்டுப்பள்ளியில் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம்:

சென்னைக் குடிநீர் வாரியம் மீஞ்சூரை அடுத்த காட்டுப்பள்ளியில் வடிவமைத்து நிறுவி, சொந்தமாக இயக்கி மற்றும் திருப்பித்தரும் (DBOOT) அடிப்படையில் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்தை அமைத்து வருகின்றது. சென்னைக் குடிநீர் வாரியம், திருவாளர்கள் ஐ.வி.ஆர்.சி.எல். (M/s IVRCL) மற்றும் பெஃபசா, ஸ்பெயின் (BEFESA கன்ஸ்ட்ரக்ஷன் y டெக்னாலஜியா ஆம்பியன்டல் லிமிடெட்,

ஸ்பெயின்) கூட்டு நிறுவனம் ஏற்படுத்திய சிறப்பு நோக்க அமைப்பு (SPV), சி.டபிள்யூ.டி.எல் (CWDL) நிறுவனத்துடன் மொத்தக் குடிநீர் கொள்முதல் ஒப்பந்தம் (BWPA) செய்துள்ளது. இவ்வொப்பந்தமானது, நிலையம் செயல்பாட்டிற்கு வரும் நாளிலிருந்து 25 ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும். இந்த 25 ஆண்டு காலத்தில், மொத்தக் குடிநீர் கொள்முதல் ஒப்பந்தத்தில் வரையறுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி, வாரியம், M/s. CWDL நிறுவனத்திடமிருந்து குடிநீரை விலைக்கு வாங்கும். ஒப்பந்தத்தின்படி, நிலையத்தை வடிவமைத்து, நிறுவி, செயற்படுத்தி இயக்குவது நிறுவனத்தின் பொறுப்பாகும். கடல்நீரை உள் கொணரும் மற்றும் அதிக உப்புத் தன்மைக் கொண்ட கழிவுகளை வெளியேற்றும் குழாய்கள் பதிக்கும் பணிகள் தவிர பெரும்பாலான பணிகள் முடிவுற்றுள்ளன. இந்த குழாய்கள் பதிக்கும் பணிகளை சில தொழில் நுட்ப காரணங்களால் M/s. CWDL நிறுவனத்தால் செயல்படுத்த இயலவில்லை. எனவே, இந்நிறுவனம், இந்த குழாய்கள் பதிக்கும் பணியினை மாற்று முறையில் மேற்கொள்ள முடிவு செய்தது. மாற்று முறையில் குழாய்களை பதிப்பதற்கு, சில நிபந்தனைகளுடன், வாரியம், நிறுவனத்திற்கு ஒப்புதல் வழங்கியது. அதன்படி, இந்நிறுவனம், இப்பணிகளை செயல்படுத்தி வருகிறது. பணிகள் விரைவில் முடிவுற்ற பின்னர், நிலையம் செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.

## 5.4 நெம்மேலியில் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம்:

சென்னை நகரின் நீண்ட கால குடிநீர் தேவைக்கு தீர்வு காணும் வகையிலும், சென்னை நகரை வறட்சியிலிருந்து பாதுகாப்பதற்கெனவும், கிழக்குக் கடற்கரைச் சாலையில் உள்ள நெம்மேலியில், நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட, கடல்நீரைக் குடிநீராக்கும் மற்றுமொரு நிலையம், அமைக்கப்பட்டு வருகிறது. இந்நிலையம், மத்திய அரசின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம், இரண்டு சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் சிப்பம், கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைத்தல் மற்றும் 7 ஆண்டுகளுக்கு இயக்கம் மற்றும் பராமரிப்பு பணி, ரூ.1033.68 கோடிக்கு (கட்டுமானப் பணி ரூ.533.38 கோடி + 7 வருடம் இயக்கம் மற்றும் பராமரிப்பு ரூ.500.30 கோடி) வழங்கப்பட்டுள்ளது. இரண்டாவது சிப்பம், நகரின் பகிர்மான அமைப்பிற்கு குடிநீரை கொண்டு செல்லும் குழாய் பதித்தல் மற்றும் தொடர்புடைய உள்கட்டமைப்பு அமைக்கும் பணி ரூ.122.50 கோடிக்கு, வழங்கப்பட்டுள்ளது. 7 வருடங்கள் உள்கட்டமைப்பு, இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிக்கான செலவு ரூ.1.02 கோடியும் இதில் உள்ளடங்கும். இப்பணி, சிறப்புத் தன்மை வாய்ந்தது என்பதைக் கருத்தில் கொண்டு, திட்ட மேலாண்மை மற்றும் கட்டுமானப் பணியை மேற்பார்வை செய்வதற்காக, வாரியம், ஒரு கலந்தறிதற்குரியரை, ரூ.13.46 கோடி மதிப்பில், ஒப்பந்த அடிப்படையில், நியமித்துள்ளது. மாண்புமிகு துணை

முதலமைச்சர் அவர்கள், இந்நிலையத்தின் கட்டுமானப்பணியை, 23.02.2010 அன்று துவக்கி வைத்தார்கள். தற்போது, பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகளை, 2011–ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.5 நிலையான கூடுதல் குடிநீர் ஆதாரங்களைக் கண்டறிதல்:

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின்படி, 2026–ஆம் வருடத்தில், சென்னை மாநகர் மற்றும் அருகாமையிலுள்ள பகுதிகளின் குடிநீர்த் தேவை, நாளொன்றுக்கு, 2248 மில்லியன் லிட்டராகும். ஆனால், கிருஷ்ணா நதி நீர் திட்டத்தின் கீழ் பெறப்படும் 12 டி.எம்.சி. உட்பட, தற்பொழுதுள்ள நீராதாரங்களிலிருந்து, அதிகபட்சம், நாளொன்றுக்கு, 1615 மில்லியன் லிட்டர் மட்டுமே பெறக்கூடிய நிலையில், 633 மில்லியன் லிட்டர் பற்றாக்குறை ஏற்படுகிறது. மழைப் பொழிவு குறைவாக உள்ள காலங்களில், குடிநீர் வழங்கலில் பற்றாக்குறை, மேலும் அதிகரிக்கிறது. எனவே, சென்னைப் பெருநகர் மற்றும் அருகாமையிலுள்ள பகுதிகளின் எதிர்கால குடிநீர்த் தேவையை நிறைவு செய்வதற்காக, கூடுதலாக, ஆண்டொன்றுக்கு, 15 டிஎம்சி அளவிற்கு குடிநீர் ஆதாரங்களைக் கண்டறியும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கென, சென்னைக் குடிநீர் வாரியம், புதிய குடிநீர் ஆதாரங்களைக் கண்டறிதல், அதற்கான தொழில்நுட்பச் சாத்தியக்கூறுகள் மற்றும் திட்டத்திற்கான நிதி வசதி,

ஆகியவற்றை ஆய்வு செய்து, அறிக்கை அளிக்க, கலந்தறிதற்குரியரை நியமித்துள்ளது. கலந்தறிதற்குரியரின் அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கை, 2011–ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் எதிர்பார்க்கப்படுகிறது.

## 5.6 கழிவுநீர் அகற்றல் அமைப்பு மேலாண்மை:

### 5.6.1. கழிவுநீரைச் சேகரித்து, சுத்திகரித்து, வெளியேற்றுதல்:

வீடுகளிலும், வணிக வளாகங்களிலிருந்தும் உற்பத்தியாகும் கழிவுநீர், 2677 கி.மீ. நீளமுள்ள கழிவுநீர்க் குழாய் அமைப்பின் மூலம், 194 கழிவு நீரகற்று நிலையங்களில் சேகரிக்கப்படுகின்றன. சேகரிக்கப்பட்ட கழிவு நீர், சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றப்படுகின்றன. வாரியத்தின் தற்போதைய கழிவுநீர் சுத்திகரிப்பு திறன் நாளொன்றுக்கு 486 மில்லியன் லிட்டராகும்.

சென்னைக் குடிநீர் வாரியம், கழிவுநீர் சுத்திகரிப்புத் திறனை அதிகரிப்பதற்கான பணியினை துவங்கியுள்ளது. இரண்டு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்: (i) நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் பெருங்குடியிலும் (ii) நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் நெசப்பாக்கத்திலும் கட்டப்பட்டு வருகிறது. இப்பணிகள் முடிவுறும் நிலையில், வாரியத்தின் கழிவுநீர் சுத்திகரிப்புத் திறன் நாளொன்றுக்கு, 600 மில்லியன் லிட்டராக உயரும்.

மேலும், நாளொன்றுக்கு, 120 மில்லியன் லிட்டர் கழிவுநீரைச் சுத்திகரிக்கும் திறன் கொண்ட மற்றுமொரு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை கோயம்பேட்டில் அமைப்பதற்கான நடவடிக்கையை வாரியம் மேற்கொண்டுள்ளது. இந்நிலையத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாராக உள்ளது.

## 5.7 கழிவு நீரகற்றல் அமைப்பு இயக்கம் மற்றும் பராமரித்தல்:

### 5.7.1 கழிவு நீரகற்றல் அமைப்பு இயந்திரமயமாக்கல் மற்றும் பராமரித்தல்:

வாரியம், சென்னை மாநகரின் கழிவு நீரகற்றல் அமைப்பின் இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளில், இயந்திரங்களை உபயோகப்படுத்தப்படுவதில் உறுதியான நடவடிக்கை எடுத்துள்ளது. 2009–10–ஆம் ஆண்டில், வாரியம், 10 உயரழுத்த விசையுடன் நீரைப் பீய்ச்சும் இயந்திரங்கள், 1 உயர் அழுத்த விசையுடன் நீர் பீய்ச்சும் மற்றும் உறிஞ்சும் இயந்திரம் மற்றும் 45 நீர் விசையால் இயங்கும் தூர் வாரும் இயந்திரங்களை, பகுதி – II திட்டத்தின் கீழ் அரசு மானியத்தில் கொள்முதல் செய்தது. கழிவு நீரகற்றல் அமைப்பை பராமரிப்பதற்குத் தேவையான இயந்திரங்கள் மற்றும் சாதனங்களின் மொத்த எண்ணிக்கை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| விவரம் | மொத்த தேவை | தற்போதைய இருப்பு | மீதம் |
|---|---|---|---|
| நீர் விசையில் இயங்கும் தூர் வாரும் இயந்திரங்கள் | 70 | 53 | 17 |
| உயர் அழுத்த விசையுடன் நீரைப் பீய்ச்சும் இயந்திரங்கள் | 81 | 56 * | 25 |
| நீர் உறிஞ்சும் இயந்திரங்கள் | 3 | – | 3 |
| * உயர் அழுத்தத்துடன் நீர் பீய்ச்சும் மற்றும் உறிஞ்சும் ஒரு இயந்திரமும் இதில் அடங்கும். | | | |

நடப்பாண்டில், வாரியம் 25 உயரழுத்த விசையுடன் நீரைப் பீய்ச்சும் இயந்திரங்கள், 3 நீர் உறிஞ்சும் இயந்திரங்கள் மற்றும் 17 தூர் வாரும் இயந்திரங்களை கொள்முதல் செய்யவுள்ளது.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்திற்கான நிதியிலிருந்து இயந்திரங்கள் மற்றும் சாதனங்களைக் கொள்முதல் செய்வதற்கு அரசு அனுமதியளித்துள்ளது.

### 5.7.2 கிண்டி திரு.வி.க தொழிற்பேட்டையில் கழிவுநீர் அமைப்பு பணி:

கிண்டியிலுள்ள திரு.வி.க. தொழிற்பேட்டையில், கழிவு நீரகற்று கட்டமைப்பு முறையை மேம்படுத்தி, சீரமைப்பதற்கான,

பணிகள் ரூபாய் 7.35 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, அனைத்துப் பணிகளும் முடிவடைந்துவிட்டன. இத்திட்டம், 2009–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், துவங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இத்திட்டத்தால், லேபர் காலனி, நாகிரெட்டித் தோட்டம், அருளாயம்மன்பேட்டை ஆகிய குடியிருப்புப் பகுதிகளில் வசிக்கும் 5000 மக்களும், கிண்டி தொழிற்பேட்டையில் உள்ள 610 தொழில் நிறுவனங்களும் பயன்பெறுவர்.

### 5.8 ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் உள்கட்டமைப்புப் பணிகள்: (JnNURM)

அரசு, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ், சென்னை மாநகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான உள்கட்டமைப்பு மற்றும் தற்போதுள்ள குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று அமைப்புகளுக்கு வலுவூட்டும் பணிகள், ஆகியவற்றை செயல்படுத்த, 28 குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் திட்டங்களுக்கு, ரூ.2032 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் அளித்துள்ளது. இவற்றில், சென்னைக் குடிநீர் வாரியம், 2009–10–ஆம் ஆண்டில், 2 திட்டங்களை நிறைவு செய்துள்ளது. இதரத் திட்டப் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

## 5.9 குடிநீர் வழங்கல் திட்டங்கள்:

### 5.9.1 சென்னை நகருக்கான திட்டங்கள்:

பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து புழல் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நீரைக் கொண்டு செல்லும் 90 கனஅடி கால்வாயின் மேல், கீழ்நிலைத் தொட்டி மற்றும் நீரேற்று நிலையம் அமைத்தல்:

பூண்டியில் உள்ள சத்தியமூர்த்தி சாகர் நீர்த்தேக்கத்திலிருந்து புழல் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு, நாளொன்றுக்கு, 100 மில்லியன் லிட்டர் நீரைக் கொண்டு செல்ல பூண்டி நீர்த்தேக்கத்திற்கு அருகிலுள்ள, வினாடி ஒன்றுக்கு 90 கன அடி நீரை வெளியேற்றும் கால்வாயின் மேல், ஒரு கீழ் நிலைத் தொட்டி மற்றும் நீரேற்று நிலையம் அமைக்கும் பணிகள், ரூ.9.11 கோடி திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு, 2009–ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் திட்டம் இயக்கப்பட்டது. தற்போது, இந்த வசதியின் மூலம், நாளொன்றுக்கு, 40 முதல் 50 மில்லியன் லிட்டர் வரை நீர் கொண்டு செல்லப்படுகிறது. இது, படிப்படியாக, 100 மில்லியன் லிட்டர் ஆக உயர்த்தப்படும்.

### 5.9.2 மீஞ்சூரில் அமைக்கப்பட்டு வரும் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்திலிருந்து குடிநீரை எடுத்துச் செல்லும் குழாய் பதித்தல் மற்றும் அதனைச் சார்ந்த உள்கட்டமைப்புப் பணிகள்:

மீஞ்சூரில் அமைக்கப்பட்டு வரும் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்திலிருந்து, குடிநீரை, புழல், குடிநீர் சுத்திகரிப்பு

நிலையத்திற்குக் கொண்டு செல்லக்கூடிய குழாய் பதித்தல் மற்றும் அதனைச் சார்ந்த உள் கட்டமைப்புப் பணிகள், ரூ.93 கோடி திட்ட மதிப்பீட்டில் 2 சிப்பங்களாக மேற்கொள்ளப்பட்டு, அனைத்துப்பணிகளும்முடிக்கப்பட்டுவிட்டன.இவ்வமைப்புகள், மீஞ்சூரில் உள்ள கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் இயக்கப்பட்டவுடன் பயன்படுத்தப்படும்.

### 5.9.3 சென்னை மாநகரில் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுப் பணிகள்:

சென்னைக் குடிநீர் வாரியம், சென்னை நகரின் அனைத்துப் பகுதிகளுக்கும் போதுமான மற்றும் சமச்சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு, தற்போதுள்ள, 4 குடிநீர் பகிர்மான நிலையங்களான, கீழ்ப்பாக்கம், அண்ணா பூங்கா, தெற்கு நீரேற்று நிலையம் மற்றும் கலைஞர் கருணாநிதி நகர் நிலையங்களை மேம்படுத்தவும், 5 குடிநீர் பகிர்மான அமைப்புகளான கீழ்ப்பாக்கம், அண்ணா பூங்கா, தெற்கு நீரேற்று நிலையம், கலைஞர் கருணாநிதி நகர் மற்றும் திருவல்லிக்கேணி அமைப்புகளை வலுப்படுத்தவும் மற்றும் அதைச் சார்ந்த இதர மேம்பாட்டுப் பணிகளை, ரூ.337.48 கோடி, திட்ட மதிப்பீட்டில் மேற்கொண்டுள்ளது. தெற்கு நீரேற்று குடிநீர் பகிர்மான நிலையப் பணிகள் ஏற்கனவே முடிவுற்று பயன்பாட்டில் உள்ளன. இதரப் பணிகள் அனைத்தும் நடைபெற்று வருகின்றன. இதனை, 2010–ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 5.10 இராஜீவ் காந்தி சாலையில் (தகவல் தொழில் நுட்ப சாலை) குடிநீர் வழங்கல் மற்றும்

கழிவு நீர் அகற்றுதலுக்கான உள் கட்டமைப்புப் பணிகள்: இராஜீவ் காந்தி சாலையில் (தகவல் தொழில் நுட்ப சாலை), குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் கட்டமைப்புப் பணிகள், ரூ.41.77 கோடி மதிப்பீட்டில், 2007–ஆம் ஆண்டு எடுத்துக்கொள்ளப்பட்டன. இப்பணிகள், பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. குடிநீர் வழங்கல் உள்கட்டமைப்புப் பணிகள், 2010–ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் முடிக்கப்படும். இத்திட்டம் முடிவுற்ற பின்னர், இராஜீவ் காந்தி சாலை நெடுகிலுள்ள நுகர்வோருக்கு, நாளொன்றுக்கு, 20 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படும். முதற்கட்டமாக, கண்ணகி நகர் மற்றும் செம்மஞ்சேரியில் உள்ள தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளுக்கு, 2010–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், குடிநீர் வழங்கப்படும்.

அவ்வாறே, கழிவுநீரைச் சேகரிக்கும் அமைப்புத் திட்டப் பணிகளும் பெருமளவில் நடைபெற்று வருகின்றன. மேலும், நாவலூரில் நாளொன்றுக்கு 6 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் சோழிங்கநல்லூரில், நாளொன்றுக்கு 18 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகிய 2 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை வாரியம் மேற்கொண்டுள்ளது.

இவை தவிர, இராஜீவ் காந்தி சாலை நெடுகிலும் கழிவு நீர் அகற்றும் நிலையங்களை நிறுவுவதற்கான, விரிவான திட்ட அறிக்கை, ரூ.26.42 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள், நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும்.

## 5.11 சென்னைக்கு அருகாமையிலுள்ள நகர்ப்புரப் பகுதிகளுக்கான திட்டங்கள்:

சென்னைப் பெருநகர்ப் பகுதியில், கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சென்னைக் குடிநீர் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டப் பணிகள், பல்வேறு நிலைகளில் உள்ளன.

### 5.11.1 போரூர்

போரூர் பேரூராட்சிக்கான குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டப் பணிகள் 2 சிப்பங்களாக ரூபாய் 12.36 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒரு சிப்பத்தில் உள்ள பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுவிட்டன. விரைவில் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும் மற்றொரு சிப்பத்திலுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. இவை, 2010–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.11.2 மதுரவாயல்

மதுரவாயல் நகராட்சிக்கான குடிநீர் வழங்கல் திட்டம், ரூ.23.30 கோடி மதிப்பீட்டில் 2 சிப்பங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சிப்பம்–1 தொடர்பான பணிகள் முடிவடைந்துள்ளன. இது, விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். இரண்டாம் சிப்பப் பணிகள், 2010–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் துவங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 5.11.3 ஆவடி

ஆவடி நகராட்சிக்கான குடிநீர் வழங்கல் திட்டம், ரூ.103.84 கோடி மதிப்பீட்டில் 3 சிப்பங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மூன்று சிப்பங்களிலும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் 2011–ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.11.4 ஆலந்தூர்

ஆலந்தூர்நகராட்சிக்கானகுடிநீர்வழங்கல்திட்டம்,ரூ.64.39 கோடி மதிப்பீட்டில் 2 சிப்பங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டு சிப்பங்களிலும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும், 2012–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.11.5 அம்பத்தூர்

அம்பத்தூர் நகராட்சிக்கான குடிநீர் வழங்கல் திட்டம், ரூ.267.08 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் பெறப்பட்டு 2009–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. மூன்று சிப்பங்களிலும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் 2011–ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் முடிவுறும்.

### 5.11.6 உள்ளகரம் புழுதிவாக்கம்:

உள்ளகரம்–புழுதிவாக்கம் நகராட்சிக்கான குடிநீர் வழங்கல் திட்டத்தை ரூ 24.24 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணிக்கான பணி ஆணை வழங்கப்பட்டு பணிவிரைவில் துவங்கப்படும்.

### 5.11.7 திருவொற்றியூர்

திருவொற்றியூர் நகராட்சிக்கான குடிநீர் வழங்கல் திட்டத்தை ரூ.85.11 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணிக்கான ஒப்பந்தங்கள் பெறப்பட்டு வாரியத்தின் மதிப்பாய்வில் உள்ளன. பணிகள் நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட உள்ளன.

### 5.11.8 நெற்குன்றம்

நெற்குன்றம் ஊராட்சிக்கான குடிநீர் வழங்கல் திட்டத்தை ரூ 19.17 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த, நகராட்சி நிர்வாகம்

மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை (நிலை) எண்.43, நாள் 26.02.2010–ல், அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. பணிகள், நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும். வாரியத்தால் இதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

## 5.12 கழிவு நீரகற்றல் திட்டங்கள்:

### 5.12.1 சென்னை நகருக்கான திட்டங்கள்:

**பெருங்குடி மற்றும் நெசப்பாக்கத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டும் பணிகள்:**

சென்னைக் குடிநீர் வாரியத்தின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் தற்போதைய மொத்தத் திறன், நாளொன்றுக்கு, 486 மில்லியன் லிட்டர் ஆகும். பெருங்குடி, நெசப்பாக்கம் மற்றும் கோயம்பேடு ஆகிய இடங்களில் உள்ள சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்திகரிப்பு திறனுக்கு அதிகமாக கழிவுநீர் பெறப்படுகிறது. எனவே, சுத்திகரிப்பு திறனை அதிகரிக்கவும், எதிர்காலத் தேவையைக் கருத்திற் கொண்டும், வாரியம், நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட, கூடுதலான புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை, பெருங்குடியில் அமைக்கும் பணிகளை, ரூ.61.19 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளையும் 2011–ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட, மற்றுமொரு கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையத்தை நெசப்பாக்கத்தில் அமைக்கும் பணிகள் ரூ 58.87 கோடி திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அனைத்துப் பணிகளும் 2012–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் முடிவுறும்.

## 5.13 அருகாமையில் உள்ள நகர்ப்புரப் பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டங்கள்:

அரசு, சென்னைப் பெருநகர்ப் பகுதியில் உள்ள, கீழ்க்காணும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு, கழிவுநீர் அகற்றல் திட்டங்களுக்கு, ஒப்புதல் அளித்துள்ளது. சென்னைக் குடிநீர் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டுவரும் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.

### 5.13.1 ஆவடி

ஆவடி நகராட்சிக்கான பாதாள சாக்கடைத் திட்டத்தினை, ரூ.158.05 கோடி மதிப்பீட்டில் 6 சிப்பங்களில் செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 4 சிப்பங்களுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. எஞ்சியுள்ள இரண்டு சிப்பங்களில், ஒரு சிப்பத்திற்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு மதிப்பாய்வில் உள்ளன. மற்றொரு சிப்பமான கழிவு நீரகற்று சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதி பெறப்பட்டப் பின்னர் மேற்கொள்ளப்படும்.

### 5.13.2 அம்பத்தூர்

அம்பத்தூரில், விடுபட்ட பகுதிகளுக்கு, கழிவுநீர் அகற்று கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த, ரூ.130.91 கோடி மதிப்பீட்டில் 4 சிப்பங்களாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 3 சிப்பங்களுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. எஞ்சியுள்ள சிப்பத்திற்கு, ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு மதிப்பாய்வில் உள்ளன. பணிகள், நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும்.

### 5.13.3 தாம்பரம்

தாம்பரம் நகராட்சிக்கான பாதாள சாக்கடைத் திட்டம், ரூ.160.97 கோடி மதிப்பீட்டில் 2 சிப்பங்களில் மேற்கொள்ளப்பட்டு, சிப்பம் ஒன்றுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மற்றொரு சிப்பத்திற்கான பணிகள் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும்.

### 5.13.4 மதுரவாயல்

மதுரவாயல் நகராட்சிக்கான பாதாளச் சாக்கடைத் திட்டம், ரூ.57.45 கோடி மதிப்பீட்டில் 2 சிப்பங்களில் மேற்கொள்ளப்பட்டு, ஒரு சிப்பத்திற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மற்றொரு சிப்பத்திற்கான பணிகள் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும்.

### 5.13.5 உள்ளகரம் – புழுதிவாக்கம்

உள்ளகரம்–புழுதிவாக்கம் நகராட்சிக்கான பாதாளச் சாக்கடைத் திட்டம், ரூ.28.08 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, பணிகள், 2012–ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது

### 5.13.6 போரூர்

போரூர் பேரூராட்சிக்கான பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான ஒப்புதல், ரூ.38.29 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும்.

கீழ்க்காணும் 8 பேரூராட்சிகளுக்கான பாதாளச் சாக்கடைத் திட்டங்களுக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை (ப) எண்.544, நாள் 24.12.2009ல் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

| வ. எண். | பேரூராட்சி | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1 | பெருங்குடி | 20.19 |
| 2 | திருமழிசை | 20.47 |
| 3 | பெருங்களத்தூர் | 47.61 |
| 4 | பள்ளிக்கரணை | 58.61 |

| | | |
|---|---|---|
| 5 | பீர்க்கண்கரணை | 21.29 |
| 6 | சிட்லப்பாக்கம் | 25.79 |
| 7 | செம்பாக்கம் | 61.82 |
| 8 | மாடம்பாக்கம் | 54.45 |

இவற்றில், திருமழிசை பேரூராட்சிக்கான பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் ஏற்கனவே துவங்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பேரூராட்சிகளில், பணிகள் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும்.

## 5.14 தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்–III -ன் (TNUDP-III) கீழ் பணிகள்:

சென்னைக் குடிநீர் வாரியம், பல்வேறு நகராட்சிகளுக்கு, பின்வரும் திட்டங்களை, தமிழ்நாடு நகர்புர மேம்பாட்டுத் திட்டம் III–ன் கீழ் செயற்படுத்தி வருகின்றது.

### 5.14.1 அம்பத்தூர் கழிவுநீரகற்றுத் திட்டம் – கட்டம் II:

அம்பத்தூர் கழிவு நீரகற்று திட்டத்தின் கடைசி கழிவு நீரகற்று நிலையம் (Terminal Pumping Station) மற்றும் கழிவுநீர் கொண்டு செல்லும் விசைக் குழாய்கள் அமைக்கும் பணிகள், ரூ.7.55 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, 2009–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

### 5.14.2 திருவொற்றியூர்

திருவொற்றியூர் நகராட்சிக்கான பாதாளச் சாக்கடைத் திட்டம், 5 சிப்பங்களில், ரூ.87.63 கோடி திருத்திய மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 4 சிப்பங்களுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள், நடப்பாண்டில் முடிவடையும். சிப்பம் 1–ல் அடங்கிய கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி, மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னர் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும்.

### 5.14.3 பல்லவபுரம்

பல்லவபுரம் நகராட்சிக்கான பாதாளச் சாக்கடைத் திட்டம், ரூ.71.50 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கழிவு நீர் சேகரிப்பு அமைப்புகள் மற்றும் கழிவு நீரேற்று நிலையக்கட்டுமானப் பணிகளின் பெரும்பகுதி பணிகள் முடிவுற்றுள்ளன. நிலம் தொடர்பான வழக்குகளால், கழிவுநீரகற்றும் இறுதி நிலையப் பணிகள், தாமதமானது. தற்போது, இப்பணிகள்,வேறொரு இடத்தில் துவங்கப்பட்டுள்ளன. இப்பணிகள், 2011–ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் முடிவுறும். இத்திட்டம், 2010–11–ஆம் ஆண்டில் இயக்கப்பட்டு, பயன்பாட்டுக்கு வரும்.

### 5.14.4 மாதவரம்

மாதவரம் நகராட்சிக்கான பாதாளச் சாக்கடைத் திட்டம், ரூ.36.74 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகள், 2012–ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.15 பணியாளர் நியமனம்:

சென்னைக் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியச் செயல்பாடுகளின் வளர்ச்சிக்கேற்பவும், உள்கட்டமைப்பு விரிவாக்கத்தை கருத்தில் கொண்டும், பொறியியல் மற்றும் இதரத் துறைகளில் கூடுதல் பணியாளர்களை நியமித்தல் மிக அவசியமாகிறது. எனவே வாரியம் படிப்படியாக பணியாளர்களை நியமிக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

கடந்த 4 ஆண்டுகளில் வாரியம் நியமித்துள்ள 354 பணியாளர்களின் விவரங்கள்:

| அ. | வேலை வாய்ப்புத் துறை மூலமாக | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | துணை நிதி கட்டுப்பாட்டு அலுவலர் | 1 |
| 2. | உதவிப் பொறியாளர்கள் | 128 |
| 3. | நில அளவையர் மற்றும் வரைவாளர்கள் | 3 |

| | | |
|---|---|---|
| 4. | ஆய்வகத் தொழில் நுட்பப் பணியாளர்கள் | 3 |
| 5. | கனரக வாகன ஓட்டுநர்கள் | 21 |
| | **மொத்தம்** | **156** |
| ஆ. | கருணை அடிப்படை மூலமாக | |
| 1. | களப்பணியாளர்கள் | 189 |
| 2. | தட்டச்சர்கள் | 2 |
| 3. | இளநிலை உதவியாளர்கள் | 7 |
| | **மொத்தம்** | **198** |
| | **பெரு மொத்தம்** | **354** |

## 5.16 நுகர்வோர் குறைகளை கண்காணித்தல்

### 5.16.1 இணையதளம் மூலம் குறைகளை நிவர்த்தி செய்தல்:

நுகர்வோர் குறைகளை விரைந்து களையவும், சேவைகளை மேம்படுத்தவும், சென்னைக் குடிநீர் வாரியம், பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அனைத்துப் பகுதி அலுவலகங்களும், பணிமனை அலுவலகங்களும் மற்றும் தலைமை அலுவலகமும் கணினிமயமாக்கப்பட்டு, ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளதால் (WAN), எந்தப் பகுதியைச் சேர்ந்த நுகர்வோரும், தங்களது குறைகளை எந்த அலுவலகத்தில் வேண்டுமானாலும் பதிவு செய்யலாம். மேலும், அவ்வாறு பதிவு செய்யப்படும் புகார்கள், தக்க

நடவடிக்கைக்காக, குறைகள் கண்காணிப்பு அமைப்பு மூலமாக, உடனடியாக, உரிய பணிமனை அலுவலகத்திற்கு, கணினி வாயிலாக மாற்றப்படுகிறது. மேலும் குறைகள்/ புகார்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையும், இவ்வமைப்பு மூலமாகக் கண்காணிக்கப்படுகிறது. வாரியத்தின் சேவை குறித்த புகார்களை, நுகர்வோர், www.chennaimetrowater.tn.nic.in என்ற வாரிய இணையதள முகவரியில் பதிவு செய்யலாம். மேலும், cmwssb@md2vsnl.net.in என்ற மின் அஞ்சல் முகவரியிலும் பதிவு செய்யலாம்.

### 5.16. 2 புகார்கள் மற்றும் ஆலோசனைக் கூட்டங்கள்:

புகார்கள் மற்றும் ஆலோசனைக் கூட்டம் (Open House Meeting) வாரியத்தின் அனைத்துப் பகுதி அலுவலகங்களிலும், ஒவ்வொரு மாதமும், இரண்டாம் சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை மூத்த அதிகாரிகளின் தலைமையில் நடைபெறுகிறது. இக்கூட்டங்களில், புகார்கள்/ குறைகள்/ஆலோசனைகள் பெறப்பட்டு அவைகள் உடனுக்குடன் சரிசெய்யப்படுகின்றன. 2009–10–ஆம் ஆண்டில், அவ்வாறான 132 கூட்டங்கள் நடத்தப்பட்டன.

### 5.16.3 24 மணி நேர குறைகள் களையும் மையம்:

சென்னைக் குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில், **24 மணி நேர குறைகள் களையும் மையமும்** இயங்குகிறது. இம்மையத்தில், நேரடியாகவோ அல்லது தொலைபேசி எண்கள்

**28454030, 28454040, 28451314** மூலமாகவோ, நுகர்வோர், தங்களது புகார்களையும்/ குறைகளையும் பதிவு செய்யலாம். பதிவு செய்யப்பட்ட புகார்கள் / குறைகள், உடனடியாக, இணையதளம் வழி (online) மற்றும் அலைபேசிகள் (mobile phones) வாயிலாக, உரிய பணிமனைப் பொறியாளருக்கு தெரிவிக்கப்படுகிறது. இதனால் புகார்கள் / குறைகள் தாமதமின்றி உடனுக்குடன் சரி செய்யப்படுகின்றன.



கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆந்தரசைட் வடிகட்டிகள், மீஞ்சூர்



மீஞ்சூரிலிருந்து சென்னைக்கு குடிநீர் கொண்டுவரும் குழாய்கள்



கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டப் பணிகள், நெம்மேலி




நீரேற்று நிலையம், பூண்டி



குடிநீர் பகிர்மான நிலையம், போரூர்



கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமானப் பணிகள், பெருங்குடி



பயன்பாட்டில் உள்ள ஜெட்ராடிங் இயந்திரம்



மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் நீருந்து நிலையப் பணிகள், கீழ்ப்பாக்கம்

# 6. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

தமிழகத்திலுள்ள கிராம மற்றும் நகர்ப் பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் சுகாதார வசதி அளிக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியச் சட்டம் 1970–ன்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வாரியம், வேலூர், கோயம்புத்தூர், மதுரை மற்றும் தஞ்சாவூர் ஆகிய நகரங்களை தலைமை இடங்களாகக் கொண்டு நான்கு மண்டலங்களாகச் செயற்பட்டு வருகிறது. வாரியத்தின் தலைமை அலுவலகம் சென்னையில் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரைத் தலைவராகக் கொண்டு தொழில்நுட்ப, நிதி மற்றும் நிர்வாகப் பிரிவுகளைக் கொண்டு செயற்பட்டு வருகிறது. ஒகேனக்கல் குடிநீர் மற்றும் புளோரைடு பாதிப்பு குறைப்புத் திட்டச் செயல்பாடுகளை கண்காணிப்பதற்கும் மற்றும் ஒருங்கிணைக்கவும் ஒரு திட்ட மேலாண்மைப் பிரிவு, திட்ட இயக்குநர் தலைமையில் சென்னையில் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டப் பணிகளை செயல்படுத்துவதற்கு தலைமைப் பொறியாளர் மற்றும் சார்பு அலுவலர்களுடன் கூடிய திட்ட செயலாக்கப் பிரிவு தர்மபுரியில் நிறுவப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் தற்போது 6913 தொழில்நுட்ப மற்றும் சார்புப் பணியாளர்கள் உள்ளனர்.

நவீன தொழில்நுட்ப தொலை உணர்வு மற்றும் புவி தகவல் அமைப்பு உத்திகளை அடிப்படையாகக் கொண்டு நீராதாரங்கள்

அறிவியல் முறையில் தெரிவு செய்யப்படுகின்றன. இவ்வாறு தோற்றுவிக்கப்படும் நீராதாரங்களின் நிலைத்த தன்மையை உறுதி செய்யும் பொருட்டு மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதியாதாரத்துடன் நீர் செறிவூட்டுக் கட்டமைப்புகள் நிறுவப்படுகின்றன.

குடிநீரின் தர மேலாண்மை மற்றும் கண்காணிப்பு, சர்வதேச தர நிர்ணய நிறுவன சான்றிதழ் பெற்ற (ISO 9001 : 2000) மாநில அளவிலான நீர் பகுப்பு ஆய்வகம், மாவட்ட மற்றும் உபகோட்ட அளவில் அமையப் பெற்றுள்ள நீர்பகுப்பு ஆய்வகங்கள் மூலம் உறுதி செய்யப்படுகிறது. திட்ட பயனீட்டாளர்களிடையே குடிநீரின் தரம் மற்றும் சேமிப்பு, கிராமக் குடிநீர்த் திட்ட பராமரிப்பு, சுகாதாரம் குறித்த விழிப்புணர்வுகளை ஏற்படுத்திட தகவல் மற்றும் திறன் மேம்பாட்டுப்பிரிவு வாரியத்தில் நிறுவப்பட்டுள்ளது

## 6.1 கிராமக் குடிநீர்த் திட்டங்கள்

கிராமக் குடிநீர்த் திட்டங்களை தமிழக அரசின் குறைந்த பட்ச தேவைத் திட்ட (MNP) நிதி மற்றும் மத்திய அரசின் ஊரக குடிநீர்த் திட்ட நிதியுதவியோடு (NRDWP) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயல்படுத்தி வருகிறது. இந்தியாவில் உள்ள அனைத்து கிராமக் குடியிருப்புகளில் வசிக்கும் ஒவ்வொருவருக்கும் மத்திய அரசின் கிராமக் குடிநீர்த் திட்ட நிதியுதவியோடு குடிநீர் வழங்குவதற்கான மாற்றியமைக்கப்பட்ட

விதிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது. குடிநீர் மற்றும் சுகாதாரத்தில் இவ்விலக்கை முழுமையாக நிறைவேற்றிட மாநில அளவிலான குடிநீர் மற்றும் சுகாதார குழுமம் (SWSM) மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி அரசாணை(நிலை) எண். 160/ நநிகுவ(குவ.2) நாள்.03.09.2009–ன் மூலம் அமைக்கப்பட்டுள்ளது.

## 6.2 கிராம குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி

தமிழ்நாட்டில் மொத்தம் 92689 குடியிருப்புகள் உள்ளன. இதில் முழுமையான குடிநீர் வசதி பெற்றக் குடியிருப்புகள் 82554. பகுதியளவு குடிநீர் வசதி பெற்றக் குடியிருப்புகள் 10135. இந்த 10135 குடியிருப்புகளில் 2009–2010–ஆம் ஆண்டில் 8000 குடியிருப்புகளில் குடிநீர் வழங்க பணிகள் மேற்கொள்ளப்பட்டு அத்திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன.

## 6.3 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

கிராம மற்றும் நகர்ப் பகுதிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள மக்களுக்கு பயன்தரும் வகையில் பொதுவான நீராதாரத்தைக் கொண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன. 2009–10 ஆம் ஆண்டில் 30 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் குறைந்தபட்ச தேவைத் திட்டம், மத்திய அரசின் தேசிய கிராமக் குடிநீர்த் திட்டம், உலக வங்கி, நபார்டு மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி, ஆகிய நிதி நிறுவனங்களின் நிதியுதவியுடன் முடிக்கப்பட்டுள்ளன.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | நிதியாதாரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஒன்றியத்தைச் சார்ந்த கீழ்கொடுங்கலூர் மற்றும் 76 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | குறைந்தபட்ச தேவைத் திட்டம் | 460.00 |
| 2 | வேலூர் மாவட்டம், அல்லாபுரம், துரைப்பாடி பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | குறைந்தபட்ச தேவைத் திட்டம் | 380.00 |
| 3 | அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றியத்திலுள்ள 10 ஊராட்சிகளைச் சார்ந்த 29 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். | குறைந்தபட்ச தேவைத் திட்டம் | 225.84 |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | நிதியாதாரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 4 | அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் கூட்டு குடிநீர் திட்டத்திலிருந்து திருமானூர் ஒன்றியத்தில் உள்ள 3 ஊராட்சிகளை சார்ந்த 10 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | குறைந்தபட்ச தேவைத் திட்டம் | 47.10 |
| 5 | ஈரோடு மாவட்டம், சென்னிமலை, கே.சி.பாளையம் மற்றும் பெருந்துறை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் கங்காபுரம், திருவாச்சி மற்றும் சுள்ளிபாளையம் ஆகிய கிராம ஊராட்சிகளைச் சார்ந்த 20 குடியிருப்புகளுக்கான உள்கட்டமைப்பு வசதிஅமைக்கும் திட்டம். | குறைந்தபட்ச தேவைத் திட்டம் | 36.37 |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | நிதியாதாரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 6 | சிவகங்கை மாவட்டம், கல்லல் மற்றும் சாக்கோட்டை ஒன்றியங்களைச் சார்ந்த அண்ணா நகர் மற்றும் 7 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். | குறைந்தபட்ச தேவைத் திட்டம் | 28.80 |
| 7 | திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் பேரூராட்சி மற்றும் கீழ்பெண்ணாத்தூர் ஒன்றியத்தைச் சார்ந்த 165 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | குறைந்தபட்ச தேவைத் திட்டம் | 1400.00 |
| 8 | திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் ஒன்றியத்தைச் சார்ந்த 46 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | குறைந்தபட்ச தேவைத் திட்டம் | 498.00 |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | நிதியாதாரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 9 | திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணிகண்டம் ஒன்றியத்திலுள்ள 146 குடியிருப்புகளுக்கும், புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஒன்றியத்திலுள்ள 5 குடியிருப்புகளுக்கும், மொத்த ஒதுக்கீட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், அந்தநல்லூர் ஒன்றியத்திலுள்ள 22 குடியிருப்புகள் மற்றும் மின்சார வாரிய குடியிருப்புகளுக்குமான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | குறைந்தபட்ச தேவைத் திட்டம் | 1312.00 |
| 10 | ஈரோடு மாவட்டம், பெருந்துறை, கே.சி. பாளையம், சென்னிமலை, நசியனூர் மற்றும் சித்தோடு பேரூராட்சிகள் மற்றும் மொத்த ஒதுக்கீட்டில் 44 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். | குறைந்தபட்ச தேவைத் திட்டம் | 2304.00 |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | நிதியாதாரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 11 | தேனி மாவட்டம், பெரியகுளம் ஒன்றியத்திலுள்ள என்டப்புளி ஊராட்சியைச் சார்ந்த என்டப்புளி மற்றும் 15 குடியிருப்புகளுக்கான குடிநீர் விரிவாக்கத் திட்டம் | குறைந்தபட்ச தேவைத் திட்டம் | 99.69 |
| 12 | சிவகங்கை மாவட்டம், திருபுவனம் ஒன்றியத்திலுள்ள வயலச்சேரி மற்றும் 19 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | குறைந்தபட்ச தேவைத் திட்டம் | 98.64 |
| 13 | கன்னியாகுமரி மாவட்டம், 79 கடலோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் கிள்ளியூர், கருங்கல், கப்பியாறை, திங்கள் நகர் மற்றும் வெள்ளிமலை மற்றும் கீழ்குளம் ஆகிய 6 பேரூராட்சிகளுக்கான உட்கட்டமைப்பு வசதி அமைக்கும் திட்டம் | குறைந்தபட்ச தேவைத் திட்டம் | 215.00 |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | நிதியாதாரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 14 | கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறையார் கூட்டுக் குடிநீர்த் திட்ட சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து விளாத்துறை ஊராட்சியைச் சேர்ந்த தும்பிலி மற்றும் 11 குடியிருப்புகளுக்கான குடிநீர் அபிவிருத்தி திட்டம் | குறைந்தபட்ச தேவைத் திட்டம் | 42.00 |
| 15 | புளோரைடால் பாதிக்கப்பட்ட 136 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியத்திலுள்ள தொப்பூர், கம்மம்பட்டி ஊராட்சிகளைச் சார்ந்த 43 ஊரக குடியிருப்புகளுக்கான குடிநீர்த் திட்டம் மற்றும் மொத்த ஒதுக்கீட்டில் சேலம் மாவட்டத்தைச் சார்ந்த 54 ஊரக குடியிருப்புகளுக்கான குடிநீர்த் திட்டம். | குறைந்தபட்ச தேவைத் திட்டம் | 423.00 |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | நிதியாதாரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 16 | திருச்சிராப்பள்ளி மாவட்டம், தாத்தையங்கார்பேட்டை ஒன்றியத்திலுள்ள எம்.புதுப்பட்டி ஊராட்சியைச் சார்ந்த 7 வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | குறைந்தபட்ச தேவைத் திட்டம் | 28.70 |
| 17 | கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்திலுள்ள திருக்காம்புலியூர் மற்றும் 6 ஊராட்சிகளைச் சார்ந்த 44 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | குறைந்தபட்ச தேவைத் திட்டம் | 410.00 |
| 18 | திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணிகண்டம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து அந்தாநல்லூர் ஒன்றியத்திலுள்ள அந்தாநல்லூர் மற்றும் 7 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | குறைந்தபட்ச தேவைத் திட்டம் | 29.98 |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | நிதியாதாரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 19 | 79 கடலோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து பாலபள்ளம், ரீத்தாபுரம், அஞ்சுகிராமம், கணபதிபுரம், அகதீஸ்வரம், தென்தாமரைக்குளம், புத்தாளம், மண்டைக்காடு, மணவாளக்குறிச்சி, கள்ளுக்கோட்டம் மற்றும் தெங்கம்புதூர் முதலிய 11 பேரூராட்சிகளுக்கும் மற்றும் 19 வழியோர ஊரகக் குடியிருப்புகளுக்கும் உள்கட்டமைப்பு வசதி அமைக்கும் திட்டம் | குறைந்தபட்ச தேவைத் திட்டம் | 464.60 |
| 20 | புதுக்கோட்டை மாவட்டம், 706 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் அத்தனக்கோட்டை தரைமட்ட நீர்த்தேக்க தொட்டியின் அருகாமையில் உள்ள எடுப்புமுனை 2–லிருந்து புதுக்கோட்டை ஒன்றியத் திலுள்ள வலச்சேரிபட்டி மற்றும் 10 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | குறைந்தபட்ச தேவைத் திட்டம் | 36.20 |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | நிதியாதாரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 21 | திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார் சத்திரம் ஒன்றியத்திலுள்ள அடலூர் மற்றும் கோச்சவாயல் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | குறைந்தபட்ச தேவைத் திட்டம் | 29.22 |
| 22 | சிவகங்கை மாவட்டம், சிவகங்கை ஒன்றியத்திலுள்ள கண்ணாயிருப்பு மற்றும் 8 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | குறைந்தபட்ச தேவைத் திட்டம் | 46.54 |
| 23 | புதுக்கோட்டை மாவட்டம், 706 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து அத்தனக்கோட்டை தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியின் அருகாமையில் உள்ள எடுப்புமுனை 2–லிருந்து புதுக்கோட்டை ஒன்றியத்திலுள்ள 9 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | குறைந்தபட்ச தேவைத் திட்டம் | 34.80 |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | நிதியாதாரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 24 | தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் தஞ்சாவூர் மற்றும் திருவையாறு ஒன்றியங்களைச் சேர்ந்த 229 குடியிருப்புகள் மற்றும் சாஸ்தா பல்கலைக் கழகத்திற்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | குறைந்தபட்ச தேவைத் திட்டம் | 2847.00 |
| 25 | நீலகிரி மாவட்டம், கூடலூர் ஒன்றியத்திலுள்ள சேரன்கோடு ஊராட்சியைச் சார்ந்த 130 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | குறைந்தபட்ச தேவைத் திட்டம் | 656.60 |
| **மொத்தம் (குறைந்தபட்ச தேவைத் திட்டம்)** | | | **12154.08** |

| | | | |
|---|---|---|---|
| 26 | கன்னியாகுமரி மாவட்டம், 79 கடலோர குடியிருப்புகள், மொத்த ஒதுக்கீட்டில் 17 பேரூராட்சிகள் மற்றும் 19 வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் குறைந்தபட்ச தேவைத் திட்டம் | 2802.00 |
| 27 | கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறையார், பைங்குளம், புதுக்கடை மற்றும் மூஞ்சிறை கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் திட்டம் | ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் குறைந்தபட்ச தேவைத் திட்டம் | 1400.00 |
| | மொத்தம்(ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் குறைந்தபட்ச தேவைத் திட்டம்) | | 4202.00 |
| 28 | வேலூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த அரக்கோணம் மற்றும் திருத்தணி நகராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்-கான நகர்ப்புர உள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் | 1357.00 |

| | | | |
|---|---|---|---|
| 29 | இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் – இராமநாதபுரம் சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த 5 நகராட்சிகள், 11 பேரூராட்சிகள் மற்றும் 3163 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்–கான நகர்ப்புர உள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், நபார்டு வங்கி மற்றும் குறைந்தபட்ச தேவைத் திட்டம் | 61600.00 |
| | **மொத்தம் (சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், நபார்டு வங்கி மற்றும் குறைந்தபட்ச தேவைத் திட்டம்)** | | **62957.00** |
| 30 | ஈரோடு மாவட்டம், சென்னிமலை, கே.சி.பாளையம் மற்றும் பெருந்துறை, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் சென்னிமலை ஒன்றியத்தைச் சார்ந்த முகாசிப்பிடாரியூர் மற்றும் ஒட்டப்பாறை ஊராட்சிகளுக்கு விரைவுபடுத்தப்பட்ட நகர்ப்புர குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கும் திட்டம். | விரைவு–படுத்தப்பட்ட நகர்ப்புர குடிநீர்த் திட்டம் | 190.83 |
| | **மொத்தம் (துரிதப்படுத்தப்பட்ட நகர் பகுதி குடிநீர்த் திட்டம்)** | | **79503.91** |

## 6.4 ஜல்மானி திட்டம்

கிராமப் பகுதிகளில் உள்ள பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு தரமான குடிநீர் வழங்கும் நோக்குடன் மத்திய அரசு 2008–09 ஆம் நிதியாண்டில் "ஜல்மானி" என்ற திட்டத்தினை துவக்கி உள்ளது. இத்திட்டத்தின்படி இந்தியாவில் உள்ள ஒரு இலட்சம் கிராமப் பள்ளிகளில் குடிநீர் சுத்திகரிப்பு கலன்கள் ரூ.200.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட உள்ளது. இத்திட்டம் தமிழகத்தில் 2008 ஆம் ஆண்டில் நவம்பர் 14 அன்று குழந்தைகள் தினத்தன்று, திருவள்ளூர் மாவட்டம், காரப்பாக்கம் அரசுப் பள்ளியில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. தமிழகத்தில் உள்ள அரசு ஊரகப் பள்ளிகளில் 2074 பள்ளிகளுக்கு ரூ.4.14 கோடி செலவில் குடிநீர் சுத்திகரிப்பு கலன்கள் அமைக்கப்பட்டுள்ளது. ஊரகப் பள்ளிகளில் ஜல்மானி திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிப்பு கலன்களுக்கு பள்ளிக் குழந்தைகளிடையே நல்ல வரவேற்பு உள்ளதால் மத்திய அரசு தமிழ்நாட்டில் 2009–10 ஆம் ஆண்டில் 2074 சுத்திகரிப்பு கலன்கள் கூடுதலாக அமைக்க ரூ.4.14 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

## 6.5 சிறப்புத் திட்டங்கள்

தமிழ்நாட்டிலுள்ள அங்கன்வாடி மையங்கள், ஆதி–திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகள் மற்றும் அரசுப் பள்ளிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க தமிழ்நாடு அரசு

உறுதி கொண்டுள்ளது. இதன் அடிப்படையில் 2009–10 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

1. 3413 அங்கன்வாடி மையங்களுக்கு குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

2. 34 ஆதி–திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

3. 1830 ஊரக அரசுப் பள்ளிகளில் குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளது.

4. 982 ஊரக அரசுப் பள்ளிகளில் பழுதடைந்த நிலையில் இருந்த குடிநீர்த் திட்டங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன.

5. 270 புனரமைப்பு செய்ய இயலாத மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்குப் பதிலாக புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட்டன.

6. 1584 இடங்களில் குடிநீர் ஆதாரங்களின் நிலைத்த தன்மையை மேம்படுத்தும் வண்ணம் தடுப்பணைகள், கசிவுநீர் குட்டைகள், ஊரணிகள் போன்ற நீர் செறிவூட்டு கட்டமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

## 6.6 நகர்ப் பகுதி குடிநீர்த் திட்டங்கள்

**சென்னை நீங்கலாக தமிழ்நாட்டிலுள்ள நகரங்களின் தற்போதைய குடிநீர் வசதி நிலை பின்வருமாறு:**

| மாநகராட்சிகள் | வழங்கப்படும் குடிநீரின் அளவு | | | |
|---|---|---|---|---|
| | 110 லிட்டரும் அதற்கு மேலும் | 70–109 லிட்டர் | 70 லிட்டருக்கும் குறைவாக | மொத்தம் |
| | 2 | 7 | 0 | 9 |

| நகராட்சிகள் | வழங்கப்படும் குடிநீரின் அளவு | | | |
|---|---|---|---|---|
| | 90 லிட்டரும் அதற்கு மேலும் | 50–89 லிட்டர் | 50 லிட்டருக்கும் குறைவாக | மொத்தம் |
| | 46 | 86 | 16 | 148 |

| பேரூராட்சிகள் | வழங்கப்படும் குடிநீரின் அளவு | | | |
|---|---|---|---|---|
| | 70 லிட்டரும் அதற்கு மேலும் | 40–69 லிட்டர் | 40 லிட்டருக்கும் குறைவாக | மொத்தம் |
| | 312 | 237 | 12 | 561 |

## 6.7 குறைந்தபட்ச தேவைத் திட்டத்தின்கீழ் குடிநீர்த் திட்டச் செயலாக்கம்

## முடிவுற்ற திட்டங்கள்

| வரிசை எண். | நகரத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | ஈரோடு மாவட்டம், கே.சி.பாளையம் மற்றும் பெருந்துறை கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து சென்னிமலை பேரூராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 731.90 |
| 2 | ஈரோடு மாவட்டம், பெருந்துறை பேரூராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 647.53 |
| 3 | ஈரோடு மாவட்டம், கே.சி. பாளையம் பேரூராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 642.35 |
| 4 & 5 | வேலூர் மாவட்டம், அல்லாபுரம் மற்றும் துறைப்பாடி பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 380.00 |
| 6 | தருமபுரி மாவட்டம், அரூர் பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 279.00 |
| 7 | ஈரோடு மாவட்டம், நசியனூர் பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 232.30 |
| 8 | ஈரோடு மாவட்டம், கொல்லன்கோயில் பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 227.00 |

| வரிசை எண். | நகரத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 9 | விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை பேரூராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 223.00 |
| 10 | திண்டுக்கல் மாவட்டம், வத்தலகுண்டு பேரூராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 210.00 |
| 11 | காஞ்சிபுரம் மாவட்டம், இடைக்கழிநாடு பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 190.77 |
| 12 – 16 | கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர், கருங்கல், திங்கள் நகர், வெள்ளிமலை மற்றும் கீழ்குளம் ஆகிய 5 பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 167.85 |
| 17 | கரூர் மாவட்டம், புலியூர் பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 167.70 |
| 18 | கடலூர் மாவட்டம், வடலூர் பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 99.60 |
| 19 | சேலம் மாவட்டம், அரசராமணி பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 49.37 |
| 20 | கன்னியாகுமரி மாவட்டம், 6 பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து கப்பியறை பேரூராட்சிக்கான குடிநீர்த் திட்டம். | 47.15 |

| வரிசை எண். | நகரத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 21 | தர்மபுரி மாவட்டத்திலுள்ள மாரண்டஹள்ளி பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 45.70 |
| 22 | சேலம் மாவட்டம், எல்லம்பள்ளி பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 29.62 |
| 23 | கன்னியாகுமரி மாவட்டம், இரனியல் பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 26.70 |
| 24 | தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலம் பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 25.00 |
| 25 | தர்மபுரி மாவட்டம், பாப்பாரபட்டி பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 14.75 |
| 26–30 | கன்னியாகுமரி மாவட்டம், மண்டைக்காடு, மனவாளக்குறிச்சி, கணபதிபுரம், கல்லுக்கோட்டம் மற்றும் ரீத்தாபுரம் ஆகிய 5 பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 192.74 |
| **மொத்தம்** | | **4630.03** |

## 6.8 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (UIDSSMT)

### முடிவுற்ற திட்டங்கள்

| வரிசை எண். | நகரத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1–5 | இராமநாதபுரம், பரமக்குடி, இராமேசுவரம், கீழக்கரை மற்றும் சிவகங்கை நகராட்சிகள் அடங்கிய இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 19115.00 |
| 6–16 | மண்டபம், சாயல்குடி, கமுதி, அபிராமம், முதுகுளத்தூர், இளையான்குடி, திருப்பத்தூர், பொன்னமராவதி, ஆர்.எஸ். மங்களம், நெற்குப்பை மற்றும் தொண்டி பேரூராட்சிகள் அடங்கிய இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 9113.00 |
| 17 & 18 | வேலூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களைச் சேர்ந்த அரக்கோணம் மற்றும் திருத்தணி நகராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 1357.00 |
| 19 | திருநெல்வேலி மாவட்டம், மணி முத்தாறு பேரூராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 130.84 |
| | **மொத்தம்** | **29716.44** |

## 6.9 ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம் (JnNURM)

### முடிவுற்ற திட்டம்

| வரிசை எண். | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 3261.60 |

## 6.10. பாதாளச் சாக்கடைத் திட்டங்கள்

தமிழ்நாட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் கீழ்க்கண்ட நிதி ஆதாரங்களுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (UIDSSMT) - மத்திய அரசின் உதவியுடன்

2. தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்– III (TNUDP-III)– உலக வங்கியின் உதவியுடன்

3. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதியம் நிதி உதவித் திட்டம் (JICA)

4. ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW)

## 6.11 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (UIDSSMT)

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | அரியலூர் மாவட்டம், அரியலூர் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் | 2750.00 |
| 2 | தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் பேரூராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் | 1448.00 |
| 3 | காஞ்சிபுரம் மாவட்டம், செவிலிமேடு பேரூராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் | 917.50 |
| 4 | காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரம் பேரூராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் | 608.00 |
| 5 | காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலைநகர் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் | 375.00 |
| **மொத்தம்** | | **6098.50** |

## 6.12 தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் - III (TNUDP-III) முடிவுற்ற திட்டம்

| வரிசை எண். | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | உதகமண்டலம் நகராட்சியில் விடுபட்டுள்ள பகுதிகளுக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் | 572.00 |

## செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள்

| வரிசை எண். | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தூத்துக்குடி மாநகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் | 8000.00 |
| 2 | கடலூர் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் | 6514.00 |
| 3 | நாகப்பட்டினம் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் | 4943.00 |
| 4 | புதுக்கோட்டை நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் | 4816.00 |
| 5 | தேனி நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் | 3527.00 |
| 6 | திருவாரூர் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் | 3926.00 |
| 7 | திருவண்ணாமலை நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் | 3776.00 |
| 8 | திருவள்ளூர் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் | 3539.00 |
| 9 | கிருட்டிணகிரி நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் | 1824.00 |
| 10 | இராமநாதபுரம் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் | 3000.00 |
| 11 | சிவகங்கை நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் | 2340.00 |
| 12 | பெரம்பலூர் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் | 2338.00 |

| | | |
|---|---|---|
| 13 | விருதுநகர் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் | 2325.00 |
| 14 | நாமக்கல் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் | 2223.00 |
| 15 | தருமபுரி நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் | 1653.00 |
| 16 | தேனி மாவட்டம், சின்னமனூர் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் | 1452.00 |
| | மொத்தம் | 56196.00 |

## 6.13 ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதியம் நிதி உதவி திட்டம் (JICA)

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் | 4400.00 |
| 2 | தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டைநகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் | 3390.00 |
| 3 | இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரம் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் | 1472.00 |
| | **மொத்தம்** | **9262.00** |

## 6.14 ஜெர்மன் மேம்பாட்டு வங்கித் திட்டம் (KfW)

| வரிசை எண். | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | விழுப்புரம் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் | 3567.00 |

## 6.15 சிறப்புத் திட்டங்கள்

### 6.15.1 இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்ற பெரிய திட்டம், இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களைச் சார்ந்த 5 நகராட்சிகள், 11 பேரூராட்சிகள் மற்றும் 18 ஒன்றியங்களைச் சார்ந்த 3163 ஊரக குடியிருப்புகளைச் சார்ந்த 15.75 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு அரசு ஆணை எண். 146, நநிகுவ துறை நாள். 01.12.2006ல் ரூ.616.00 கோடியில் செயல்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இத்திட்டம் மூன்று மாவட்டங்களும் பெரிதும் பயன்பெறும் வண்ணம் 11.6.2009 அன்று பயனுக்கு கொண்டுவரப்பட்டது.

### 6.15.2 ஒகேனக்கல் குடிநீர் மற்றும் புளோரைடு பாதிப்புக் குறைப்புத் திட்டம்

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களின் 3 நகராட்சிகள், 17 பேரூராட்சிகள் மற்றும் 18 ஊராட்சி

ஒன்றியங்களிலுள்ள 6755 குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு ஒகேனக்கல் குடிநீர் மற்றும் புளோரைடு பாதிப்பு குறைப்புத் திட்டத்திற்கு அரசு ஆணை (நிலை) எண்.26/நநி(ம)குவ துறை, நாள் 25.2.2008–ல் திட்ட அமைப்புச் செலவிற்கு ரூ.1334.00 கோடிக்கும், ரூ.51.65 கோடி ஆண்டு பராமரிப்பதற்கும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதியம் கடன் உதவி மற்றும் மாநில அரசின் குறைந்தபட்ச நிதி ஆதாரத்துடன் நிறைவேற்ற ஒப்புதல் வழங்கப்பட்டது.

இத்திட்டத்திற்கு அரசு ஆணை (நிலை) எண்.19/ந.நி.(ம) கு.வ. துறை, நாள் 29.01.2010–ல் ரூ.1928.80 கோடிக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இத்திட்டத்தினை 5 ஆண்டுகள் இயக்கி பராமரிப்பதற்கு ஆண்டொன்றிற்கு ரூ.63.67 கோடி வீதம் ரூ.318.35 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்திற்கான நிதியாதாரம் பின்வருமாறு :-

| | | முதற் கட்டம் | இரண்டாம் கட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதியம் கடன் நிதியுதவி (JICA) | 1117.26 | 468.34 | 1585.60 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | குறைந்தபட்ச தேவைத் திட்டம் (MNP) | 220.07 | 87.41 | 307.48 |
| 3 | நகரப் பகுதி உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு | 25.57 | 10.15 | 35.72 |
| | **மொத்தம்** | **1362.90** | **565.90** | **1928.80** |

## 6.16 இத்திட்டத்தினை செவ்வனே செயல்படுத்தும் பொருட்டு 5 தொகுப்புகளாக (Packages) பிரிக்கப்பட்டுள்ளது.

### 6.16.1 தொகுப்பு I

இத்தொகுப்பில் தலைமையிடம், நீர் சுத்திகரிப்பு நிலையம், நீர் உந்து நிலையம், இயல்பு நீர் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நீருந்துக் குழாய் – 11.5 கி.மீ, பெரிய சமநிலை நீர்த் தேக்கத் தொட்டி, குடிநீர் விநியோக கண்காணிப்பு கட்டமைப்பு (SCADA) ஆகிய பணிகள் உள்ளடங்கியுள்ளது.

### 6.16.2 தொகுப்பு II

இத்தொகுப்பில் மடத்திலுள்ள பெரிய சமநிலை நீர்த் தேக்கத் தொட்டியிலிருந்து ஊத்தங்கரை வரை 2457 கி.மீ. தூரம் பிரதானக் குழாய்கள் மற்றும் நீர் கடத்தும் குழாய்கள் மூலம் தர்மபுரி நகராட்சி, 5 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள (பென்னாகரம், நல்லாம்பள்ளி, தர்மபுரி, மாத்தூர் மற்றும்

ஊத்தங்கரை) 1698 ஊரகக் குடியிருப்புகள், மற்றும் 2 பேரூராட்சிகளுக்கான (பென்னாகரம் மற்றும் ஊத்தங்கரை) குடிநீர் கொண்டு செல்ல திட்டமிடப்பட்டுள்ளது.

### 6.16.3 தொகுப்பு III

தர்மபுரி மாவட்டத்தில் 3 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள (மொரப்பூர், அரூர் மற்றும் பாப்பிரெட்டிபட்டி) 1035 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் 5 பேரூராட்சிகளுக்கு (பி.மல்லாபுரம், அரூர், கடத்தூர், கம்பைநல்லூர் மற்றும் பாப்பிரெட்டிபட்டி) பிரதானக் குழாயிலிருந்து 1453 கி.மீ. தூரம் பிரிவு பிரதானக் குழாய் மூலம் குடிநீர் கொண்டு செல்ல இத்தொகுப்பில் திட்டமிடப்பட்டுள்ளது.

### 6.16.4 தொகுப்பு IV

இத்தொகுப்பில் பெரிய சம நிலை நீர்த்தேக்க நிலையத்திலிருந்து ஓசூர் நகராட்சி, 5 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள (வேப்பனபள்ளி, கௌமங்களம், தளி, சூலகிரி மற்றும் ஓசூர்) 1631 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் 3 பேரூராட்சிகளுக்கு (மத்தகிரி, கௌமங்களம், தென்கனிக்கோட்டை) 2337 கிமீ. மூலம் நீர் கொண்டு செல்ல திட்டமிடப்பட்டுள்ளது.

### 6.16.5 தொகுப்பு V

மடம் என்னுமிடத்திலுள்ள பெரிய சமநிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து கிருஷ்ணகிரி நகராட்சி, 5 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள (பாலக்கோடு, காரிமங்கலம், பர்கூர், கிருஷ்ணகிரி மற்றும் காவேரிப்பட்டிணம்) 2391 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் 7 பேரூராட்சிகளுக்கு (கரியமங்கலம், மாரண்டஹள்ளி, பாலக்கோடு, பாப்பாரப்பட்டி, பர்கூர், காவேரிபட்டிணம் மற்றும் நாகோஜனஹள்ளி) 4654 கிமீ தூரம் பொது பிரதானக் குழாய் மூலம் குடிநீர் கொண்டு செல்ல திட்டமிடப்பட்டுள்ளது.

(தொகுப்பு–I, II. III மற்றும் V–ன் பணிகள் முதற்கட்டத்திலும், தொகுப்பு–IV–ன் பணிகள் இரண்டாம் கட்டத்திலும் நிறைவேற்றப்படவுள்ளன).

### 6.17 இத்திட்டத்தின் தற்போதைய நிலை பின்வருமாறு:

### முதற் கட்டம் (Phase I )

முதற்கட்டப் பணிகளுக்காக ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதியத்திடம் ரூ.899.10 கோடிக்கு 10.3.2008 அன்று ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை விரைவில் செயல்படுத்தும்பொருட்டு 5 தொகுப்புகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

## இரண்டாம் கட்டம் (Phase II )

இரண்டாம் கட்டப் பணிகளுக்காக ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதியத்துடன் ரூ.686.50 கோடிக்கு 31.03.2009–ல் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

## 6.18 தொகுப்பு I – முதற் கட்டம்

## தொகுப்பு I

இத்தொகுப்பிற்கான பணி ஆணை ஐ.வி.ஆர்.சி.எல். இன்பராஸ்ரெக்சர் மற்றும் புராஜக்ட் லிமிடெட், ஐதராபாத் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு, 19.02.2010 அன்று ரூ.237.19 கோடிக்கு ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டது. ஒகேனக்கல் தலைமைப் பணியிடம் மற்றும் மடம் பிரதானச் சமநிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதர தொகுப்புகளின் பணிகள், பல்வேறு நிலையில் கூர்ந்தாய்வு மற்றும் கணிப்பாய்வு நிலையில் உள்ளன.

## 6.19 சுனாமி நிவாரணப் பணிகள்

சுனாமியால் பாதிக்கப்பட்ட அனைத்து நகர்ப்புர மற்றும் ஊரகக் குடியிருப்புகளுக்கு தொலைதூர நீராதாரங்களைக் கொண்டு நிரந்தர, நிலையான குடிநீர்த் திட்டங்களை

நிறைவேற்றிட, ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவி அளித்துள்ளது. இந்நிதியைக் கொண்டு சுனாமி அவசர உதவித் திட்டத்தின்கீழ் 10 கடலோர மாவட்டங்களில் 36 குடிநீர்த் திட்டங்களையும் 4 நீர் செறிவூட்டு கட்டுமானத் திட்டங்களையும் நிறைவேற்ற ரூ.84.37 கோடி மதிப்பீட்டில் 40 திட்டங்களுக்கு ரூ.82.18 கோடிக்கு அரசு ஆணை எண் 597/வருவாய் (என்.சி.4–1) துறை நாள் 24.10.2005 மற்றும் ரூ.2.19 கோடிக்கு அரசு ஆணை எண் 49/வருவாய் (என்.சி.4–1) துறை நாள் 30.01.2008–இல் ஒப்புதலளிக்கப்பட்டது.

அனைத்து 40 திட்டங்களும் முடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

அவசர சுனாமி மறுசீரமைப்புத் திட்டத்தின்கீழ் உலக வங்கி நிதி உதவியுடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட 6 கடலோர மாவட்டங்களில் உள்ள பேரூராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் உள்ள சுனாமி நிரந்தரக் குடியிருப்புகளுக்கு (16 தொகுப்புகள்) சுகாதார வசதி அளித்திட ரூ.29.37 கோடிக்கு அரசு ஆணை எண் 333/வருவாய் (என்.சி.4–1) துறை நாள் 26.06.2007 மற்றும் ரூ.0.626 கோடிக்கு அரசு ஆணை எண் 61/ வருவாய் (என்.சி.4–1) துறை நாள் 07.02.2008 ஆகியவற்றில் மொத்தம் ரூ.30.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த 16 தொகுப்புகளில் 5 தொகுப்புகள் முடிக்கப்பட்டுள்ளது. 10 தொகுப்புகளில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

எஞ்சியுள்ள ஒரு தொகுப்பிலும் பணி துவங்கப்பட்டு மார்ச் 2011–க்குள் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

**6.20 பகுதி II திட்டம் – 2009–10**

கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் நிறுவப்பட்டுள்ள குடிநீர் வழங்கு கட்டமைப்புகள், நீரேற்று நிலையங்கள், வால்வுகள் மற்றும் நீரோட்டம், நீர் அழுத்தம் ஆகியவற்றை கண்காணித்து கட்டுப்படுத்தும் கட்டமைப்புகளை ரூ.700.00 இலட்சம் மதிப்பீட்டில்நிறுவிட அரசாணை(ப)எண்.342,நாள்.30.07.2009–ல் ஒப்புதல் வழங்கப்பட்டு கீழ்க்காணும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் இக்கட்டமைப்புகள் அமைக்கப்படவுள்ளன.

1) கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் மற்றும் அவினாசி ஒன்றியத்தில் உள்ள 249 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்

2) ஈரோடு மாவட்டம் முத்தூர் காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

3) அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியத்தில் உள்ள 240 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்

4) திருநெல்வேலி மாவட்டம் மானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

இப்பணிகள் 2010–11ம் ஆண்டில் விரைவாக முடிக்கப்படும். இந்த பணிகளுக்காக ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. இத்திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும்.



நீர்த் தடுப்பு அணைப் பணிகள், ஒகேனக்கல்



ஒகேனக்கல் பிரதான நீர்த்தேக்கத் தொட்டி  அமைக்கும் பணிகள், மடம்




நீரேற்று நிலையம், ஆத்துபொள்ளாச்சி



மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, அரக்கோணம்



கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், தஞ்சாவூர்



நீர்த் தெளிவிப்புத் தொட்டி, துடிச்சிக்குளம்

## 7. தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம் (TNUDF)

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம், தமிழ்நாடு அரசு, ஐ.சி.ஐ.சி.ஐ (ICICI), எச்.டி.எப்.சி (HDFC) மற்றும் ஐ.எல் & எப்.எஸ் (IL&FS) ஆகிய நிறுவனங்களின் நிதியளிப்புடன், 1882–ஆம் ஆண்டு இந்திய பொறுப்பாட்சிகள் சட்டத்தின் கீழ், ஒரு பொறுப்பாட்சியாக 1996–ஆம் ஆண்டு, உருவாக்கப்பட்டது. பொது மற்றும் தனியார் கூட்டமைப்பில் நாட்டிலேயே முதலாவதாக தோற்றுவிக்கப்பட்ட இந்நிறுவனம், பொது கட்டமைப்பு வசதிகளுக்காக, காப்புறுதி ஏதுமின்றி நீண்ட கால அடிப்படையில் கடன் வழங்கி வருகிறது.

இந்நிதியம், தமிழ் நாடு நகர்ப்புர கட்டமைப்பு பொறுப்பாளர் நிறுவனத்தின் மூலம் நிர்வகிக்கப்படுகிறது. இந்நிறுவனம், நிதியத்தின் நிர்வாகம் குறித்த கொள்கைகள் மற்றும் வழிமுறைகளை வகுக்கிறது. மேலும், இது, தமிழ்நாடு நகர்ப்புர கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் மூலம் இயக்கப்படுகிறது. இந்நிதியத்தின் மொத்த மூலதனம், ரூ.199.60 கோடியாகும், இதில் தமிழ்நாடு அரசின் முதலீடு ரூ.142.91 கோடியாகும்.

தமிழ்நாட்டின் அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் தனியார் முதலீடுகளை அதிகரித்து, அதன் மூலம், அவ்வமைப்புகளை, நீடித்த வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்வதும், உபயோகிப்பாளர்களுக்கு உயர்தரமான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி தருவதும், தொடர்ந்து நிதி

இடையீட்டாளராக செயல்படுவதும், தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியத்தின் இலட்சியங்களாகும்.

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம், அடிப்படை வசதித் திட்டங்களான சாலைகள், பாலங்கள், மழைநீர் வடிகால், கழிவுநீரகற்றல் மற்றும் சுகாதாரத் திட்டங்கள், குடிநீர் விநியோகம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை மற்றும் வணிக நோக்குடையத் திட்டங்களான பேருந்து நிலையங்கள், வணிக வளாகங்கள் போன்றவற்றிற்கும் நிதியுதவி அளிக்கிறது. தற்போது இந்நிதி உலக வங்கி நிதியுதவியுடன், தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் III, ஜெர்மன் மேம்பாட்டு நிதி உதவியுடன் நீடித்த நகர்ப்புர கட்டமைப்பு நிதியளிப்பு மற்றும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதியத்தின் நிதியுதவியுடன், தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் ஆகிய மூன்று கடன் வரிசைகளை நிர்வகித்து வருகிறது.

## 7.2 தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் III (TNUDP-III)

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம், உலக வங்கியின் தொடர் நிதியளிப்பின் மூலம், தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் II-ஐ, 1999 முதல் 2004 வரை, வெற்றிகரமாக செயல்படுத்தியது. மேலும், தமிழ்நாடு நகர்ப்புர கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்–II-ன் காலத்தில், உலக வங்கியின் நிதியுதவி மட்டுமல்லாமல், கடன் பத்திரங்கள்

வெளியீடு, உபயோகிப்பாளர் கட்டணம் வசூலித்தல் போன்ற இதர இனங்களிலிருந்தும் கூடுதலாக நிதி திரட்டியது.

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் II-ன் சாதனைகளைத் தொடர்ந்து, தமிழ் நாட்டில், நகர்ப்புர உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கென, தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் III வடிவமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம், நிறுவன மேம்பாட்டுக் கூறு (IDC) மற்றும் நகர்ப்புர முதலீட்டுக் கூறு (UIC), என இரண்டு கூறுகளைக் கொண்டதாகும். இவற்றில், நிறுவன மேம்பாட்டுக் கூறு, தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்றுவித்தல் மூலம் அதிகாரப் பகிர்வினை தொடர்ந்து மேற்கொள்வதற்கென, திறன் மேம்பாடு செய்வதாகும். நகர்ப்புர முதலீட்டுக் கூறு, நகர்ப்புர கட்டமைப்புத் திட்டங்களை செயல்படுத்துவதற்கென, நீண்ட கால கடன் மற்றும் மூலதன மானியம் வழங்குவதற்கு பயன்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் மொத்த மதிப்பு ரூ.1885 கோடி, இதில் ரூ.1300 கோடி உலக வங்கி நிதியுதவியாகும். இதில், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கென ரூ.1227 கோடியும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் சென்னைப் பெருநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நிறைவேற்றப்படும் போக்குவரத்து மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்கென, சுமார் ரூ.651 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை, உலக வங்கிக்கு முன் கட்டணமாக செலுத்தப்பட வேண்டியதாகும்.

இத்திட்டம், 19.10.2005 அன்று தொடங்கப்பட்டு, ஐந்தாண்டு காலத்திற்குள் நிறைவேற்றப்படவுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் III குறித்து, உலக வங்கியால் மேற்கொள்ளப்பட்ட, இடைக்கால ஆய்வின் அடிப்படையில், வங்கி, இத்திட்டத்தை சீரமைக்குமாறு கேட்டுக் கொண்டது. அதன்படி, 2009–2010 ஆம் ஆண்டு, இத்திட்டம் சீரமைக்கப்பட்டது. சீரமைப்பில், உலக வங்கியின் நிதியுதவியில் மாற்றம் ஏதுமில்லை என்றாலும் சாலைப் போக்குவரத்து உட்கூறின் ஒதுக்கீடு குறைக்கப்பட்டு, அத்தொகை மற்ற உட்கூறுகளுக்கு மறுஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## அட்டவணை – 1 சீரமைக்கப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி திட்டம் III–ன் கீழ், திருத்திய ஒதுக்கீட்டு விவரங்கள்

| | உலக வங்கி நிதியுதவி | தமிழக அரசு நிதியுதவி | மொத்தம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | (மில்லியன் அமெரிக்க டாலர்) | | | (ரூ. கோடியில்) |
| குறைக்கப்பட்ட ஒதுக்கீடு | | | | |
| சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் போக்குவரத்து உட்கூறு | 87.50 | 22.00 | 109.50 | 503.70 |

| | | | | |
|---|---|---|---|---|
| திருத்தியமைக்கப்பட்ட ஒதுக்கீடு | | | | |
| நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கடன் | **15.00** | **6.00** | **21.00** | **96.60** |
| நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு மானியம் | **66.00** | **16.00** | **82.00** | **377.20** |
| திட்ட மேம்பாடு ஆலோசனை வசதி | **6.00** | **0** | **6.00** | **27.60** |
| சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு | **0.50** | **0** | **0.50** | **2.30** |
| **மொத்தம்** | **87.50** | **22.00** | **109.50** | **503.70** |

**(1 அமெரிக்க டாலரின் மதிப்பு = ரூ. 46)**

இச்சீரமைப்பினால், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புக்களுக்குக் கூடுதலாக ரூ.96.60 கோடியளவிற்குக் கடனும், ரூ.377.20 கோடியளவிற்கு மூலதன மானியமும் கிடைத்துள்ளது. தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி திட்டம் III-ன் துணைத் திட்டங்களுக்கான கொள்முதல் மற்றும் செயலாக்கத் திட்டம் ஆகியன திருத்தப்பட்டதன் அடிப்படையில், இத்திட்டம் முடிவடையும் காலம், 2012–ஆம் ஆண்டு மார்ச் 31 –ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2 – சீரமைக்கப்பட்ட தமிழ் நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் III-ன் நிதியளிப்பு விவரங்கள்**

| வ.எண். | உட்கூறு | உலக வங்கி நிதியுதவி | தமிழக அரசு நிதியுதவி | மொத்தம் | |
|---|---|---|---|---|---|
| | | (மில்லியன் அமெரிக்க டாலர்) | | | (ரூ. கோடியில்) |
| 1 | நிறுவன மேம்பாட்டுக் கூறு | 15.00 | 10.00 | 25.00 | 115.00 |
| 2 | நகர்ப்புர முதலீட்டுக் கூறு | | | | |
| | கடன் | 125.00 | 56.00 | 181.00 | 832.60 |
| | மூலதன மானியம் | 112.50 | 64.00 | 176.50 | 811.90 |
| | திட்ட மேம்பாட்டு ஆலோசனை வசதி | 9.00 | 0.00 | 9.00 | 41.40 |
| | சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு மானியம் | 37.00 | 4.00 | 41.00 | 188.60 |
| | மொத்தம் | 283.50 | 124.00 | 407.50 | 1874.50 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | மற்றவை– உலக வங்கி முன் கட்டணம் | 1.50 | 0.00 | 1.50 | 6.90 |
| | பெரு மொத்தம் | 300.00 | 134.00 | 434.00 | 1996.40 |

(1 அமெரிக்க டாலரின் மதிப்பு = ரூ. 46)

சேலம் மாநகராட்சிக்கென, ரூ.168 கோடி மதிப்பீட்டில், தமிழ்நாடு நகர்ப்பர வளர்ச்சித் திட்டம் III-ன் கீழ், ஒரு தனி குடிநீர்த் திட்டம் செயல்படுத்த முடிவு மேற்கொள்ளப்பட்டது. ஏற்கெனவே திட்டமிட்டபடி சிமெண்ட் கான்கிரீட் குழாய்களுக்குப் பதிலாக மெல்லிய உலோகத்திலான குழாய்களை உபயோகப்படுத்துவதென முடிவு செய்யப்பட்டதால், இத்திட்ட மதிப்பீடு, ரூ.283.09 கோடியாக உயர்ந்தது. எனினும், தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் III-ன் சீரமைப்பின் மூலம் பெறப்பட்ட நிதியிலிருந்து கூடுதல் மானியமாக ரூ.135.09 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

மேலும், 13 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டம் மறுமதிப்பீடு செய்யப்பட்டு, சீரமைக்கப்பட்ட தமிழ் நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் III-ன் கீழ், கூடுதலாக, ரூ.210.22 கோடி (சுமார் ரூ.1.86 கோடி கடன் மற்றும் ரூ.208.36 கோடி மானியமாக) ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

## அட்டவணை– 3 பாதாளச் சாக்கடைத் திட்டங்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட கூடுதல் நிதி ஒதுக்கீடு

(ரூ கோடியில்)

| வ.எண் | உள்ளாட்சி அமைப்பு | கடன் | மானியம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | நாமக்கல் | 0 | 3.39 | 3.39 |
| 2 | இராமநாதபுரம் | 0 | 0.58 | 0.58 |
| 3 | சிவகங்கை | 0 | 2.96 | 2.96 |
| 4 | தூத்துக்குடி | 0 | 21.69 | 21.69 |
| 5 | திண்டுக்கல் | 0 | 22.88 | 22.88 |
| 6 | சின்னமனூர் | 0 | 8.01 | 8.01 |
| 7 | வேலூர் | 0 | 9.87 | 9.87 |
| 8 | திருவண்ணாமலை | 0 | 13.06 | 13.06 |
| 9 | காஞ்சிபுரம் | 1.86 | 1.24 | 3.10 |
| 10 | கடலூர் | 0 | 35.24 | 35.24 |
| 11 | புதுக்கோட்டை | 0 | 14.70 | 14.70 |
| 12 | திருவொற்றியூர் | 0 | 69.63 | 69.63 |
| 13 | பல்லாவரம் | 0 | 5.11 | 5.11 |
| | மொத்தம் | 1.86 | 208.36 | 210.22 |

28.02.2010–ஆம் நாள் வரையில், தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் III-ன் கீழ், 98 திட்டங்களுக்கு நிதியுதவியளிக்க முடிவு செய்யப்பட்டு,

இதற்கென முதலீட்டு உட்கூறின் கீழ், ரூ.1175.02 கோடி (ரூ.524.41 கோடி கடன், மற்றும் ரூ.650.61 கோடி மானியம்) ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை– 4 தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் III–ன் கீழ் நிதியுதவி பெறும் துணைத் திட்டங்கள்**

(ரூ. கோடியில்)

| எண் | துறை | திட்டங்கள் | திட்ட மதிப்பீடு | கடன் ஒப்புதல் | மானியம் ஒப்புதல் | மொத்த கூடுதல் |
|---|---|---|---|---|---|---|
| 1 | சுகாதாரம் | 25 | 1023.17 | 270.71 | 435.67 | 706.38 |
| 2 | குடிநீர் வழங்கல் | 18 | 402.04 | 108.30 | 191.77 | 300.07 |
| 3 | திடக்கழிவு மேலாண்மை | 32 | 26.33 | 15.30 | 8.01 | 23.31 |
| 4 | பேருந்து நிலையங்கள் | 5 | 22.34 | 13.45 | 1.32 | 14.77 |
| 5 | சாலைகள் | 17 | 179.16 | 97.91 | 4.47 | 102.38 |
| 6 | ஆற்றங்கரை மேம்பாடு | 1 | 31.23 | 18.74 | 9.37 | 28.11 |
| | **மொத்தம்** | **98** | **1684.27** | **524.41** | **650.61** | **1175.02** |

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் III-ன் கீழ், நிதியுதவி பெறும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள 98 துணைத் திட்டங்களில், 66 துணைத் திட்டங்கள் நிறைவுபெற்றுள்ளன.

**அட்டவணை– 5 தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் III–ன் கீழ் நிறைவுபெற்ற திட்டங்கள்**

| வ. எண் | துறை | திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பாதாளச் சாக்கடைத் திட்டம் | 1 |
| 2 | பேருந்து நிலையங்கள் | 3 |
| 3 | குடிநீர் வழங்கல் திட்டங்கள் | 13 |
| 4 | சாலைகள் | 17 |
| 5 | திடக் கழிவு மேலாண்மை | 32 |
| | **மொத்தம்** | **66** |

உதகமண்டலம் நகராட்சியில், பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவு பெற்றுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் III-ன் கீழ், நிதியுதவி பெறும் ஐந்து பேருந்து நிலைய திட்டங்களில், பொள்ளாச்சி, பூவிருந்தவல்லி (பகுதி–1) மற்றும் பழனி ஆகிய மூன்று திட்டங்கள் நிறைவுபெற்றுள்ளன.

போடிநாயக்கனூர், குழித்துறை, குறிச்சி மற்றும் குனியமுத்தூர், கத்திவாக்கம் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய நகராட்சிகளில், குடிநீர் திட்டம் முடிக்கப்பட்டுள்ளது. மேலும், 17 நகராட்சிகளில் சாலைத் திட்டங்களும், 32 நகராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டங்களும் முடிக்கப்பட்டுள்ளன.

பாதாளச் சாக்கடைத் திட்டம், 24 உள்ளாட்சி அமைப்புகளில் (அதாவது, சேலம், தூத்துக்குடி, வேலூர் மாநகராட்சிகள், திருவொற்றியூர், பல்லவபுரம், காஞ்சிபுரம், இராமநாதபுரம், திண்டுக்கல், சிவகங்கை, நாமக்கல், புதுக்கோட்டை, கடலூர், திருவண்ணாமலை, சின்னமனூர், அம்பத்தூர், திருவாரூர், தர்மபுரி, விருதுநகர், பெரம்பலூர், கிருஷ்ணகிரி, திருவள்ளூர், தேனி, நாகப்பட்டினம் மற்றும் மாதவரம் நகராட்சிகளில்) மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றில், 16 திட்டங்களுக்கு (தூத்துக்குடி மற்றும் வேலூர் மாநகராட்சிகள், பல்லவபுரம், காஞ்சிபுரம், இராமநாதபுரம், திண்டுக்கல், சிவகங்கை, நாமக்கல், புதுக்கோட்டை, கடலூர், திருவண்ணாமலை, சின்னமனூர், திருவாரூர், தர்மபுரி, திருவள்ளூர் மற்றும் மாதவரம் நகராட்சிகள்) அனைத்துச் சிப்பங்களுக்கும் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 7 திட்டங்களுக்கு (சேலம் மாநகராட்சி, திருவொற்றியூர், அம்பத்தூர், விருதுநகர், பெரம்பலூர், கிருஷ்ணகிரி மற்றும் நாகப்பட்டினம் நகராட்சிகள்) பகுதியாக ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சேலம் மாநகராட்சியில், ரூ.31.23 கோடி திட்ட மதிப்பீட்டில், திருமணிமுத்தாறு மற்றும் வெள்ளக்குட்டை ஓடை ஆகியவற்றை சுத்தப்படுத்துவதற்கென மேற்கொள்ளப்படும் திட்டம் தனித்தன்மை வாய்ந்ததாகும். தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின் மூலம், வெள்ளப்பெருக்கு கட்டுப்படுத்தப்படுவதோடு, ஆற்றுவழியே முறையான

நீர்ப்போக்கும் ஏற்படும். இவைமட்டுமல்லாது, இத்திட்டம், மூன்று பாலங்கள் கட்டுவதையும் உள்ளடக்கியதாகும். இத்திட்டப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகள், 2010– ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் முடிக்கப்படும்.

### 7.3 நீடித்த கட்டமைப்பிற்கான நிதியுதவி திட்டம் – தமிழ் நாடு திட்டம் (SMIF TN)

ஜெர்மன் மேம்பாட்டு வங்கி KfW நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டமான, தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர கட்டமைப்பிற்கான நிதியுதவி திட்டத்திற்கு, அரசு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.2) துறை, அரசாணை எண்.218, நாள் 03.11.2008ல் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. இதன் மொத்த திட்ட மதிப்பு, ரூ.500 கோடியாகும். இதில், வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு, கடனாக ரூ.295 கோடியும், மூலதன மானியமாக ரூ.127 கோடியும், ஒட்டுமொத்த நிதியளிப்பு ஒப்பந்தத்திற்கு கடனாக ரூ.65 கோடியும், தொழில்நுட்பத் திறன் மேம்பாட்டிற்கு மானியமாக ரூ.13 கோடியும் வழங்கப்படும். இத்திட்டக் காலம், 5 ஆண்டுகள், அதாவது, 2008–ஆம் ஆண்டு முதல் 2011–2012–ஆம் ஆண்டு வரையாகும்.

இத்திட்டன் கீழ், இதுவரை, ரூ.496.25 கோடி மதிப்பீட்டிலான ஏழு துணைத் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு, ரூ.288.72 கோடி

(கடனாக ரூ.187.52 கோடி மற்றும் மூலதன மானியமாக ரூ.101.20 கோடி) நிதியுதவி அளிக்கப்படும்.

**அட்டவணை– 6. தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர கட்டமைப்பிற்கான நிதியுதவி திட்டத்தின் கீழ் நிதியுதவி**

(ரூ. கோடியில்)

| வ. எண் | துறை | துணைத் திட்டங்கள் | மதிப்பீடு | கடன் | மானியம் | இதர இனங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | பாதாளச் சாக்கடைத் திட்டம் | 2 | 244.89 | 83.46 | 78.54 | 82.89 |
| 2 | குடிநீர் வழங்கல் | 1 | 22.87 | 6.75 | 6.66 | 9.46 |
| 3 | சாலைகள் மற்றும் மழை நீர் வடிகால் | 3 | 65.98 | 44.87 | 16.00 | 5.11 |
| 4 | பாலங்கள் | 1 | 162.51 | 52.44 | 0 | 110.07 |
| | **மொத்தம்** | **7** | **496.25** | **187.52** | **101.20** | **207.53** |

மேற்சொன்னவற்றில், ஈரோடு மற்றும் விழுப்புரத்தில் இரண்டு பாதாளச் சாக்கடைத் திட்டங்கள், திருநெல்வேலியில் ஒரு குடிநீர்த் திட்டம், திருச்சிராப்பள்ளி, திருப்பூர் மாநகராட்சிகள் மற்றும் பண்ருட்டி நகராட்சியில், மூன்று சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாடு நகர்ப்புர நிதியமானது, சென்னை நகரில், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ், ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள எட்டு பாலங்களை கட்டுவதற்கு, ரூ.52.44 கோடி பகுதி நிதியுதவி அளித்துள்ளது.

## 7.4 தமிழ்நாடு நகர்ப்புர கட்டமைப்பு திட்டம் (TNUIP)

ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதியத்தின் மூலமாக, தமிழ்நாடு நகர்ப்புர கட்டமைப்புத் திட்டத்தினைச் செயல்படுத்த, அரசு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.2) துறை, அரசாணை (இருபதாண்டு) எண்.112, நாள் 6.8.2008–ல் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பு, ரூ.345 கோடியாகும். இதில், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதியத்தின் கடன்வரிசையின் அளவு ரூ.300.04 கோடியாகும். இதில், ரூ.198.25 கோடி கடனாகவும், ரூ.84.98 கோடி மூலதன மானியமாகவும் மற்றும் ரூ.16.81 கோடி தொழில்நுட்ப உதவி மானியமாகவும் வழங்கப்படும். இத்திட்டக் காலம், 5 ஆண்டுகள், அதாவது, 2008–ஆம் ஆண்டு முதல் 2012–2013 ஆண்டு வரையாகும்.

இத்திட்டத்தின் கீழ், இதுவரை, ரூ.235.62 கோடி மதிப்பீட்டிலான நான்கு துணைத்திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. துணைத் திட்டங்களுக்கு, ரூ.194.16 கோடி (கடனாக ரூ.109.18 கோடியும் மற்றும் மானியமாக ரூ.84.98 கோடியும்) ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை – 7 தமிழ்நாடு நகர்ப்புர கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் நிதியுதவி**

(ரூ. கோடியில்)

| வ. எண் | துறை | துணைத் திட்டங்கள் | மதிப்பீடு | கடன் | மானியம் | இதர இனங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | பாதாள சாக்கடைத் திட்டம் | 3 | 92.62 | 16.02 | 59.98 | 16.62 |
| 2 | குடிநீர் வழங்கல் | 1 | 143.00 | 93.16 | 25.00 | 24.84 |
| | மொத்தம் | 4 | 235.62 | 109.18 | 84.98 | 41.46 |

சிதம்பரம், பட்டுக்கோட்டை மற்றும் இராமேஸ்வரம் ஆகிய நகரங்களுக்கான மூன்று பாதாளச் சாக்கடைத் திட்டங்களுக்கு, ஒப்பந்ததாரர்களை நியமிக்கும் பணி நடைபெற்று வருகிறது. திருச்சிராப்பள்ளி மாநகரில், ரூ.143 கோடி மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டப் பணிகள் நடைபெற்றுவருகின்றன. இத்திட்டம், எட்டு சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டு, அவற்றில், ஆறு சிப்பங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 7.5 பேரூராட்சிகளுக்கு நிதியுதவி

தமிழ்நாடு நகர்ப்புர மேம்பாட்டு நிதியம், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு மட்டுமல்லாது, பேரூராட்சிகளுக்கும், நிதியுதவி வழங்கி வருகிறது. இந்நிதியம், பேருந்து நிலையங்கள் கட்டுதல் மற்றும் மேம்படுத்துதல் பணிக்காக, ஏழு

பேரூராட்சிகளுக்கு (ஒட்டன்சத்திரம், சங்ககிரி, ஆலங்காயம், சேத்துப்பட்டு, நம்பியாறு, மானாமதுரை மற்றும் புதுவயல்) ரூ.2.38 கோடி நிதியுதவி வழங்கியுள்ளது. இவற்றில், சங்ககிரி மற்றும் நம்பியூர் பேருந்து நிலையப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. எஞ்சியுள்ள ஐந்து பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

## 7.6 சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை

அரசு, அடையாறு ஒடைப்பகுதி மற்றும் அதன் கழிமுகத்துவாரப்பகுதி ஆகியவற்றை உள்ளடக்கி "அடையாறு பூங்கா" எனும் ஓர் உலகத்தரம் வாய்ந்த பூங்கா, ரூ.100 கோடி செலவில் உருவாக்கப்படுமென, 2006–07 ஆம் ஆண்டு அறிவித்தது. இத்திட்டத்தினை செயல்படுத்த, "அடையாறு பூங்கா அறக்கட்டளை" அமைக்கப்படலாமென அரசு முடிவு செய்தது. இதனடிப்படையில், அறக்கட்டளை, 1882–ஆம் ஆண்டு இந்திய பொறுப்பாட்சிகள் சட்டத்தின் கீழ், 11.10.2006 அன்று பதிவு செய்யப்பட்டது. இந்த பொறுப்பாட்சியை, தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளரைத் தலைவராகக் கொண்ட ஒரு குழு நிர்வகிக்கிறது.

இத்திட்டத்தினை செம்மையாக நிர்வகிக்கும் பொருட்டு, 1956–ஆம் ஆண்டு இந்திய கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 25–ன் கீழ், "அடையாறு பூங்கா" என்னும் சிறப்பு நோக்கு நிறுவனம் தொடங்க அரசு ஆணையிட்டுள்ளது. அரசாணையின்படி, இந்நிறுவனம் 30.10.2008 அன்று தொடங்கப்பட்டு செயல்பட்டு

வருகிறது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.10 லட்சமாகும், இத்தொகை முழுவதும் அரசின் பங்களிப்பாகும்.

இவ்வறக்கட்டளை அடையாறு மட்டுமல்லாது, சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறத்திலுள்ள அனைத்து ஆறுகள் மற்றும் நீர்நிலைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை தொடங்கலாமெனவும், ஒருங்கிணைக்கலாமெனவும் முடிவு செய்யப்பட்டது. இதனடிப்படையில், அரசு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந–1) துறை, அரசாணை (நிலை) எண்.15, நாள் 22.01.2010–ல், அடையாறு பூங்கா அறக்கட்டளை என்னும் பெயரை "சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை" என பெயர் மாற்றம் செய்து ஆணையிட்டது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை நிலை எண் 54, நாள் 17.03.2010–ல், ஒரு வரைவு புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, 2010–ஆம் ஆண்டு மார்ச் 18 ஆம் நாளன்று, சென்னை நதிகள் சீரமைப்பு வாரியம் மற்றும் சிங்கப்பூர் கூட்டுறவு முகவர் நிறுவனத்திற்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது. இந்த ஒப்பந்தம், சிங்கப்பூர் கூட்டுறவு முகவர் நிறுவனத்திடமிருந்து, நதிகள் சீரமைப்பிற்கான முழு வரைவுத் திட்டம் தயார் செய்தல், திட்ட மேலாண்மை நிறுவனத்திற்கு செயலாக்க உதவிகள், பொறியாளர்கள் மற்றும்

நிர்வாக உறுப்பினர்கள் ஆகியோருக்கு நதிகள் சீரமைப்பில் போதிய பயிற்சி அளித்தல், ஆகிய துறைகளில், சிங்கப்பூர் நிறுவனத்திற்கு உள்ள நிபுணத்துவத்தை, பயன்படுத்திக் கொள்ள வகை செய்கிறது.

### 7.7 அடையாறு பூங்காவின் 58 ஏக்கரில் சுற்றுச் சூழல் சீரமைப்புத் திட்டத்தின் செயலாக்கம்

சுற்றுச் சூழல் சீரமைப்பிற்கான மாதிரி வரைவுத் திட்டம், 2007–ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டு, பல்வேறு அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் பொது மக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து, திட்டம் இறுதி செய்யப்பட்டு, உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. பின்னர், உயர் நீதிமன்றம், 2008–ஆம் ஆண்டு ஜனவரி 2–ஆம் நாளிட்ட தனது தீர்ப்பில், அடையாறு பூங்கா பொறுப்பாட்சி மூலமாக, அரசு, அடையாறு பூங்கா பணிகளை மேற்கொள்ளலாம் என்றும், சுற்றுச் சூழல் மறுசீரமைப்புத் திட்டத்தின் தொகுதி II மற்றும் தொகுதி III ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ளலாம் என்றும், இதற்கான பணிகளை மேற்பார்வையிட அரசு அதிகாரிகள் மற்றும் அரசு சாரா அமைப்பைச் சேர்ந்தவர்களைக் கொண்ட ஒரு திட்ட கண்காணிப்புக் குழு அமைக்கவும் ஆணையிட்டது.

பூங்கா பணிகளை மேற்கொள்வதற்கான பணியாணை, 2008–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அளிக்கப்பட்டு, பணிகள்

யாவும் 2008–ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் முழுவீச்சில் தொடங்கப்பட்டன. 30 மாத காலத்திற்குள் திட்டப் பணிகள் நிறைவுறும்.

அரசு, இப்பூங்கா பணிகளுக்காக, இதுவரை ரூ.30 கோடி வழங்கியுள்ளது. இதில் ஆரம்பக் கட்டப் பணிகள் மற்றும் தற்போது நடைபெற்றுவரும் பணிகளுக்காக, 28.02.2010–ஆம் நாள் வரை, ரூ.15.15 கோடி செலவிடப்பட்டுள்ளது. தற்போது, பூங்கா அமைக்கும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. மேலும், இது, திட்டமிட்டபடி, 2010–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முடிக்கப்படும்.

## 7.8. 300 ஏக்கர் பரப்பளவிலான சுற்றுச் சூழல் சீரமைப்புத் திட்டம்

அடையாறு கழிமுகத்துவாரம் மற்றும் அடையாறு ஓடைப்பகுதி ஆகியவற்றை உள்ளடக்கிய 358 ஏக்கர் பகுதியில், தற்போது 58 ஏக்கர் பகுதியில், சுற்றுச் சூழல் சீரமைப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எஞ்சியுள்ள 300 ஏக்கருக்கான, சுற்றுச் சூழல் சீரமைப்பு முழுமைத் திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி, முடிவடையும் நிலையில் உள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான ஆரம்பநிலைப் பணிகள், 2010–2011–ஆம் ஆண்டு தொடங்கப்படும்.

## 7.9 தமிழ்நாடு நகர்ப்புர சாலை கட்டமைப்புத் திட்டம் (TURIP)

தமிழ்நாடு சாலைகளை உலகத்தரம் வாய்ந்ததாக மேம்படுத்தும் நோக்கில் மாண்புமிகு நிதியமைச்சர் அமைச்சர் அவர்கள்,தமிழ்நாடுநகர்ப்புரசாலைகட்டமைப்புத்திட்டம்என்னும் மாபெரும் திட்டத்தினை அறிவித்தார்கள். இத்திட்டம், 2008–2009–ஆம் ஆண்டு முதல் படிப்படியாக செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் முதல் கட்டமாக, பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் நிறைவுபெற்றுள்ள நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், சாலை மேம்பாட்டு பணிகள் எடுத்துக்கொள்ளப்படும். இத்திட்டத்திற்கு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.3) துறை, அரசாணை (நிலை) எண்.235, நாள் 27.11.2008ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக, தமிழ்நாடு நகர்ப்புர சாலை கட்டமைப்பு நிதி என பெயரிடப்பட்ட நிரந்தர நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள 12 நகரங்களின் (சென்னை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, மதுரை மற்றும் திருப்பூர் மாநகராட்சிகள், ஆலந்தூர், வளசரவாக்கம், மயிலாடுதுறை, கும்பகோணம், கரூர், இனாம் கரூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய நகராட்சிகள்) சாலை வசதிகள் மேம்பாட்டிற்கான, வடிவமைப்பு, மேற்பார்வை மற்றும் மேலாண்மைப் பணிகளுக்கான ஆலோசகர்களை நியமிப்பதற்கு, அரசு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்

(ந.நி.3) துறை, அரசாணை எண்.16, நாள் 11.02.2009—ல் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. மேற்கூறியவற்றில், 11 நகரங்கள் (சென்னை நீங்கலாக) அனைத்தும் அவற்றின் புவியியல் இடவமைவின் அடிப்படையில் 6 சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டு, அவற்றிற்கு, தனித்தனியாக ஆலோசகர்கள், ரூ.18.05 கோடி கட்டணத்தில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இப்பணிகளை நிறைவேற்றுவதற்கான காலவரையறைகள் கீழ்க்காணும் அட்டவணை 8—ல் வழங்கப்பட்டுள்ளன.

**அட்டவணை—8 கால விவரப் பட்டியல்**

| அறிக்கை | காலக்கெடு |
|---|---|
| முதல் நிலை அறிக்கை | டிசம்பர், 2009 |
| நகர சாலைத் திட்டம் | ஏப்ரல், 2010 |
| இடைக்கால அறிக்கை | ஜூன், 2010 |
| வரைவு இறுதி அறிக்கை | ஆகஸ்ட் , 2010 |
| இறுதி அறிக்கை | அக்டோபர், 2010 |

அனைத்து ஆலோசகர்களும் முதல் நிலை அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர். அறிக்கைகள், தொழில் நுட்ப ஆய்வுக் குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டு, அரசாணையின் அடிப்படையில் உள்ளன என ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அடுத்தக்கட்டமாக, நகர்ப்புர சாலைத் திட்டம் தயாரிக்கும் பணி நடைபெற்றுவருகிறது.

## 7.10 தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு மற்றும் நிதிச் சேவைகள் நிறுவனம் (TNUIFSL)

தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு மற்றும் நிதிச் சேவைகள் நிறுவனம், 1956–ஆம் ஆண்டு இந்திய நிறுவனங்கள் சட்டத்தின் கீழ், வரையறுக்கப்பட்ட ஒரு பொது நிறுவனமாக, ரூ.2 கோடி, அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்தைக் கொண்டு, 1996–ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. இந்நிறுவனத்தின், செலுத்தப்பட்ட மூலதனமான ரூ.1 கோடியில், தமிழ்நாடு அரசின் பங்கு ரூ.49 லட்சம் ஆகும். எஞ்சிய தொகையை, ஐ.சி.ஐ.சி.ஐ (ICICI), எச்.டி.எப்.சி (HDFC) மற்றும் ஐ.எல் & எப்.எஸ் (IL&FS) ஆகிய நிதிநிறுவனங்கள் முதலீடு செய்துள்ளன.

இந்நிறுவனம், தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம், சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை, அடையாறு பூங்கா பொறுப்பாட்சி, குடிநீர் மற்றும் சுகாதாரக் கூட்டு நிதியம், பல்வேறு அரசு மானிய நிதிகள் போன்ற அரசு நிதியங்களை அரசின் ஆணைகளுக்கேற்ப, நிர்வகித்து வருகிறது. மேலும், இந்நிறுவனம், முகவர் செயல்பாடு, திட்ட மேம்பாடு, திட்ட மதிப்பீடு, மூலதனம் திரட்டும் பணி, செயல்பாடு மற்றும் வடிவமைப்பு ஆகிய பணிகளையும் நிறைவேற்றிவருகிறது.

அரசு, தமிழ்நாடு நகர்ப்புர கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தை, 1998–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற

ஒப்பந்தப் புள்ளிகள் சட்டத்தின், பிரிவு 16, உட்பிரிவு (f)—ன் கீழ், அரசு சம்பந்தமானப் பணிகள் குறித்த கலந்தாலோசனை வழங்கும் ஒரு விருப்ப முகவர் நிறுவமென, நிதித் (சம்பளம்) துறை, அரசாணை எண் 484, நாள் 6.10.2009—ல் ஆணையிட்டுள்ளது.



திருமணிமுத்தாறு மேம்பாட்டுப் பணி, சேலம்



மேம்படுத்தப்பட்ட தில்லை நகர் பிரதானச் சாலை, திருச்சிராப்பள்ளி



கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமானப் பணிகள், திண்டுக்கல்



புதிய மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி, பொள்ளாச்சி

## 8. தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாடு அரசு தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் என்கிற நிறுவனத்தை 1990 ஆம் ஆண்டு மாநில அரசு நிறுவனமாக கம்பெனிகள் சட்டம் 1956–ன் கீழ் நிறுவியது. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் மக்களின் அடிப்படைத் தேவைகளை முழு அளவில் நிறைவு செய்ய ஒரு சிறப்பு முகமையாக தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் நிறுவப்பட்டது.

தற்பொழுது தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் மாநில அரசின் முகவரமைப்பாக இருந்து மத்திய அரசால் டிசம்பர் 2005–ல் அறிமுகப்படுத்தப்பட்ட அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டங்களாகிய ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம் – நகர்ப்புர கட்டமைப்பு மற்றும் ஆளுமைக்கான துணைத் திட்டம் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர கட்டமைப்புத் திட்டம் ஆகிய திட்டங்களை இம்மாநிலத்தில் நிறைவேற்றி வருகிறது.

### 8.1 ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம் – நகர்ப்புர உள்கட்டமைப்பு மற்றும் ஆளுகைக்கானத் திட்டம்

அடிப்படை கட்டமைப்பு வசதிகள் சீரான பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்பதை உணர்ந்த மத்திய

அரசு 03.12.2005 அன்று ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தை இந்தியாவில் 65 நகரங்களில் 2005–2006 முதல் 2011–12 வரை 7 ஆண்டுகளுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. அவ்வாறு கண்டறியப்பட்ட நகரங்களில் தமிழகத்தில் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் நகரங்கள் மட்டுமின்றி அவற்றைச் சுற்றியுள்ள நகர்ப்புரப் பகுதிகளும் இத்திட்டத்தின் கீழ் அடங்கும்.

மேலும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புரப் புனரமைப்புத் திட்டம் மாநில மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் அளவிலான சீர்திருத்தங்களை கட்டாயமாக செயல்படுத்தும் வகையில் அமைகிறது.

## 8.2. நகர்ப்புர கட்டமைப்பு மற்றும் ஆளுமை (UIG)

### 8.2.1 இத் திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட வளர்ச்சிப் பணிகள்

1. குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரம்
2. பாதாளச் சாக்கடை மற்றும் திடக்கழிவு மேலாண்மை
3. மழைநீர் வடிகால்
4. புராதனப் பகுதிகள்

5. நீர்நிலைகளைப் பாதுகாத்தல்

6. சாலைகள் மற்றும் போக்குவரத்து

### 8.2.2 நிதி கூறுபாடு

| நகரம் | மத்திய அரசின் பங்கு மானியம் | மாநில அரசின் பங்கு மானியம் | நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கடன், உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு |
|---|---|---|---|
| சென்னை | 35% | 15% | 50% |
| மதுரை மற்றும் கோயம்புத்தூர் | 50% | 20% | 30% |
| கடல் நீர் சுத்திகரிப்புத் திட்டங்கள் | 80% | 10% | 10% |

மத்திய அரசு இதுவரை **52** திட்டங்களுக்கு ரூபாய் **5565.66** கோடிகளை சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு :

(ரூபாய் கோடியில்)

| வருடம் | நகரங்கள் | ஒப்புதல் அளிக்கப்பபட்ட திட்டங்களின் எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| | சென்னை | 9 | 853.75 |
| 2006–2007 | மதுரை | 5 | 155.95 |

| | | | |
|---|---|---|---|
| | கோயம்புத்தூர் | 2 | 210.25 |
| | மொத்தம் | 16 | 1219.95 |
| 2007–2008 | சென்னை | 9 | 509.06 |
| | மதுரை | 2 | 481.15 |
| | கோயம்புத்தூர் | 1 | 377.13 |
| | மொத்தம் | 12 | 1367.34 |
| 2008–2009 | சென்னை | 21 | 2538.12 |
| | மதுரை | 1 | 201.42 |
| | கோயம்புத்தூர் | 1 | 58.83 |
| | மொத்தம் | 23 | 2798.37 |
| 2009–2010 | கோயம்புத்தூர் | 1 | 180.00 |
| | **மொத்தம்** | **1** | **180.00** |
| | **பெரு மொத்தம்** | | **5565.66** |

## 8.2.3 பகுதி வாரியாக ஒப்பளிக்கப்பட்ட திட்டங்கள்

| **திட்டங்களின் பெயர்** | **சென்னை** | **மதுரை** | **கோயம்புத்தூர்** | **மொத்தம்** |
|---|---|---|---|---|
| குடிநீர் வசதி | 12 | 5 | 2 | 19 |
| திடக்கழிவு மேலாண்மை | 2 | 1 | 1 | 4 |
| பாதாளச் சாக்கடைத் திட்டம் | 17 | 1 | 1 | 19 |

| | | | | |
|---|---|---|---|---|
| சாலை மற்றும் மேம்பாலங்கள் | 3 | 0 | 0 | 3 |
| வடிகால் வசதி | 4 | 1 | 1 | 6 |
| புராதனப் பகுதிகளை மேம்படுத்துதல் | 1 | 0 | 0 | 1 |
| **மொத்தம்** | **39** | **8** | **5** | **52** |

## 8.2.4 நிதி நிலை விவரங்கள்

**(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | நகரங்களின் பெயர் | திட்ட மதிப்பீடு | மத்திய அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு | நிதி நிறுவனங் களிடமிருந்து – பெறப்படும் கடன், உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு |
|---|---|---|---|---|---|
| 1. | சென்னை | 3900.94 | 1404.83 | 580.75 | 1915.35 |
| 2. | மதுரை | 838.52 | 419.26 | 167.70 | 251.56 |
| 3. | கோயம்புத்தூர் | 826.20 | 413.10 | 165.24 | 247.87 |
| | **மொத்தம்** | **5565.66** | **2237.19** | **913.69** | **2414.78** |

## 8.3 ஒரு திட்ட மேலாண்மை அலகை நிர்மாணித்தல்

மத்திய அரசு, மாநில அளவிலான முகவர் அமைப்பில் ஒரு திட்ட மேலாண்மை அலகு உருவாக்கப் பணித்தது. அதன் படி அப்படி ஒரு பிரிவை டுபிட்கோ நிறுவனத்தில் **6** வல்லுநர்களைக் கொண்டு மத்திய அரசு ஒப்பளித்தவாறு நிறுவப்பட்டது. இது தற்போது செயல்பாட்டில் உள்ளது.

## 8.4 சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளுக்கான திட்ட செயலாக்க அலகுகள் நிர்மாணித்தல்

கொள் திறன் மேம்பாட்டுக்கு உத்வேகம் அளிக்கும் நோக்குடன் திட்ட செயலாக்க அலகுகள் ஒவ்வொரு திட்ட நகரங்களிலும் அமைக்கப்பட்டன.

அரசாணை எண் (இருபதாண்டு) எண்.105, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி. 2) நாள் **26.6.2007–ல்** கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகராட்சியில் திட்ட செயலாக்க அலகுகளை தோற்றுவிக்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

இதற்கு அடுத்தபடியாக சென்னை மாநகராட்சி, சென்னை பெரு நகர குடிநீர் வசதி மற்றும் கழிவு நீரகற்றல் வாரியம், நகராட்சி நிர்வாக இயக்குநரகம் மற்றும் பேரூராட்சிகள் இயக்குநரகம் ஆகியவைகளுக்கு துணை அமைப்புகளுடன் கூடிய கூட்டாக ஒரு திட்ட செயலாக்க அலகை சென்னைக்கு தோற்றுவிக்க

அரசாணை எண் 67 நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி. 2) நாள் 24.02.2010–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

## 8.5 தற்சார்புடைய ஆய்வு மற்றும் கண்காணிப்பு முகமை

ஜவஹர்லால்நேருதேசியநகர்ப்புரபுனரமைப்புத்திட்டத்தின் கீழ் ஒப்பளிக்கப்பட்ட திட்டங்களை ஆய்வு செய்ய மற்றும் கண்காணிக்க ஒரு மூன்றாவது அணியை உருவாக்கியுள்ளது. மத்திய அரசின் வழிகாட்டுதலின் படி டுபிட்கோ தற்சார்புடைய ஆய்வு மற்றும் கண்காணிப்பு முகமை ஒன்றை இறுதி செய்து, 24.07.2009 அன்று மத்திய அரசின் ஒப்பளிப்பை பெற்றது. இந்த நிறுவனம் தன்னுடைய பணியை துவங்கி செயல்படுத்தி வருகிறது. இத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் ஒவ்வொரு ஒப்பளிப்பு பெற்ற திட்டத்தையும் இந்த முகமை ஒப்பாய்வு செய்து வருகிறது.

## 8.6 முடிவுற்ற திட்டங்களின் விவரங்கள்

அனுமதி அளிக்கப்பட்டுள்ள 52 திட்டங்களில் 7 திட்டங்கள் முடிவுற்றுள்ளன இதன் விவரம் பின்வருமாறு:

**(ரூபாய் கோடியில்)**

| வரிசை எண் | திட்டங்களின் பெயர் | திட்ட மதிப்பீடு | முடிவுற்ற தேதி |
|---|---|---|---|
| 1 | மதுரை குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் (வைகை ஐஐ குடிநீர்த்திட்டம்) | 59.32 | மார்ச் 2009 |

| | | | |
|---|---|---|---|
| 2 | மீஞ்சூர் கடல் நீர் சுத்திகரிப்பு நீரை குழாய் மூலம் புழல் வரை எடுத்தும் செல்லும் திட்டம் – சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் | 87.80 | ஏப்ரல் 2009 |
| 3 | சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் மூலம் பூண்டி நீர்த் தேக்கத் தொட்டி மற்றும் குழாய்கள் அமைக்கும் பணி | 9.11 | ஆகஸ்ட் 2009 |
| 4 | மதுரை நகராட்சி – தலைமை நீரேற்று நிலையங்களில் நீர் ஆதாரங்களை வளப்படுத்த வைகை ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | 4.77 | செப்டம்பர் 2009 |
| 5 | தாம்பரம் குடிநீர் வசதியை ஏற்படுத்துதல் | 32.62 | அக்டோபர் 2009 |
| 6 | சென்னை மாநகராட்சி உயர்மட்ட மேம்பாலம் அடையாற்றின் குறுக்கே – சைதாப்பேட்டை ஆலந்துர் சாலையில் | 5.48 | அக்டோபர் 2009 |
| 7. | சென்னை மாநகராட்சி பெரம்பூர் மேம்பாலப்பணி | 32.87 | மார்ச் 2010 |
| | **மொத்தம்** | **231.97** | |

**8.7 பின்வரும் 29 திட்டங்கள் வெவ்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன.**

**(ரூபாய் கோடியில்)**

| வரிசை எண் | திட்டங்களின் பெயர் | திட்ட மதிப்பீடு | முடிவுறும் தேதி |
|---|---|---|---|
| 1 | சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் – குடிநீர் வசதி | 322.00 | டிசம்பர் 2011 |
| 2 | தகவல் தொழில் நுட்பச் சாலையில் குடிநீர் மற்றும் கழிவு நீர் வசதிகளை ஏற்படுத்துதல் – சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் | 41.77 | டிசம்பர் 2010 |
| 3 | பெருங்குடியில் மேலும் ஒருகழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் திட்டம் – சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் | 31.48 | ஏப்ரல் 2011 |
| 4 | திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் – சென்னை மாநகராட்சி | 255.32 | மார்ச் 2010 |
| 5. | சென்னை மாநகரின் இரயில்வே சந்திக் கடவுகளில் அமையவுள்ள இரயில்வே மேம்பாலம் மற்றும் சுரங்கப்பாதைகள் (6) | 44.41 | மார்ச் 2011 |

| | | | |
|---|---|---|---|
| 6. | போரூர் பேரூராட்சியில் குடிநீர் வசதியை மேம்படுத்துதல் | 12.36 | டிசம்பர் 2010 |
| 7. | மதுரவாயல் மூன்றாம் நிலை நகராட்சி குடிநீர் வசதியை மேம்படுத்துதல் | 23.30 | மார்ச் 2011 |
| 8. | ஆவடி குடிநீர் வசதி | 103.84 | ஏப்ரல் 2011 |
| 9. | உள்ளகரம் புழுதிவாக்கம் பாதாளச் சாக்கடைத் திட்டம் | 28.08 | டிசம்பர் 2011 |
| 10. | ஆவடி பாதாளச்சாக்கடைத் திட்டம் | 158.05 | டிசம்பர் 2011 |
| 11 | அம்பத்தூர் பாதாளச் சாக்கடைத் திட்டம் | 130.91 | டிசம்பர் 2011 |
| 12 | திடக்கழிவு மேலாண்மை ஆலந்தூர், பல்லவபுரம் மற்றும் தாம்பரம் நகராட்சிகள் | 44.21 | மே 2011 |
| 13 | நெசப்பாக்கம் கிராம பஞ்சாயத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் | 54.57 | மே 2011 |
| 14 | வடிகால் வசதி சென்னை மாநகராட்சி (வடக்கு பேசின்) | 359.86 | டிசம்பர் 2011 |
| 15 | வடிகால் வசதி சென்னை மாநகராட்சி (மத்திய பேசின்) | 345.00 | டிசம்பர் 2011 |
| 16 | வடிகால் வசதி சென்னை மாநகராட்சி (கிழக்கு பேசின்) | 444.07 | டிசம்பர் 2011 |
| 17 | வடிகால் வசதி சென்னை மாநகராட்சி (தெற்கு பேசின்) | 298.97 | டிசம்பர் 2011 |
| 18 | பாதாளச் சாக்கடைத்திட்டம் தாம்பரம் நகராட்சி | 160.97 | ஜுன் 2011 |

| | | | |
|---|---|---|---|
| 19 | பாதாளச் சாக்கடைத்திட்டம் மதுரவாயல் நகராட்சி | 57.45 | ஜூன் 2011 |
| 20 | அம்பத்துார் நகராட்சியில் குடிநீர் வசதி | 267.08 | ஏப்ரல் 2011 |
| 21 | ஈ.வே.ரா பெரியார் சாலையிலுள்ள புராதன சின்னங்களை மேம்படுத்துதல் | 6.10 | மார்ச் 2011 |
| 22 | கோயம்புத்தூர் குடிநீர் வசதி | 113.74 | ஏப்ரல் 2011 |
| 23 | திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் – கோயம்புத்தூர் மாநகராட்சி | 96.51 | ஏப்ரல் 2010 |
| 24 | கோயம்புத்தூர் மாநகராட்சி பாதாளச்சாக்கடை திட்டம் | 377.13 | ஏப்ரல் 2011 |
| 25 | மதுரை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் | 74.29 | ஜூன் 2010 |
| 26 | மதுரை ஒருங்கிணைந்த குடிநீர் விநியோகத் திட்டம் – திருப்பரங்குன்றம் முன்றாம் நிலைநகராட்சி மற்றும் ஹார்விப்பட்டி பேரூராட்சி | 9.69 | ஜூன் 2010 |
| 27 | ஆனையூர் முன்றாம் நிலை நகராட்சி – ஒருங்கிணைந்த குடிநீர் விநியோகத் திட்டம் | 7.88 | ஜூன் 2010 |
| 28 | மதுரை மாநகராட்சியில் வடிகால் வசதியை மேம்படுத்துதல் | 251.81 | டிசம்பர் 2010 |

| | | | |
|---|---|---|---|
| 29. | மதுரை மாநகராட்சியில் விடுபட்ட இடங்களுக்கான பாதாளச் சாக்கடைத் திட்டம் | 229.34 | மே 2011 |
| | **மொத்தம்** | **4350.18** | |

## 8.8 2010 – 2011ல் கீழ்கண்ட 12 திட்டங்கள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**(ரூபாய் கோடியில்)**

| வரிசை எண் | திட்டங்களின் பெயர் | திட்ட மதிப்பீடு |
|---|---|---|
| 1. | மதுரை மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் | 74.29 |
| 2. | கோயம்புத்தூர் மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் | 96.51 |
| 3. | மதுரை ஒருங்கிணைந்த குடிநீர் விநியோகத் திட்டம் – திருப்பரங்குன்றம் மூன்றாம் நிலைநகராட்சி மற்றும் ஹார்விப்பட்டி பேரூராட்சி | 9.69 |
| 4. | ஆனையூர் மூன்றாம் நிலை நகராட்சியில் குடிநீர் விநியோகத் திட்டம் | 7.88 |
| 5. | சென்னை மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் | 255.32 |

| | | |
|---|---|---|
| 6. | தகவல் தொழில் நுட்பச் சாலையில் குடிநீர் மற்றும் கழிவு நீர் வசதிகளை ஏற்படுத்துதல் – சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் | 41.77 |
| 7. | சென்னை மாநகரின் இரயில்வே சந்திக் கடவுகளில் அமையவுள்ள இரயில்வே மேம்பாலம் மற்றும் சுரங்கப்பாதைகள் (6) | 44.41 |
| 8. | போரூர் பேரூராட்சியில் குடிநீர் வசதியை மேம்படுத்துதல் | 12.36 |
| 9. | மதுரை மாநகராட்சியில் வடிகால் வசதியை மேம்படுத்துதல் | 251.81 |
| 10. | ஆலந்தூர், பல்லவபுரம் மற்றும் தாம்பரம் நகராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை | 44.21 |
| 11. | ஈ.வே.ரா பெரியார் சாலையிலுள்ள புராதனச் சின்னங்களை மேம்படுத்துதல் | 6.10 |
| 12. | மதுரவாயல் மூன்றாம் நிலை நகராட்சி குடிநீர் வசதியை மேம்படுதுதல் | 23.30 |
| | **மொத்தம்** | **867.65** |

## 8.9 ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் பொருளாதார ஊக்குவிக்கும் திட்டத்தில் ஒரு அங்கமான பேருந்துகளை கொள்முதல் செய்தல்

### 8.9.1 ஒப்பளிப்பு

பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் மத்திய அரசு 20/21.02.2009 அன்று நடைபெற்ற தனது 69வது மத்திய ஒப்பளிப்பு மற்றும் கண்காணிப்பு கூட்டத்தில் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் நகரங்களில் உள்ள அரசு போக்குவரத்துக் கழகங்களில் உள்ள பேருந்துகளின் எண்ணிக்கையை மேம்படுத்த 1600 புதிய பேருந்துகள் வாங்க ஒப்பளித்தது. இதன் விவரம் கீழ் வருமாறு

| வ. எண். | நகரங்கள் | குளிர் சாதன பேருந்து–களின் எண்ணி–க்கை | ஒரு பேருந்தின் விலை (ரூபாய் இலட்சத்தில்) | தாழ் தள பேருந்து களின் எண்ணி–க்கை | ஒரு பேருந்தின் விலை (ரூபாய் இலட்சத்தில்) | மொத்த விலை (ரூபாய் கோடியில்) | முதலில் ஒப்பளிப்புத் தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | சென்னை | 100 | 70 | 900 | 19.49 | 245.41 | 295.92 |
| 2. | மதுரை | 0 | | 300 | 19.49 | 58.47 | 88.78 |
| 3. | கோயம்புத்தூர் | 0 | | 300 | 19.49 | 58.47 | 88.78 |
| | **மொத்தம்** | **100** | **70** | **1500** | | **362.35** | **473.48** |

இந்த 1600 பேருந்துகளில் 1500 தாழ்தள பேருந்துகளும் மற்றும் 100 குளிர் சாதன வசதி கொண்ட பேருந்துகளும் அடங்கும்.

### 8.9.2 நிதி விடுவிக்கப்பட்ட விவரங்கள்

மத்திய அரசு ரூ.**96.17** கோடியை தனது கடித எண்கள் F.No.59(2)/PF1/2008-551, F.No.59(2)/PF1/2008–**560** மற்றும் F.No.59(2)/PF1/2008-604, நாள் **27.2.2009, 06.03.2009** மற்றும் **26.03.2009** மூலம் விடுவித்தது. தமிழ்நாடு அரசு தனது அரசாணை எண்கள் **124, 133, 291** மற்றும் **292** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் முறையே **25.03.2009, 26.03.2009, 01.07.2009** மற்றும் **01.07.2009** மூலம் மத்திய அரசின் பங்கு மற்றும் அதற்கு ஈடான மானியம் ஆக மொத்தம் ரூ.**136.12** கோடிகளை விடுவித்தது.

**(ரூபாய் கோடியில்)**

| நகரங்கள் | பேருந்து–களின் எண்ணி–க்கை | மத்திய அரசின் பங்கு | மாநில அரசு விடுவித்த தொகை | | |
|---|---|---|---|---|---|
| | | | மத்திய அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு | மொத்தம் |
| சென்னை | 1000 | 51.59 | 51.59 | 22.19 | 73.98 |
| மதுரை | 300 | 22.19 | 22.19 | 8.88 | 31.07 |
| கோயம்புத்தூர் | 300 | 22.19 | 22.19 | 8.88 | 31.07 |
| **மொத்தம்** | **1600** | **95.97** | **95.97** | **39.95** | **136.12** |

ரூ.**136.12** கோடிகள் போக்குவரத்து துறைக்கு ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது மற்றும் இறுதி தவணைத் தொகைக்கான செயற்குறிப்பு சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூருக்கு ரூ. 48.20 கோடிக்கு 12.03.2010 அன்று மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. மத்திய அரசு 29.3.2010 அன்று நடைபெற்ற தனது ஒப்பளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டத்தில் சென்னைக்கு ரூ.34.10 கோடிக்கான இரண்டாவது தவணைக்கு ஒப்பளிப்பு வழங்கியது.

### 8.9.3 கொள்முதல் ஆணை

போக்குவரத்துத் துறை 10.07.2009 அன்று 1000 தாழ்தள பேருந்துகள் அசோக் லைலேண்டு குழுமத்திலிருந்தும் மற்றும் 500 தாழ்தள பேருந்துகள் டாடா குழுமத்திலிருந்தும் வழங்க ஆணை பிறப்பித்தது. 18.08.2009 அன்று 100 குளிர் சாதன வசதி கொண்ட பேருந்துகளுக்கு வால்வோ குழுமத்திற்கு கொள்முதல் ஆணை வழங்கப்பட்டது.

அசோக்லைலேண்டு குழுமம் 1000 பேருந்துகளையும், டாடா குழுமம் 500 பேருந்துகளுக்கு 402 பேருந்துகளையும் வழங்கியுள்ளது. வால்வோ குழுமம் 100 பேருந்துகளுக்கு 90 பேருந்துகளை வழங்கியுள்ளது. 31.03.2010 வரை 1492 பேருந்துகள் பெறப்பட்டுள்ளன. அனைத்து கொள்முதல்களும் விரைவில் நிறைவடையும்.

## 8.10 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம்

நகர்ப்புரக் கட்டமைப்பு மற்றும் ஆளுமையின் கீழ் வரும் 65 நகரங்களை தவிர மற்ற அனைத்து நகரங்களும் இந்தத் திட்டத்தின் கீழ் வர தகுதியுடைவை ஆகும். இத்திட்டத்தின் நிதி ஆதாரம் மத்திய அரசின் பங்கு 80%, மாநில அரசின் பங்கு 10% மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு 10% ஆகும்.

இத்திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்குதல், சாலைகள், வடிகால்கள், திடக்கழிவு மேலாண்மை, பாதாள சாக்கடை போன்ற கட்டமைப்பு வசதிகளுக்கு நிதியுதவி பெறலாம். மத்திய அரசு இத்திட்ட காலத்திற்காக (2005–2006 முதல் 2011–2012 வரை) ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 705.97 கோடியாகும். இது வரை ஒப்பளித்துள்ள திட்டங்களுக்கு மத்திய அரசின் பங்கீடு ரூ. 706.18 கோடியாகும்.

### 8.10.1 ஒப்பளிக்கப்பட்ட திட்ட மதிப்பீடு

**(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | வருடம் | திட்ட எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| | பத்தாவது திட்டம் | | |
| 1 | 2006 2007 | 97 | 539.17 |

| | | | |
|---|---|---|---|
| | **மொத்தம்** | **97** | **539.17** |
| | **பதினோராவது திட்டம்** | | |
| 1 | 2007–2008 | 23 | 308.37 |
| 2 | 2008–2009 | 3 | 35.18 |
| 3 | 2009–2010 | 0 | 0 |
| | **மொத்தம்** | **26** | **343.55** |
| | **பெரு மொத்தம்** | **123** | **882.72** |

**8.10.2 திட்ட காலத்திற்கான மத்திய அரசின் ஒதுக்கீடு ரூ.705.97 கோடி.**

**இலக்கும் சாதனையும் (செயல் முன்னேற்றம் மற்றும் நிதி முன்னேற்றம்)**

**8.10.3 <u>மத்திய அரசு நிதி வரவு</u>**

**(ரூபாய் கோடியில்)**

| **வ.எண்** | **வருடம்** | **வரவு செலவு திட்ட மதிப்பீடு** | **உள்ளபடி** |
|---|---|---|---|
| | **பத்தாவது திட்டம்** | | |
| 1 | 2006 2007 | 99.12 | 121.69 |
| | மொத்தம் | 99.12 | 121.69 |
| | **பதினோராவது திட்டம்** | | |
| 1 | 2007 2008 | 77.53 | 104.93 |

| | | | |
|---|---|---|---|
| 2 | 2008 2009 | 96.88 | 292.32 |
| 3 | 2009 2010 | | 19.35 |
| | மொத்தம் | 174.41 | 416.60 |
| | **பெரு மொத்தம்** | **273.53** | **538.29** |

## 8.10.4 நிதி வரவு தமிழ்நாடு அரசு (மத்திய அரசு பங்கு உட்பட)

**(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | வருடம் | வரவு செலவு திட்ட மதிப்பீடு | உள்ளபடி |
|---|---|---|---|
| | பத்தாவது திட்டம் | | |
| 1 | 2006 2007 | 125.00 | 173.15 |
| | **மொத்தம்** | **125.00** | **173.15** |
| | பதினோராவது திட்டம் | | |
| 1 | 2007 2008 | 140.00 | 69.48 |
| 2 | 2008 2009 | 140.00 | 341.04 |
| 3 | 2009 2010 | 23.23 | 21.90 |
| | மொத்தம் | 303.23 | 432.42 |
| | **பெரு மொத்தம்** | **428.23** | **605.57** |

**தமிழக அரசு விடுவித்த தொகை ரூ.67.28 கோடிகள்.**

**ஒப்பளிக்கப்பட்ட திட்டங்களின் பகுதிவாரியான விவரங்கள்**

| | |
|---|---|
| சாலை மற்றும் வடிகால் | 44 பணிகள் |
| குடிநீர் வழங்குதல் | 63 பணிகள் |
| பாதாளச் சாக்கடை | 15 பணிகள் |
| திடக்கழிவு மேலாண்மை | 1 பணி |
| மொத்தம் | 123 பணிகள். |

ஒப்பளிக்கப்பட்ட 123 திட்டங்களில் 77 திட்டங்கள் முடிவடைந்துள்ளன.

## 11.11 முடிவுற்ற திட்டங்களின் விவரங்கள்

### 8.11. 1 நகராட்சிகள்

(ரூபாய் லட்சத்தில்)

| வ. எண் | நகரம் | திட்டம் | திட்ட மதிப்பீடு | முடிவடைந்த காலம் |
|---|---|---|---|---|
| 1 | தூத்துக்குடி | சாலை மற்றும் வடிகால் | 328.00 | ஜுன் 2007 |
| 2 | கும்பகோணம் | சாலை மற்றும் வடிகால் | 550.00 | ஜுலை 2007 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | மைலாடுதுறை | சாலை மற்றும் வடிகால் | 194.00 | செப்டம்பர் 2007 |
| 4 | இனாம் கரூர் | சாலை மற்றும் வடிகால் | 164.00 | ஜூலை 2008 |
| 5 | சிவகாசி | சாலை மற்றும் வடிகால் | 372.00 | ஜூன் 2008 |
| 6 | ஈரோடு | சாலை மற்றும் வடிகால் | 250.00 | செப்டம்பர் 2008 |
| 7 | தேவக்கோட்டை | சாலை மற்றும் வடிகால் | 415.00 | அக்டோபர் 2008 |
| 8 | உதகமண்டலம் | சாலை மற்றும் வடிகால் | 1207.00 | ஜூன் 2009 |
| 9 | குன்னூர் | சாலை மற்றும் வடிகால் | 458.30 | மார்ச் 2009 |
| 10 | மணப்பாறை | சாலை மற்றும் வடிகால் | 220.00 | பிப்ரவரி 2009 |
| 11 | திண்டுக்கல் | சாலை மற்றும் வடிகால் | 343.00 | மே 2009 |
| 12 | வால்பாறை | குடிநீர் வழங்குதல் | 221.40 | நவம்பர் 2007 |
| 13 | திருப்பத்தூர் | குடிநீர் வழங்குதல் | 648.00 | பிப்ரவரி 2009 |
| 14 | தேவக்கோட்டை | குடிநீர் வழங்குதல் | 30.00 | அக்டோபர் 2009 |
| 15 | கரூர் | குடிநீர் வழங்குதல் | 110.38 | மார்ச் 2009 |

| | | | | |
|---|---|---|---|---|
| 16 | இராமநாதபுரம் | குடிநீர் வழங்குதல் | 4770.00 | ஜுன் 2009 |
| 17 | பரமக்குடி | குடிநீர் வழங்குதல் | 5824.30 | ஜுன 2009 |
| 18 | கீழக்கரை | குடிநீர் வழங்குதல் | 2015.50 | ஜுன் 2009 |
| 19 | சிவகங்கை | குடிநீர் வழங்குதல் | 3279.90 | ஜுன் 2009 |
| 20 | ராமேஸ்வரம் | குடிநீர் வழங்குதல் | 3376.50 | ஜுன் 2009 |
| 21 | அரக்கோணம் | குடிநீர் வழங்குதல் | 844.70 | பிப்ரவரி 2010 |
| 22 | திருத்தணி | குடிநீர் வழங்குதல் | 512.30 | பிப்ரவரி 2010 |
| | | மொத்தம் | 26134.28 | |

## 8.11.2 பேரூராட்சிகள்

(ரூபாய் லட்சத்தில்)

| வ. எண் | நகரம் | திட்டம் | திட்ட மதிப்பீடு | முடிவடைந்த காலம் |
|---|---|---|---|---|
| 23 | பூதப்பாண்டி | சாலை மற்றும் வடிகால் | 87.10 | மே 2007 |
| 24 | விளாவூர் | சாலை மற்றும் வடிகால் | 100.00 | செப்டம்பர் 2007 |

| | | | | |
|---|---|---|---|---|
| 25 | மேலகரம் | சாலை மற்றும் வடிகால் | 76.35 | மார்ச் 2008 |
| 26 | கள்ளிடை குறிச்சி | சாலை மற்றும் வடிகால் | 94.85 | பிப்ரவரி 2008 |
| 27 | வீரவநல்லூர் | சாலை மற்றும் வடிகால் | 50.65 | ஜனவரி 2008 |
| 28 | முக்கூடல் | சாலை மற்றும் வடிகால் | 55.15 | ஜுன் 2008 |
| 29 | சேரன் மாதேவி | சாலை மற்றும் வடிகால் | 129.70 | மார்ச் 2008 |
| 30 | உடன்குடி | சாலை மற்றும் வடிகால் | 53.60 | மார்ச் 2008 |
| 31 | முசிறி | சாலை மற்றும் வடிகால் | 200.00 | பிப்ரவரி 2008 |
| 32 | ஆரல்வாய் மொழி | சாலை மற்றும் வடிகால் | 94.45 | ஜுன் 2008 |
| 33 | அழகப் பாபுரம் | சாலை மற்றும் வடிகால் | 96.55 | பிப்ரவரி 2008 |
| 34 | கல்லுக் கூட்டம் | சாலை மற்றும் வடிகால் | 99.00 | அக்டோபர் 2007 |
| 35 | கோத நல்லூர் | சாலை மற்றும் வடிகால் | 100.00 | மார்ச் 2008 |

| | | | | |
|---|---|---|---|---|
| 36 | மணவாளக் குறிச்சி | சாலை மற்றும் வடிகால் | 94.20 | மார்ச் 2008 |
| 37 | மண்டைக்காடு | சாலை மற்றும் வடிகால் | 100.00 | மார்ச் 2009 |
| 38 | முளகுமோடு | சாலை மற்றும் வடிகால் | 100.00 | மார்ச் 2008 |
| 39 | மைலாடி | சாலை மற்றும் வடிகால் | 78.55 | மார்ச் 2008 |
| 40 | பொன்மனை | சாலை மற்றும் வடிகால் | 100.00 | மார்ச் 2008 |
| 41 | தேரூர் | சாலை மற்றும் வடிகால் | 123.50 | ஆகஸ்ட் 2008 |
| 42 | திங்கள்நகர் | சாலை மற்றும் வடிகால் | 144.00 | மார்ச் 2008 |
| 43 | திருவி தான்கோடு | சாலை மற்றும் வடிகால் | 152.60 | மார்ச் 2008 |
| 44 | வேர்கிளம்பி | சாலை மற்றும் வடிகால் | 100.00 | மார்ச் 2008 |
| 45 | வெள்ளிமலை | சாலை மற்றும் வடிகால் | 146.00 | மார்ச் 2009 |
| 46 | வடக்கு வளளியூர் | சாலை மற்றும் வடிகால் | 227.65 | செப்டம்பர் 2008 |

| | | | | |
|---|---|---|---|---|
| 47 | பனகுடி | சாலை மற்றும் வடிகால் | 214.60 | மார்ச் 2009 |
| 48 | களக்காடு | சாலை மற்றும் வடிகால் | 183.85 | அக்டோபர் 2008 |
| 49 | சம்பவார் வடகரை | சாலை மற்றும் வடிகால் | 131.02 | மார்ச் 2008 |
| 50 | சங்கர் நகர் | சாலை மற்றும் வடிகால் | 51.00 | ஜுன் 2008 |
| 51 | மைலாடி | குடிநீர் வழங்குதல் | 25.91 | மார்ச் 2008 |
| 52 | நல்லூர் | குடிநீர் வழங்குதல் | 62.69 | பிப்ரவரி 2010 |
| 53 | மருங்கூர் | குடிநீர் வழங்குதல் | 31.26 | மார்ச் 2008 |
| 54 | செம்பாக்கம் | குடிநீர் வழங்குதல் | 78.65 | மார்ச் 2008 |
| 55 | பூதிபுரம் | குடிநீர் வழங்குதல் | 61.18 | ஆகஸ்ட் 2009 |
| 56 | திமிரி | குடிநீர் வழங்குதல் | 101.00 | பிபரவரி 2009 |
| 57 | களிஞ்சூர் | குடிநீர் வழங்குதல் | 105.27 | மார்ச் 2009 |

| | | | | |
|---|---|---|---|---|
| 58 | முலக் கரைப்பட்டி | குடிநீர் வழங்குதல் | 226.00 | ஜனவரி 2010 |
| 59 | திருக்கழிக் குன்றம் | குடிநீர் வழங்குதல் | 105.00 | பிப்ரவரி 2010 |
| 60 | பொன்ன– மராவதி | குடிநீர் வழங்குதல் | 721.00 | செப்டம்பர் 2009 |
| 61 | காந்தி நகர் | குடிநீர் வழங்குதல் | 29.15 | ஜனவரி 2010 |
| 62 | முதுகுளத்தூர் | குடிநீர் வழங்குதல் | 1127.00 | ஜனவரி 2009 |
| 63 | மண்டபம் | குடிநீர் வழங்குதல் | 893.00 | ஜுன் 2008 |
| 64 | சாயல்குடி | குடிநீர் வழங்குதல் | 853.60 | ஜனவரி 2009 |
| 65 | தொண்டி | குடிநீர் வழங்குதல் | 930.00 | டிசம்பர் 2008 |
| 66 | ஆர்,எஸ். மங்களம் | குடிநீர் வழங்குதல் | 567.00 | டிசம்பர் 2008 |
| 67 | கமுதி | குடிநீர் வழங்குதல் | 801.00 | ஜனவரி 2009 |
| 68 | அபிராமம் | குடிநீர் வழங்குதல் | 339.00 | ஜனவரி 2009 |

| | | | | |
|---|---|---|---|---|
| 69 | திருப்பத்தூர் | குடிநீர் வழங்குதல் | 1447.00 | பிப்ரவரி 2009 |
| 70 | இளையான்குடி | குடிநீர் வழங்குதல் | 1121.00 | ஜனவரி 2010 |
| 71 | நெற்குப்பை | குடிநீர் வழங்குதல் | 314.00 | பிப்ரவரி 2009 |
| 72 | அம்முர் | குடிநீர் வழங்குதல் | 110.00 | ஜனவரி 2010 |
| 73 | தேவாரம் | குடிநீர் வழங்குதல் | 252.25 | ஜுன் 2009 |
| 74 | பண்ணைபுரம் | குடிநீர் வழங்குதல் | 155.37 | ஜுன் 2009 |
| 75 | கோம்பை | குடிநீர் வழங்குதல் | 223.00 | ஜுன் 2009 |
| 76 | சேவுகப்பட்டி | குடிநீர் வழங்குதல் | 141.84 | பிப்ரவரி 2010 |
| 77 | மணிமுத்தாறு | குடிநீர் வழங்குதல் | 130.84 | பிப்ரவரி 2010 |
| | | **மொத்தம்** | **14137.38** | |
| | | **பெரு மொத்தம்** | **40271.66** | |

## 8.12 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர நகரங்களுக்கான அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம் நடைபெறுகின்ற திட்டங்களின் விவரங்கள்

### 8.12.1 நகராட்சிகள்

(ரூபாய் லட்சத்தில்)

| வ.எ | நகரம் | திட்டம் | திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| 1 | கரூர் | சாலை மற்றும் வடிகால் | 830.00 |
| 2 | ராஜபாளையம் | சாலை மற்றும் வடிகால் | 913.00 |
| 3 | சங்கரன்கோயில் | சாலை மற்றும் வடிகால் | 293.30 |
| 4 | பெரம்பலூர் | சாலை மற்றும் வடிகால் | 188.00 |
| 5 | கோபிச் செட்டிபாளையம் | சாலை மற்றும் வடிகால் | 215.50 |
| 6 | தஞ்சாவூர் | குடிநீர் வழங்குதல் | 904.00 |
| 7 | ஈரோடு | குடிநீர் வழங்குதல் | 588.16 |
| 8 | நாமக்கல் | திடக் கழிவு மேலாண்மை | 358.25 |
| 9 | பல்லடம் | குடிநீர் வழங்குதல் | 891.23 |
| 10 | ஸ்ரீவில்லிப்புத்தூர் | குடிநீர் வழங்குதல் | 2949.19 |
| 11 | அறந்தாங்கி | குடிநீர் வழங்குதல் | 340.00 |
| 12 | விழுப்புரம் | குடிநீர் வழஙகுதல் | 955.00 |

| | | | |
|---|---|---|---|
| 13 | மறைமலை நகர் | பாதாளச் சாக்கடை | 375.00 |
| 14 | விக்ரமசிங்கபுரம் | குடிநீர் வழங்குதல் | 246.00 |
| 15 | நாமக்கல் | குடிநீர் வழங்குதல் | 990.50 |
| 16 | கூடலூர் | குடிநீர் வழங்குதல் | 525.00 |
| 17 | மறைமலை நகர் | குடிநீர் வழங்குதல் | 254.00 |
| 18 | அரியலூார் | பாதாளச் சாக்கடை | 2555.20 |
| 19 | வெள்ளகோயில் | குடிநீர் வழங்குதல் | 1203.73 |
| 20 | மேட்டூர் | குடிநீர் வழங்குதல் | 1247.19 |
| 21 | சிதம்பரம் | குடிநீர் வழங்குதல் | 615.00 |
| | | **மொத்தம்** | **17437.85** |

## 8.12.2 பேரூராட்சிகள்

**(ரூபாய் லட்சத்தில்)**

| வ. எண் | நகரம் | திட்டம் | திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| 22 | மாமல்லபுரம் | பாதாளச் சாக்கடை | 608.00 |
| 23 | பாளையம் | குடிநீர் வழங்குதல் | 159.18 |
| 24 | வேடச்சந்தூர் | குடிநீர் வழங்குதல் | 236.68 |
| 25 | ஒட்டன்சத்திரம் | குடிநீர் வழங்குதல் | 581.17 |

| | | | |
|---|---|---|---|
| 26 | திருச்செந்தூர் | பாதாளச் சாக்கடை | 1122.00 |
| | | மொத்தம் | 2707.03 |
| | | **பெரு மொத்தம்** | **20144.88** |

## 8.13 2010–2011நிதியாண்டில்முடிக்கஉத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள்

**(ரூபாய் லட்சத்தில்)**

| வ. எண் | நகரம் | திட்டம் | திட்ட மதிப்பீடு | முடிக்க உத்தேச காலம் |
|---|---|---|---|---|
| 1 | கரூர் | சாலை மற்றும் வடிகால் | 830.00 | ஜுன் 2010 |
| 2 | சங்கரன்கோயில் | சாலை மற்றும் வடிகால் | 293.30 | ஏப்ரல் 2010 |
| 3 | கோபிச்செட்டி பாளையம் | சாலை மற்றும் வடிகால் | 215.50 | மே 2010 |
| 4 | நாமக்கல் | திடக் கழிவு மேலாண்மை | 358.25 | ஏப்ரல் 2010 |
| 5 | அறந்தாங்கி | குடிநீர் வழங்குதல் | 340.00 | ஏப்ரல் 2010 |
| 6 | மறைமலை நகர் | பாதாளச் சாக்கடை | 375.00 | ஏப்ரல் 2010 |
| 7 | நாமக்கல் | குடிநீர் வழங்குதல் | 990.50 | ஏப்ரல் 2010 |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | கூடலூர் | குடிநீர் வழங்குதல் | 525.00 | மே 2010 |
| 9 | பெரம்பலூர் | சாலை மற்றும் வடிகால் | 188.00 | டிசம்பர்2010 |
| 10 | தஞ்சாவூர் | குடிநீர் வழங்குதல் | 904.00 | ஆகஸ்ட் 2010 |
| 11 | ஈரோடு | குடிநீர் வழங்குதல் | 588.16 | ஜூன் 2010 |
| 12 | ஸ்ரீவில்லிபுத்தூர் | குடிநீர் வழங்குதல் | 2949.19 | டிசம்பர் 2010 |
| 13 | விக்ரமசிங்கபுரம் | குடிநீர் வழங்குதல் | 246.00 | டிசம்பர் 2010 |
| 14 | மாமல்லபுரம் | பாதாளச் சாக்கடை | 608.00 | ஆகஸ்ட் 2010 |
| 15 | பாளையம் | குடிநீர் வழங்குதல் | 159.18 | அக்டோபர் 2010 |
| 16 | வேடசந்தூர் | குடிநீர் வழங்குதல் | 236.68 | அக்டோபர் 2010 |
| 17 | ஒட்டன்சத்திரம் | குடிநீர் வழங்குதல் | 581.17 | அக்டோபர் 2010 |



திடக்கழிவு மாற்றும் நிலையம், பீளமேடு – கோயம்புத்தூர்



கோயம்புத்தூர் மாநகராட்சி குடிநீர் சுத்திகரிப்பு நிலையப் பணிகள், வெள்ளியங்காடு



அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயிலைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள நடைபாதை, மதுரை



JnNURM திட்டத்தின்கீழ் வாங்கப்பட்டுள்ள பேருந்துகள்



மணப்பாறையில் அமைக்கப்பட்டுள்ள புதிய பாலம்



வைகை ஆற்றின் குறுக்கே புதிதாக கட்டப்பட்டுள்ள தடுப்பணை, மேலக்கால்

# 9. புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம்

தொழில் வளர்ச்சிக்கான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தமிழ்நாடு அரசு முயற்சி எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக திருப்பூர் மற்றும் சுற்றுப் பகுதியில் உள்ள பின்னலாடை நிறுவனங்களுக்கு நாளொன்றுக்கு 185 மில்லியன் லிட்டர் தண்ணீர் வழங்கும் முயற்சியாக தமிழ்நாடு அரசு, முன்னாள் திருப்பூர் நகராட்சி மற்றும் சிறப்பு நோக்கு நிறுவனமாக துவங்கப்பட்ட புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்துடன் பிப்ரவரி 2000 –ஆம் ஆண்டில் சலுகை ஒப்பந்தம் கையொழுத்திட்டது. இதன்மூலம் தொழிற்சாலைகளுக்குத் தேவையான தரமான தண்ணீர் வழங்கப்பட்டு வருவதால் திருப்பூர் தொழிற்சாலைகளின் தரம் உலகத் தரம் வாய்ந்ததாக உயர்ந்துள்ளது.

இம்மாதிரியான திட்டங்களைச் செயல்படுத்தும்பொழுது ஊரக மற்றும் நகர்ப்புர மக்களின் குடிநீர்த் தேவைகளை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசுத் திட்டத்தினை வரையறுக்க துணைபுரிந்து வருகிறது. இந்த குறிக்கோளினை மையமாகக் கொண்டு இத்திட்டத்தின் மூலம் திருப்பூர் மாநகராட்சியின் குடிநீர்த் தேவையும் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. மேலும் 15, ஊராட்சிகள் மற்றும் 5 வழியோர ஒன்றியங்களுக்குட்பட்ட சுமார் 600 நகர்ப்புர குடியிருப்புகள் இதன் மூலம் பயன் அடைந்து வருகின்றன.

இத்திட்டத்தின் நோக்கம் திருப்பூர் மாநகராட்சியின் பெரும்பகுதியில் பாதாள கழிவுநீர் அகற்றும் வசதிகளையும் உள்ளடக்கியதாகும். மேலும் நகரத்தில் உள்ள அடித்தள மக்களின் வசதிக்காக குறைந்த செலவில் கழிப்பறை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. பாதாள கழிவுநீர் அகற்றும் திட்டம் செயலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

குடிநீர் வழங்கும் பணி கடந்த நான்கு ஆண்டுகளாக சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய அம்சம், இத்திட்டத்தின் மொத்த நிதியான ரூபாய் 1023 கோடியில் பெரும்பகுதி தனியார் முதலீட்டு உதவியுடனும் மற்றும் தமிழ்நாடு அரசின் சமபங்கு தொகையான ரூபாய் 105 கோடி மூலமும் துவங்கப்பட்டது.

# 10. முடிவுரை

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயல்பாட்டில் கடந்த நான்கு ஆண்டுகளாக திருப்திகரமான பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளதை பின்னோக்கிப் பார்த்தால் காண இயலும். நகர்ப்பகுதியை புனரமைக்கும் பணி தொடர்பாக நிர்வாகத்தை குறிப்பிடத்தக்க வெற்றிச் சாதனையுடனும், முன்பென்றுமில்லாத உத்வேகத்துடனும் அயராது முன்னேற்றப் பாதையில் பீடு நடைபோடும் பயணம் ஆகும்.

பெரம்பூர் மேம்பாலத்தினை வெற்றிகரமாகக் கட்டிமுடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வந்தது, இந்த அரசின் அயராத விடாமுயற்சியை உறுதிப்படுத்துகின்றது. எத்தகைய இன்னல்கள் வந்தபோதிலும் இப்பணியை முடிக்க வேண்டும் என்கிற நிர்வாகத்தின் உறுதியான நிலைப்பாட்டினைக் காட்டுவதுடன், தொடர்ந்து வந்த இடர்ப்பாடுகளையெல்லாம் தகர்த்தெறிந்து நிர்வாகம் செயல்பட்ட விதம் அதன் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கி, வட சென்னை மக்களின் நெடுங்காலக் கனவை நனவாக்கியுள்ளது.

கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம், மீஞ்சூரில் முடிவடையும் நிலையில் உள்ளது. இது, விரைவில் செயல்படத் தொடங்கவுள்ளது. இப்பணியுடன், நெம்மேலி நிலையப் பணிகளும் சேர்ந்தால், சென்னை நகர மக்களுக்கு தட்டுப்பாடின்றி குடிநீர் கிடைப்பது முழுமையாக உறுதி

செய்யப்படும். தொழில்நுட்பத் திறனை ஊக்குவித்து அரசு திறம்பட செயலாற்றுவதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக விளங்கும்.

இயற்கைக் காட்சிகள் அமைந்த நீண்ட படியடுக்கு மேடைப்பகுதி, பசுமையான பூங்காக்கள், எங்கும் நிறைந்துள்ள ஒளி விளக்குகள் ஆகியவற்றுடன் மெரினா கடற்கரை நெடுகிலும் உருவாக்கப்பட்டுள்ள எழில்மிகு நடைபாதை அனைத்துத்தரப்புமக்களிடமிருந்தும்ஒருமித்தவரவேற்ப்பினைப் பெற்றதுடன், சென்னைக்கு சிறப்புச் சேர்க்கும் விதமாக விளங்குகிறது.

ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகரங்களில், மக்களின் பயணவசதிகளை மேம்படுத்தும் பொருட்டு நன்கு வடிவமைக்கப்பட்ட 1600 பேருந்துகளை அரசு அறிமுகப்படுத்தியிருப்பது, முன்பு எப்போதுமில்லாத வகையில் ஏழை எளிய மக்களும் வசதியுடன் அரசுப் பேருந்துகளில் பயணம் செய்ய வழி கோலியுள்ளது.

**11.06.2009** அன்று, இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தி தொடங்கி வைத்த பின்னர், தற்போது, 2010 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில், மற்றுமொரு முன்னோடித் திட்டமான ஒகேனக்கல் குடிநீர் வழங்கல் மற்றும் ஃப்ளோரைடு தடுப்புத் திட்டப் பணிகள்

தொடங்கப்பட்டுள்ளன. இப்பணிகள் உத்வேகத்துடன் விரைந்துச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பழனி, பொள்ளாச்சி, கொடைக்கானல், பூவிருந்தவல்லி போன்ற இடங்களில் பேருந்து நிலையங்கள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு, பொது மக்களின் பயன்பாட்டிலுள்ளன. ஒசூர், வந்தவாசி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள பேருந்து நிலையப் பணிகள் முடியும் நிலையில் உள்ளன. இவை விரைவில் பொது மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

உலக வங்கியின் நிதி உதவியுடன், தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்–III அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் நன்முறையில் செயல்படுத்தப்படுவதாக உலக வங்கி தனது நடுக்கால மதிப்பீட்டில் பாராட்டியுள்ளது. இதன் தொடர்ச்சியாக, இத்திட்டத்தினை மறுசீரமைப்பு செய்கையில் மாநிலத்திலுள்ள நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யவும் பரிந்துரைத்துள்ளது.

பொள்ளாச்சியில் கட்டப்பட்டுள்ள நகராட்சிப் பெண்கள் மேனிலைப்பள்ளி, இத்துறையின் வரலாற்றில், மிகவும் குறிப்பிடத்தக்க ஓர் சாதனை ஆகும். சலுகைகள் மறுக்கப்பட்ட பெண் குழந்தைகளின் தரமான கல்விக்கு வகை செய்திடும் பொருட்டு அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் முனைப்பான முயற்சிக்கு, இப்பள்ளி ஒரு சான்றாகத் திகழ்வதுடன், ஏனைய

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் ஓர் முன் மாதிரியாக விளங்குகிறது.

ஈரோடு, மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் மாதவரத்தில் நிறுவப்பட்டுள்ள எரிவாயுத் தகனமேடைகள், தலைசிறந்த பணிகளாகும். ஓசையின்றி சமூக மாற்றத்தின் முன்னோடிகளாகத் திகழும் இவை, மக்களின் அமோக வரவேற்பைப் பெற்றுள்ளன.

இரண்டாம் வைகைக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்தியது மற்றும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோச்சடை, மேலக்கால் மற்றும் மணலூர் ஆகிய இடங்களில் வைகை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள தடுப்பணைகள் ஆகியவை குறிப்பிடத்தக்க சாதனைகளாகும்.

இது தவிர, நகர்ப்புரப் பகுதிகளிலுள்ள ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டம் (BSUP), ஒருங்கிணைந்த வீட்டுவசதி மற்றும் குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (IHSDP) போன்ற குடிசைவாழ் மக்களின் நிலையுயர்த்தும் திட்டச் செயலாக்கத்தின் மூலம் பெற்றுள்ள வெற்றிகள் பாராட்டத் தக்கவையாகும். இத்திட்டங்களின் செயலாக்கத்தினால் திருச்செங்கோடு, சத்தியமங்கலம், பெரம்பலூர், வாணியம்பாடி போன்ற நகராட்சிகள், குன்றத்தூர், மோகனூர், மீஞ்சூர் போன்ற பேரூராட்சிகள் ஆகியவை பல்வேறு தரப்பினரின் பாராட்டினைப் பெற்றுள்ளன.

அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் உள்ள மண்சாலைகளைத் தார்ச்சாலைகளாகவும், சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாகவும் மாற்றும் அரசின் திட்டம் ஒரு மிகச் சிறந்த முயற்சியாகும். பல்வேறு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல் மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை செய்து தருதல் போன்ற விரிவானத் திட்டங்களும், அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டமும், வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த நான்காண்டுகளில், குறிப்பிடத்தக்க வெற்றிச் சாதனைகளைப் புரிந்திருக்கும் இத்தருணத்தில், அடுத்துவரவிருக்கும் சவால்களை எதிர்நோக்கவும் தயார் நிலையில் அரசு உள்ளது. நகர்ப்புரப்பகுதிப் புனரமைப்பு, வறுமை ஒழிப்பு ஆகியவை அரசின் கொள்கைகளாகும். இவற்றைத் தொடர்ந்து செயல்படுத்திட நமது எழுச்சிமிகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு, நகர்ப்புரப் பகுதிகளில் வசிக்கும் அனைத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்த அயராது பாடுபடும்.

**மு.க. ஸ்டாலின்**
**துணை முதலமைச்சர்**

# கோரிக்கை.34

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## 2010-2011-ல் செலவிற்கு வேண்டியுள்ள தொகை பற்றிய மதிப்பீடு

### 2010-2011 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

| | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| மானியக் கோரிக்கை அனுமதித்தது | 3,502,53,25 | 1,422,75,17 | 328,15,41 | 5,253,43,83 |
| மொத்த தொகை சாட்டியது | | | | |

### நிகர செலவு ரூபாய் ஆயிரத்தில்

| கணக்குத் தலைப்பு | | 2008–2009 கணக்குகள் | 2009–2010 வரவு –செலவு. திட்ட மதிப்பீடு | 2009–2010 திருத்திய மதிப்பீடு | 2010–2011 வரவு– செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 2215 | குடிநீர் வழங்கலும் துப்புரவும் | 210,33,67 | 164,70,89 | 174,81,06 | 277,23,10 |
| 2217 | நகர்ப் பகுதி வளர்ச்சி | 1,142,16,53 | 763,08,51 | 1,048,83,24 | 1,172,52,56 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2251 | தலைமைச் செயலகம் – சமூகப் பணிகள் | 4,29,67 | 5,05,78 | 4,24,43 | 5,00,69 |
| 2515 | ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் பொதுவான பொருளாதாரப் பணிகள் | 18,25,05 | 4,41,45 | 4,44,65 | 8,60,43 |
| 2551 | மலைப் பகுதிகள் | .. | .. | 33,00 | ... |
| 3475 | ஏனைய பொதுவான பொருளாதாரப் பணிகள் | 13,84,40 | 18,86,66 | 19,21,18 | 22,58,33 |
| 3604 | உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 1,504,33,27 | 1,809,98,42 | 1,504,21,34 | 2,016,58,15 |
| 4215 | குடிநீர் வழங்கல், துப்புரவு குறித்த மூலதனச் செலவு | 602,78,69 | 1,007,00,12 | 950,00,10 | 1,178,00,08 |
| 4217 | நகர்ப் பகுதி வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 148,40,10 | 160,0003 | 57,03,02 | 172,75,03 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4515 | ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | 29,43,63 | 25,00,06 | 26,20,05 | 72,00,05 |
| 5054 | சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 16,96,07 | 1 | 1 | 1 |
| 6215 | குடிநீர் வழங்கல் துப்புரவுக்கான கடன்கள் | 63,83,64 | 45,34,09 | 53,54,07 | 107,55,41 |
| 6217 | நகர்ப்பகுதி வளர்ச்சிக்கான கடன்கள் | 196,60,00 | 220,00,00 | 120,00,01 | 220,00,00 |
| 7615 | பல்வகைக் கடன்கள்2 | 40,00 | 40,00 | 40,00 | 60,00 |